152

# அருங்கலைத் தமிழ்
# இலக்கியக் கோவை

நான்காம் படிவம் : சிறப்புப் பகுதி

18 JAN 1953

தொகுப்பாசிரியர் :

கவியரசு R. வேங்கடாசலம் பிள்ளை
முன்னாள் தலைவர்
புலவர் கல்லூரி, கரந்தை, தஞ்சை.

இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்

மதுரை :: :: சென்னை

1952 [விலை ரூ. 0-12-0

TB
031(9)
N52
86826

# அருங்கலைத்

# தமிழ் இலக்கியக் கோவை

---

## நான்காம் படிவம் : சிறப்புப் பகுதி

CE OF THE REGISTRAR OF BOOKS
18 JAN 1953
MADRAS

தொகுப்பாசிரியர் :

கவியரசு R. வேங்கடாசலம் பிள்ளை

முன்னாள் தலைவர்

புலவர் கல்லூரி, கரந்தை, தஞ்சை.

இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்

மதுரை :: :: சென்னை

பதிப்புரிமை ] 1952 [ விலை ரூ. 0-12-0

முதற் பதிப்பு — 1952

TB
031 (9)
N52

## முன்னுரை

"அருங்கலைத் தமிழ் இலக்கியக் கோவை" என்னும் பெயருடன் வெளிவரும் இந் நூல் **நான்காம் படிவம்–சிறப்புப்பகுதிக்கு** உரியது. கல்வித் துறையினர் புதிதாக வெளியிட்டுள்ள பாடத் திட்டத்தின்படி இச் சிறப்புப்பகுதி அமைக்கப்பட்டுள்ளது.

இதன்கண் செய்யுட் பகுதியில் இருநூறு வரிகள் இருத்தல் வேண்டு மென்பது பாடத்திட்டத்தின் விதி. இந்நூலில் அதற்கு மேலும் சிறிதளவு செய்யுட் பகுதி சேர்க்கப்பட்டுள்ளது. அங்ஙனமே உரைநடைப் பகுதியிலும் சில பாடங்கள் மிகுதியாகத் தரப்பட்டுள்ளன.

செய்யுட் பகுதியிலும் உரைநடைப் பகுதியிலும் உள்ள ஒவ்வொரு பாடத்தின் ஈற்றிலும் அருஞ்சொற் பொருளும், கேள்விகளும் பயிற்சியும் தரப்பட்டுள்ளன. ஆசிரியர் பாடங்களை நடத்துதற்கு முன்னரே மாணவர் அப் பாடங்களில் ஓரளவு சுய முயற்சியால் அறிவு பெறுதற்கு இவை உறுதுணையாக இருக்கும்.

இதன்கண் சேர்க்கப்பட்டுள்ள சில செய்யுட் பகுதிகளுக்கும் உரைநடைப் பகுதிகளுக்கும் தத்தம் இசைவினை அளித்து உதவிய அறிஞர் அனைவர்க்கும் எனது நன்றி உரியது. தமிழ்ப் புலவர் உலகம் இந்நூலினை ஆதரிக்குமாறு வேண்டுகின்றேன்.

புலவர் கல்லூரி,
கரந்தை, தஞ்சை. } கவியரசு, **R.** வேங்கடாசலம் பிள்ளை.

எக்ஸெல்ஸியர் பவர் பிரஸ், மதுரை:—52

# பொருளடக்கம்

## செய்யுட் பகுதி


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| I. | வாழ்த்து | |
| | திருவருட்பா ... ... | 1 |
| II. | அறவுரை | |
| 1. | ஏலாதி ... ... | 2 |
| 2. | நாலடியார் ... ... | 3 |
| 3. | திருமந்திரம் ... ... | 5 |
| 4. | திருக்குறள் ... ... | 6 |
| III. | கதை | |
| 1. | திரௌபதி மாலையீடு ... ... | 10 |
| 2. | சீறாப்புராணம் ... ... | 14 |
| IV. | சிறு நூல்கள் | |
| 1. | மீனாட்சியம்மை குறம் ... ... | 17 |
| 2. | மீனாட்சியம்மை இரட்டைமணி மாலை ... | 18 |
| 3. | திருவேங்கடமாலை ... ... | 18 |
| 4. | சீரங்கநாயகர் ஊசல் ... ... | 19 |
| 5. | தமிழ்விடு தூது ... ... | 20 |


## உரைநடைப் பகுதி


1. பரஞ்சோதியார் ... ... 22
டாக்டர் மா. இராசமாணிக்கம் அவர்கள்,
M. A., L. T., M.O.L., Ph. D.

2. கடற்செலவு ... ... 28
திரு. த. வே. உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள்,
B. A., B. L.

3. கலிங்கப் போர் ... ... 33
வித்துவான் து. கண்ணம்மாள் அவர்கள்.

| எண் | பொருள் | | | பக்கம் |
|---|---|---|---|---|
| 4. | மாமல்லபுரம் | ... | ... | 39 |
| | டாக்டர் மா. இராசமாணிக்கம் அவர்கள், M. A., L. T., M. O. L., Ph. D. | | | |
| 5. | பகை தணித்த பாவலர் | ... | ... | 45 |
| | வித்துவான் அன்பு கணபதி அவர்கள் | | | |
| 6. | பாரி மகளிர் | ... | ... | 51 |
| | வித்துவான் G. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள், M. A., B. L. | | | |
| 7. | மலைவாசம் | ... | ... | 57 |
| | திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள் | | | |
| 8. | பெண்கள் பந்தாட்டம் | ... | ... | 64 |
| | டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார் அவர்கள், M. A., Ph. D. | | | |
| 9. | எனது ஊர் | ... | ... | 71 |
| | வித்துவான் பண்டித கா. பொ. இரத்தினம் அவர்கள், M. A., B. O. L. | | | |

# அருங்கலைத்
# தமிழ் இலக்கியக் கோவை

## நான்காம் படிவம்: சிறப்புப் பகுதி

### I. வாழ்த்து

### திருவருட்பா

திருவருட்பாவினை இயற்றியவர் இராமலிங்கசுவாமிகள் என்பவர். இவர் சிதம்பரத்தை அடுத்துள்ள மருதூர் என்னும் ஊரினர். இவர் 1823-இல் பிறந்து 1872-இல் மறைந்தார்.

இன்பப் பெருக்கே! அருட்கடலே!
இறையே! அழியா இரும்பொருளே!
அன்பர்க் கருளும் பெருங்கருணை
அரசே! உணர்வால் ஆம்பயனே!
வன்பர்க் கரிதாம் பரஞ்சோதி
வடிவே! வடிவேல் மணியே! என்
துன்பத் திடரைப் பொடியாக்கிச்
சுகந்தந் தருளத் துணியாயே.

அருஞ்சொற்பொருள்

இறையே - தலைவனே. இரும்பொருள் - பெரிய பொருள். வன்பர் - வலியர். பரஞ்சோதி - மேலான ஒளி. வடிவேல் - கூரிய வேல். திடர் - திட்டு. பொடி - தூள்.

#### கேள்விகள்

1. இராமலிங்க அடிகள் இறைவனை எவ்வெவ்வாறு சிறப்பித்துள்ளார்?
2. இராமலிங்க அடிகள் இறைவனை வேண்டுவது யாது?

#### பயிற்சி

1. இராமலிங்க சுவாமிகளைப் பற்றிச் சிறு குறிப்பு வரைக.
2. இறைவன் தன்மையை விளக்குக.

## II. அறவுரை

## 1. ஏலாதி

இது பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. ஏலம், இலவங்கம், சுக்கு, மிளகு, திப்பிலி முதலியன உடலுக்கு நலம் பயத்தல்போல இந்நூற்செய்யுட்களில் உள்ள செய்திகள் வாழ்க்கை நலத்துக்குரியவாதல்பற்றி, இந்நூல் ஏலாதி எனப் பெயர் பெற்றது. இதன் ஆசிரியர் — கணிமேதையார்; காலம் கி. பி. 6 அல்லது 7-ஆம் நூற்றாண்டு என்னலாம். இந்நூல் 80 செய்யுட்களை உடையது.

### நல்லனவே செய்க

இளமை கழியும்; பிணிமூப்(பு) இயையும்;
வளமை வலி இவை வாடும்;—உள நாளால்
பாடே புரியாது பால்போலும் சொல்லினய்!
வீடே புரிதல் விதி. 1

### எமனை ஒழிக்க வழி

வாளஞ்சான் வன்கண்மை அஞ்சான் வனப்பஞ்சான்
ஆளஞ்சான் ஆய்பொருள் தான் அஞ்சான்—நாள்எஞ்சாக்
காலன் வரவொழிதல் காணின்வீ டெய்திய
பாலின்நூல் எய்தப் படும். 2

### அன்பர்க்குரிய ஆறு குணங்கள்

சாதல் பொருள்கொடுத்தல் இன்சொல் புணர்வுவத்தல்
நோதல் பிரிவில் கவறலே—ஓதலின்
அன்புடையார்க் குள்ளன ஆறு குணமாக
மென்புடையார் வைத்தார் விரித்து. 3

### உத்தமன்

களியான்கள் உண்ணன் களிப்பாரைக் காணன்
ஒளியான் விருந்திற் குலையான்—எளியாரை
எள்ளான்ஈத் துண்பானேல் ஏதமில் மண்ஆண்டு
கொள்வான் குடிவாழ்வான் கூர்ந்து. 4

### மறுமைப்பேறு பெறத்தகுந்தவர்

**தாய்இழந்த பிள்ளை தலையிழந்த பெண்டாட்டி**
**வாய்இழந்த வாழ்வினார் வாணிகம்—போய்இழந்தார்**
**கைத்தூண் பொருள்இழந்தார் கண்ணி லவர்க்கீந்தார்**
**வைத்து வழங்கிவாழ் வார்.** 5

#### அருஞ்சொற்பொருள்

1. கழியும்-நிலைபெறாமல் ஒழியும். இயையும்-வந்து சேரும். வளமை-செல்வம். பாடு - துன்பம். விதி - முறை. பால்போலும் சொல்லினாய் - மகடூஉ முன்னிலை.

2. வன்கண்மை - கண்ணோட்டமின்மை. வனப்பு - ஆண்மைத் தோற்றம். காலன்-இயமன். எஞ்சா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.

3. கவறல் - உள்ளம் கலங்குதல். அன்புடையார்க்கு - வினையாலணையும் பெயர்.

4. களியான் - செருக்கடையான். உலையான் - ஒழுக்கத்தில் தவறாதவன். எள்ளான் - இகழான். ஏதம் - குற்றம். உண்ணான் - எதிர்மறை ஆண்பால் வினைமுற்று.

5. தலை இழந்த - தலைவனை இழந்த. கைத்து ஊண் பொருள் - உணவுக்கு ஆதாரமான செல்வப் பொருள். இழந்த - பெயரெச்சம்.

#### கேள்விகள்

1. நல்லனவே செய்தல் வேண்டும் - ஏன்?

2. 'வாளஞ்சான்' என்று தொடங்கும் செய்யுளின் கருத்து யாது?

3. அன்புடையார்க்கு இருக்க வேண்டும் ஆறு குணங்கள் யாவை?

4. எவன் மண்ஆண்டு குடிவாழ்வான்?

5. மறுமைப்பேறு பெறத்தகுந்தவர் யாவர்?

## 2. நாலடியார்

சிறந்த நீதிகளை எடுத்துக்கூறும் நான்கடிப்பா 'நாலடியார்' என உயர்த்திக் கூறப்பட்டது. நாலடியார் என்னும் நூல் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. இது 400 செய்யுட்களை உடையது. இப் பாக்கள் சமண முனிவராற் பாடப்பட்டன என்பது வரலாறு. இந் நூலின் காலம் ஏறத்தாழக் கி. பி. 6-ஆம் நூற்றாண்டு என்னலாம்.

## கல்வி

கல்வி கரையில; கற்பவர் நாள்சில;
மெல்ல நினைப்பின் பிணிபல;—தெள்ளிதின்
ஆராய்ந்(து) அமைவுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குருகின் தெரிந்து. 1

வைப்புழிக் கோட்படா; வாய்த்தீயின் கேடில்லை;
மிக்க சிறப்பின் அரசர் செறின்வவ்வார்;
எச்சம் எனஒருவன் மக்கட்குச் செய்வன
விச்சைமற் றல்ல பிற. 2

இம்மை பயக்குமால்; ஈயக் குறைவின்றால்;
தம்மை விளக்குமால்; தாமுளராக் கேடின்றால்;
எம்மை உலகத்தும் யாம்காணேம் கல்விபோல்
மம்மர் அறுக்கும் மருந்து. 3

## நட்பு

யானை அனையவர் நண்பொரீஇ, நாயனையார்
கேண்மை தழீஇக் கொளல்வேண்டும்;—யானை
அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும்; எறிந்தவேல்
மெய்யதா வால்குழைக்கும் நாய். 4

பெரியவர் கேண்மை பிறைபோல நாளும்
வரிசை வரிசையா நந்தும்;—வரிசையால்
வானூர் மதியம்போல் வைகலும் தேயுமே
தானே சிறியார் தொடர்பு. 5

### அருஞ்சொற்பொருள்

1. பிணி - நோய். குருகு - அன்னம்.

2. கோட்படா - கொள்ளப்படா. செறின் - கோபித்தால். வவ்வார் - கவர்ந்துகொள்ளார். எச்சம் - தமக்குப்பின் எஞ்சிநிற்கும் பொருள்.

3. மம்மர் - அறியாமையாகிய மயக்கம். மம்மர் அறுக்கும் மருந்து - கல்வி.

4. நண்பு - நட்பு. ஒரீஇ - நீக்கி; கெழீஇ - தழுவி; சொல்லிசை அளபெடைகள்.

5. பிறை - பிறைச்சந்திரன். நந்தும் - வளரும். வைகலும் - நாள்தோறும்.

### கேள்விகள்

1. எங்ஙனம் கற்பது சிறந்தது ?
2. ஒருவன் மக்கட்குச் சேர்த்துவைக்கும் பொருள் யாது ?
3. கல்வியின் சிறப்பு யாது ?
4. எத்தகையோரின் நட்பை ஏற்கவேண்டும் ?
5. பெரியவர் நட்பும் சிறியவர் நேயமும் எவைபோன்றவை ?

## 3. திருமந்திரம்

திருமந்திரம் என்பது மூவாயிரம் செய்யுட்களையுடைய நூல். இது சைவத்திருமுறைகளில் பத்தாம் திருமுறையாகும். இதனைச் செய்தவர் திருமூலர் என்பவர். இவர் காலம் ஏறத்தாழக் கி. பி. 400-600 என்னலாம்.

### அன்புடைமை

அன்பு சிவமிரண் டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே. 1

### உடம்பின் தேவை

உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோயில்கொண் டானென்(று)
உடம்பினை யானிருந் தோம்புகின் றேனே. 2

### அறிவுரை

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணுமே
சென்றே புகுங்கதி இல்லைநும் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந் துய்ம்மினே. 3

### கல்வி

நில்லா நிலைமை நிலையாய நெஞ்சத்து
நில்லாக் குரம்பை நிலையென் றுணர்வீர்காள்
எல்லா உயிர்க்கும் இறைவனே ஆயினும்
கல்லாதார் நெஞ்சத்துக் காணவொண் ணாதே. 4

### வாய்மை

செய்தான் அறியும் செழுங்கடல் வட்டத்துப்
பொய்தான் மிகவும் புலம்பும் மனிதர்கள்
மெய்தான் உரைக்கில் விண்ணோர் தொழச்செய்வன்
மைதாழ்ந் திலங்கு மிடறுடை யோனே. 5

#### அருஞ்சொற்பொருள்

1. ஆரும் - யாரும்.

2. இழுக்கு - குற்றம். உறுபொருள் - பொருந்திய பொருள்; கடவுள். உறுபொருள் - வினைத்தொகை. ஓம்புதல் - பாதுகாத்தல்.

3. வினைமின் - முன்னிலைப் பன்மை வினைமுற்று. நமன் - யமன். உய்ம்மின் - பிழைப்பீர்.

4. நிலையா - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். குரம்பை - உடல். கல்லாதார் - எதிர்மறை வினையாலணையும் பெயர்.

5. மை - கருமை. மிடறு - கழுத்து. மைதாழ்......மிடறுடை யோன் - நீலகண்டனான சிவபெருமான்.

#### கேள்விகள்

1. அன்பிற்கும் சிவத்திற்கும் உள்ள தொடர்பு யாது?
2. உடம்பை ஏன் பாதுகாத்தல் வேண்டும்?
3. குலத்தைப் பற்றியும் கடவுளைப்பற்றியும் திருமூலர் யாது கூறுகிறார்?
4. இறைவனை எவர் நெஞ்சத்துட் காணுதல் அருமை?
5. மெய் உரைப்பதால் உளதாகும் நன்மை யாது?

## 4. திருக்குறள்

### (1) புறங்கூறாமை

அறங்கூறான் அல்ல செயினும் ஒருவன் 1
புறங்கூறான் என்றல் இனிது.

அறனழீஇ அல்லவை செய்தலின் தீதே 2
புறனழீஇப் பொய்த்து நகை.

புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாதல் 3
அறங்கூறும் ஆக்கம் தரும்.

கண்ணின்று கண்ணறச் சொல்லினும் சொல்லற்க
முன்னின்று பின்னோக்காச் சொல். 4

அறஞ்சொல்லும் நெஞ்சத்தான் அன்மை புறஞ்
புன்மையாற் காணப் படும். [சொல்லும் 5

பிறன்பழி கூறுவான் தன்பழி யுள்ளும்
திறன்தெரிந்து கூறப் படும். 6

பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி
நட்பாடல் தேற்றா தவர். 7

துன்னியார் குற்றமும் தூற்றும் மரபினார்
என்னைகொல் ஏதிலார் மாட்டு. 8

அறனோக்கி யாற்றுங்கொல் வையம் புறனோக்கிப்
புன்சொல் உரைப்பான் பொறை. 9

ஏதிலார் குற்றம்போல் தங்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு. 10

## (2) பயனில சொல்லாமை

பல்லார் முனியப் பயனில சொல்லுவான்
எல்லாரும் எள்ளப் படும். 1

பயனில பல்லார்முன் சொல்லல் நயனில
நட்டார்கட் செய்தலின் தீது. 2

நயனிலன் என்பது சொல்லும் பயனில
பாரித் துரைக்கும் உரை. 3

நயன்சாரா நன்மையின் நீக்கும் பயன்சாராப்
பண்பிற்சொல் பல்லார் அகத்து. 4

சீர்மை சிறப்பொடு நீங்கும் பயனில
நீர்மை உடையார் சொலின். 5

பயனில்சொற் பாராட்டு வானை மகனெனல்
மக்கட் பதடி எனல். 6

நயனில சொல்லினும் சொல்லுக சான்றோர்
பயனில சொல்லாமை நன்று. 7

அரும்பயன் ஆயும் அறிவினார் சொல்லார்
பெரும்பயன் இல்லாத சொல். 8

பொருள்தீர்ந்த பொச்சாந்தும் சொல்லார் மருள்தீர்ந்த
மாசறு காட்சி யவர். 9

சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல். 10

## அருஞ்சொற்பொருள்

I. 1. அறத்தின் நன்மை இக்குறளால் தெளிவுறும்.

2. புறனழீஇ - ஒருவனைக் காணுதபோது இகழ்ந்து சொல்லுதல். அழீஇ - சொல்லிசை அளபெடை.

3. அறங்கூறும் - அறநூல்கள் சொல்லும்.

4. பின் நோக்கா - பின்வரும் குற்றத்தை நோக்காத (சொல்லை). இரண்டு முதல் நான்கு குறட்பாக்கள்வரை புறங்கூற்றினது கொடுமை கூறப்பட்டது.

5. புன்மை - அற்பச்செயல்.

6. திறன் தெரிந்து - வருத்தும் திறமுடையவற்றைத் தெரிந்து.

7. பக - நீங்கும்படி. கேளிர் - சுற்றத்தார். தேற்ருதவர் - அறியாதவர்.

8. துன்னியார் - நெருங்கியவர் ; வினையாலணையும் பெயர். ஏதிலார் - அயலார்.

9. பொறை - உடற்பாரம். வையம் - உலகத்தார், இடவாகு பெயர். இவை ஐந்து பாட்டானும் புறங்கூறுவார்க்கு உண்டாகும் குற்றம் கூறப்பட்டது.

10. இப் பாடலால் புறங்கூருமைக்கோர் வழி கூறப்பட்டது.

II. 1. முனிய - வெறுப்ப. எல்லாரும் - எல்லாராலும். எள்ளப்படும் - இகழப்படுவான்.

2. நயனில விருப்பமற்ற செயல்கள். நட்டார் - சிநேகித்தவர். நள் - பகுதி.

3. பாரித்து - விரித்து. நயன் - நீதி.

5. நீர்மை - தன்மை. சீர்மை - விழுப்பம்.

6. (மகன்) எனல்-(மகன்) என்று சொல்லற்க. (பதடி) எனல்-(பதடி) என்று சொல்லுக. இவை ஆறு பாட்டானும் பயனில்லாத சொற்களைச் சொல்லுதலின் குற்றம் கூறப்பட்டது.

7. சான்ருேர் - கல்வி, கேள்வி, ஒழுக்கங்களால் மிக்கவர்.

8. அரும்பயன் - அரிய பயன்கள்.

9. பொருள் தீர்ந்த - பயனில்லாத சொற்களை. பொச்சாந்தும் - மறந்தும். இவை மூன்று பாட்டானும் பயனில சொல்லாமையின் நன்மை கூறப்பட்டது.

10. சொல்லப்படுவனவும் படாதனவும் இதனுல் கூறப்பட்டன.

## கேள்விகள்

1. 'புறங்கூறுமை' என்ற அதிகாரத்தின் முழுப்பொருளைச் சுருக்கி வரைக.

2. 'அறங்கூறும் ஆக்கம் தரும்'. - எது? எப்போது?

3. புறங்கூறுவார்க்கு உண்டாகும் குற்றங்கள் யாவை?

4. புறங்கூறுதிருக்க வள்ளுவர் காட்டும் வழி யாது?

5. பயனில சொல்லுதலால் உண்டாகும் குற்றங்கள் யாவை?

6. பயனில சொல்லாமையால் ஏற்படும் நன்மைகள் யாவை?

7. எவற்றைச் சொல்லவேண்டும் என்று வள்ளுவர் கூறுகின்றார்?

8. 'பயனில சொல்லாமை' என்பது பற்றிச் சில வரிகள் எழுதுக.

## பயிற்சி

1. சிறுகுறிப்பு வரைக: ஏலாதி, நாலடியார், திருமந்திரம், திருக்குறள், புறங்கூறுமை, பயனில சொல்லாமை.

2. அன்பர்க்குரிய ஆறு குணங்களை எழுதி அவற்றின் இன்றியமையாமையைக் குறித்து எழுதுக.

3. 'அறங்கூறும் ஆக்கம் தரும்' என்பதை விளக்கி வரைக.

4. 'புறங்கூறுமை' என்ற தலைப்பில் உள்ள குறட்பாக்களின் திரண்ட கருத்தை எழுதுக.

5. 'நட்பு' என்பது பற்றி நாலடியார் கூறும் கருத்துக்களை வரைக.

6. ஏலாதிச் செய்யுட்கள் ஐந்தின் கருத்துக்களை உங்கள் சொந்த நடையில் எழுதுக.

7. நாலடியார்ச் செய்யுட்கள் ஐந்தன் கருத்துக்களை உங்கள் சொந்த மொழிகளில் அமைத்து வரைக.

8. திருமந்திரச் செய்யுட்களின் கருத்துக்களை எடுத்து எழுதுக.

---

## III. கதை

## 1. திரௌபதி மாலையீடு

வில்லிபுத்தூராழ்வார் என்பவரால் இயற்றப்பட்டதே வில்லி பாரதம். வரபதியாட்கொண்டான் என்ற சிற்றரசன் வேண்டு கோட்கிணங்கி ஆசிரியர் வடமொழி வியாசபாரதத்தினின்று மொழி பெயர்த்து இந்நூலை அமைத்தார். திரௌபதி அருச்சுனனுக்கு மாலையிட்டு மணந்த வரலாற்றைக் கூறுவது 'திரௌபதி மாலை யீடு' என்பதாகும். ஆசிரியர் காலம் கி. பி. 15-ஆம் நூற்றாண்டு.

### சுயம்வர நாளில் மன்னர்கள்

தான்வரித் தவற்கே யெய்த
வுரியளென் தனையை யென்று
கான்வரிச் சுரும்புண் மாலைக்
காவலர்க் கோலை போக்க
மான்வரிக் கண்ணிக் கேற்ற
வதுவைநாண் மலர்ப்பூ வொன்றைத்
தேன்வரித் தென்ன வந்து
திரண்டது குமரர் சேனை. 1

[பாண்டவர் சுயம்வரச்செய்தி அறிந்தனர். அவர்கள் புறப் பட்டுச் செல்லும் வழியில்]

### காலைக் காட்சி

புலர்ந்தன கங்குற் போதும்
பொழிதரு பனியுஞ் சேர
மலர்ந்தன மனமுங் கண்ணும்
வயங்கின திசையும் பாரும்
அலர்ந்தன தடமும் காவும்
ஆர்த்தன புள்ளு மாவுங்
கலந்தன குருகும் பேடுங்
கலித்தன முரசுஞ் சங்கும். 2

### நன்னிமித்தங்கள்

வண்டுறை மருங்கி னங்கோர்
மாங்கனி வீழ்தல் கண்டே
தண்டுறை மீன்க ளெல்லாந்
தத்தமக் கிரையென் றெய்த
விண்டுறை கிழிய வோடி
வென்றொரு வாளை தன்வாய்க்
கொண்டுறை வலிமை நோக்கிக்
குறிப்பினு லுவகை கொண்டார். 3

'மாக்குர லளக வல்லி
வதுவைமி னழகு காணத்
தாக்குர லடிகொள் யானைத்
தரணிப ரெவரும் வந்தார்:
வீக்குநன் மிளிர்பொற் பூணிர்!
விரைவுடன் வம்மின்' என்று
கூக்குரல் விளிப்ப போலும்
கோகிலக் குரலுங் கேட்டார். 4

### திரௌபதியின் துணிவு

'ஆண்டெரிப் பிறந்த போதே
அன்பினுல் எந்தை நேர்ந்த
பூண்டெரி மார்பன் இன்றிப்
பொன்னவை பொலியத் தோன்றி
ஈண்டெரி முன்னர் மன்னர்
இழிவுற வேட்டி லானேல்,
மீண்டெரி புகுவன்' என்னும்
எண்ணமே விளையு நீராள். 5

[திரௌபதியைச் செவிலியர் நன்கு அலங்கரித்துச் சுயம்வர மண்டபம் அழைத்தேகினர்; அவணிருந்த மன்னவரின் மாண்புகளை முறைப்படி எடுத்துக் கூறினர்; கன்னனைப் பற்றியும் கூறினர்.]

### கன்னன் சிறப்பு

"பெண்மைக் கிரதி யெனவந்த
பெண்ணு ரமுதே! பேருலகில்

உண்மைக் கிவனே வலிக்கிவனே
உறவுக் கிவனே உரைக்கிவனே
திண்மைக் கிவனே நெறிக்கிவனே
தேசுக் கிவனே சிலைக்கிவனே
வண்மைக் கிவனே கன்னனெனு
மன்னன் கண்டாய் மற்றிவனே!" 6

அருச்சுனன் வினவும் வில்லை எடுத்தலும்

அரவநெடுங் கொடியுயர்த்தோன் முதலா வுள்ள
அனைவருமங் கொருதனுவுக் காற்று ராகி
உரவுமெலிந் தெழின்மாழ்கிச் செயல்வே றின்றி
உள்ளமழிந் திருந்ததற்பின், உருமே றென்னக்
கரவுடனந் தணர்நாப்பண் இருந்த கொற்றக்
கருமுகில்வா கனன்புதல்வன் கரிய மேனி
இரவிகுலச் சிறுவனைப்போல் எழுந்து, மன்றல்
இளங்கொடிதம் முனைநோக்கி யியம்பி னனே. 7

'மன்மரபிற் பிறந்திருதோள் வலியா லிந்த
மண்ணுளு மவர்க்கன்றி மறைநூல் வாணர்
தொன்மரபிற் பிறந்தவரும் இலக்கு வீழ்த்தாற்
சூட்டுமோ தொடையலிளந் தோகை?' என்ன,
தன்மரபுக் கணிதிலக மான வீரன்,
'தகவன்றோ! மன்றலுக்குத் தாழ்வோ?' என்றான்.
வின்மரபிற் சிறந்தநெடு வில்லை யீசன்
மேருகிரி எடுத்ததென விரைவிற் கொண்டான். 8

அருச்சுனன் திறன்கண்டு முனிவரும் வானோரும் மகிழ்தல்

கிளர்மகுட வயவேந்தர் நாண்க ளெல்லாம்
கீழாகத் தனிநெடுநாண் கிளர வேற்றித்
தளர்வறுசா யகந்தொடுத்துக் கற்றோர் யாரும்
தனுநூலுக் காசிரியன் தானே யென்ன
உளர்திகிரிச் சுழல்இலக்கை அவையோர் தங்கள்
ஊக்கமுடன் விழவெய்தான் உரவுத் தோளான்;
வளருமருந் தவவேள்வி முனிவர் ஆர்த்தார்;
வாசநறு மலர்சொரிந்து வானோர் ஆர்த்தார். 9

## திரௌபதி அருச்சுனனுக்கு மாலையிடுதல்

தாஞ்சாரற் கரியதனு வளைத்தா னென்று
   தரணிபர்தம் முகங்கருகத் தனுவி னேடும்
பூஞ்சாரல் மணிநீல கிரிபோல் நின்ற
   பூசுரனை இவனவனே போன்மென் றெண்ணிப்
பாஞ்சாலர் பதிகன்னி யிருதன் செங்கண்
   பங்கயத்தாற் பாங்காகப் பரிந்து நோக்கித்
தேஞ்சார நறுங்கழுநீர்ச் செய்ய தாமஞ்
   செம்மணிகா லருவியெனச் சேர்த்தி னளே. 10

### அருஞ்சொற்பொருள்

1. தனையை-மகள். சுரும்பு-வண்டு. மலர்ப்பூ...தென்ன-உவமையணி.
2. கங்குல் - இரவு. கா - சோலை. மா - விலங்கு.
3. குறிப்பு- திரௌபதி அருச்சுனனுக்கே வாய்ப்பாள் என்ற குறிப்பு.
4. மா - கரிய. குரல் அளகம் - கூந்தல். கோகிலம் - குயில். இச் செய்யுள் தற்குறிப்பேற்ற அணி.
5. வேட்டிலானேல் - மணவாவிடில். நீராள் - தன்மையுடையவள். திரௌபதி தீயில் பிறந்தவள் என்பது கதை.
6. சிலை-வில் வித்தை. இரதி-சிறந்த அழகுடையவள். தேசு - அழகு.
7. தனு - வில். உரவு - வலிமை. உருமேறு - வலியஇடி. கரவு - மாறுவேடம். முகில் - மேகம். முகில்வாகனன் - இந்திரன். கொடி - உவமை ஆகுபெயர்.
8. தொடையல் - மாலை.
9. நாண் - வில்லில் கட்டப்படும் கயிறு. சாயகம் - அம்பு.
10. கிரி - மலை. தாமம் - மாலை.

### கேள்விகள்

1. பாண்டவர் வழியிற்கண்ட நன்னிமித்தங்கள் யாவை?
2. சுயம்வரத்திற்கு முன் திரௌபதி தன்னுள் செய்து கொண்ட முடிவு யாது?
3. கன்னனின் சிறப்பு யாது?
4. அருச்சுனன் திட்டத்துய்மனிடம் யாது கேட்டான்? திட்டத்துய்மன் அளித்த விடை யாது?
5. அருச்சுனன் எவ்வாறு இலக்கை அம்பெய்து வீழ்த்தினன்?

6. இலக்கு வீழ்த்தியவனைப் பற்றித் திரௌபதி என்ன நினைத்தாள் ?

7. "செம்மணிகா லருவி"—இவ்வுவமையின் பொருள்கூறி, இதனை உவமேயத்தோடு பொருத்திக் காட்டுக.

### பயிற்சி

1. 'திரௌபதி மாலையீடு' என்ற இப்பகுதியின் கருத்தை உரைநடையில் அமைக்க.

2. சிறுகுறிப்பு வரைக: சுயம்வரம், கன்னன், பாண்டவர், திரௌபதி, அருச்சுனன், திட்டத்துய்மன்.

3. பொருள் கூறுக: நாண், சாயகம், கிரி, தாமம், தனையை, சுரும்பு, மா, குழல் அளகம், தேசு.

## 2. சீறாப் புராணம்

[சீறாப் புராணம் என்னும் நூல் முகம்மது நபியின் வரலாற்றைக் கூறுவது. இதனைக் கடிகைமுத்துப் புலவரின் மாணவரான உமறுப் புலவர் இயற்றினர். இவர் காலம் 17-ஆம் நூற்றாண்டு.]

பெருகிய கோடிசந் திரப்பி ரகாசமாய்
வருமொரு பெருங்கதிர் மதியம் போலவே
கருணைவீற் றிருந்தசெங் கமலக் கண்ணிணைத்
திருநபி வருமவ தாரஞ் செப்புவாம். 1

### அப்துல்லாவின் நல்லியல்புகள்

கொன்னுனை வெண்ணிறக் கோட்டு வாரணச்
செந்நிறக் குருதியில் திமிர்ந்து வாய்கழீஇ
மின்னவிர் கணமணி விளங்கு மாமுடி
ஒன்னலர் உயிரைமேய்ந் துறங்கும் வேலினர். 2

முடங்கலங் கைதைமுள் ளெயிற்று வெண்மணிப்
படங்களா யிரத்தினும் பரித்த பாரெல்லாம்
இடங்கொள்பூ தரப்புயத் திருத்தி ஏதிலார்
மடங்கலே றெனுமன வலியின் மாட்சியார். 3

## நரபதி அப்துல்லா

வரபதி யுலகெலாம் வாழ்த்தும் மக்கமா
புரபதிக் கதிபதி என்னும் பூபதி
பரபதி அரசர்கள் பணிந்தி றைஞ்சிய
நரபதி அப்துல்லா என்னும் நாமத்தார். 4

## ஆமினாவின் பேரழகு

அயிலுறை செழுங்கரத் தப்துல் லாவெனும்
பெயரிய களிறுக்கோர் பிடியும் போலவர்
உயிரென இருந்தசைந் தொசிந்த பூங்கொடி
மயிலெனும் ஆமினா என்னு மங்கையே. 5

## ஆமினாவின் சிறப்பு

இற்புகுந் தெழுமதி இலங்கு மாமணி
விற்புரு வக்கடைப் பெண்க ணாயகம்
பொற்பெலாம் பொதிந்தபொற் கொடிநற் பூவையர்
கற்பெலாந் திரண்டுருக் கொண்ட கன்னியே. 6

## ஆமினாவின் நல்லியல்புகள்

அறத்தினுக் கில்லிடம் அருட்கோர் தாயகம்
பொறுத்திடும் பொறுமையிற் பூமிக் கெண்மடங்
குறைப்பெருங் குலத்தினுக் கொப்பி லாமணி
சிறப்பினுக் குவமையில் லாத செல்வியே. 7

குணிப்பருங் குறைஷியங் குலமென் றோங்கிய
மணிப்பெருங் கடலிடை வளரும் செல்வமே
தணிப்பிலா தெடுத்தெறி தரங்க மேனடுப்
பணிப்படா தெழுந்தசெம் பவளக் கொம்பனாள். 8

## இல்லற வாழ்வு

இத்தகைக் குலமயில் ஆமி னாவெனும்
முத்தவெண் நகைக்கனி மொழியு மோகனச்
சித்திர அப்துல் லாஎனும் செம்மலும்
ஒத்தினி தமுதமுண் டுறையும் நாளினில். 9

## நபியின் பிறப்பு

நெறிநிலை திரியா மருள்மத மிகுந்து நெடுநிலம் எங்கணும் பரந்து
துறவறந் தவறி இல்லற மடிந்து சுடரிலா மனையது போலக்
குறைபடுங் காலம் இருளெனுங் குபிரின் குலமறுத் தறநெறி விளங்க
மறுவிலா தெழுந்த முழுமதி போல முகம்மது நபிபிறந் தனரே.

### அருஞ்சொற்பொருள்

2. கோடு - தந்தம். வாரணம்-யானை. கழீஇ-கழுவி, சொல்லிசை அளபெடை. ஒன்னலர் - பகைவர்.

3. கைதை தாழை. ஏறு - ஆண்சிங்கம்.

4. நரபதி - மக்கட்குத் தலைவன். மக்கமாபுரம்-அரேபியாவிலுள்ள மக்கா நகரம்.

5. அயில் - வேல். களிறு - ஆண்யானை. பிடி - பெண்யானை.

6. பூவையர் - பெண்கள். பொற்பு - அழகு.

8. தரங்கம் - அலை.

9. அமுதம் - இல்லற இன்பம்.

10. நெறி - வழி. மறு - கறை. குபிர் - குறைவழிக் குலத்திற்கு மாறுபட்டவர்.

### கேள்விகள்

1. அப்துல்லாவின் நல்லியல்புகள் யாவை?
2. ஆமினாவின் சிறப்பு யாது?
3. ஆமினாவிடம் அமைந்த நற்பண்புகள் யாவை?
4. "சுடரிலா மனையது போல"

"மறுவிலா தெழுந்த முழுமதி போல"—இவ்வுவமைகள் எவற்றை விளக்க வந்தன?

### பயிற்சி

1. அப்துல்லாவின் நல்லியல்புகளைச் சுருக்கி வரைக.

2. வாக்கியங்களிற் பயன்படுத்துக: நாண், உறைதல், கிரி, நெறி, மறு, அமுதம், கைதை, அயில், பூவையர், தரங்கம்.

3. குறிப்பு வரைக: உமறுப் புலவர், நபிகள் நாயகம், அப்துல்லா, ஆமினா.

# IV. சிறு நூல்கள்

## 1. மீனாட்சியம்மை குறம்

இதனைச் செய்தவர் குமரகுருபரசுவாமிகள். இவர் வரலாறு பொதுப்பகுதியிற் காண்க. பொதியமலையைச் சேர்ந்த குறத்தி தன் மலைவளம் கூறி மீனாட்சியம்மைக்குக் குறிசொல்வதாகச் செய்யப் பட்டதாதலின், இந்நூல் 'மீனாட்சியம்மை குறம்' எனப் பெயர் பெற்றது.

### பொதியமலைச் சிறப்பு

திங்கள்முடி சூடுமலை தென்றல்விளை யாடுமலை
தங்குபுயல் சூழுமலை தமிழ்முனிவன் வாழுமலை
அங்கயற்கண் அம்மைதிரு அருள்சுரந்து பொழிவதெனப்
பொங்கருவி தூங்குமலை பொதியமலை என்மலையே. 1

மந்தமா ருதம்வளரு மலையெங்கள் மலையே;
வடகலைதென் கலைபயிலும் மலையெங்கள் மலையே;
கந்தவேள் விளையாடு மலையெங்கள் மலையே;
கனகநவ மணிவிளையு மலையெங்கள் மலையே;
இந்தமா நிலம்புரக்கும் அங்கயற்கண் அம்மை
இன்பமுறுந் தென்பொதிய மலையெங்கள் மலையே. 2

சிங்கமும்வெங் களிறுமுடன் விளையாடும் ஒருபால்;
சினப்புலியும் மடப்பிணையும் திளைத்திடுமங் கொருபால்;
வெங்கரடி மரையினொடு விளையாடும் ஒருபால்;
விடஅரவும் மடமயிலும் விருந்தயரும் ஒருபால்;
அங்கணமர் நிலங்கவிக்கும் வெண்கவிகை நிழற்கீழ்
அம்பொன்முடி சூடுமெங்கள் அபிடேக வல்லி
செங்கமலப் பதம்பரவும் கும்பமுனி பயிலும்
தென்பொதிய மலைகாண்மற் றெங்கள்மலை அம்மே! 3

### அருஞ்சொற்பொருள்

1. புயல் - மேகம். தமிழ்முனிவன் - அகத்தியன். கயற்கண் - கயல் மீன் (போன்ற) கண், உவமைத்தொகை. தூங்கு - தொங்கும்.

2. மந்தமாருதம் - இளந்தென்றல். வடகலை - வடமொழிக்கலை. தென்கலை - தமிழ்மொழிக்கலை.

3. பிணை - பெண்மான். மரை - ஒருவகை மான். கும்பமுனி - அகத்தியன். செங்கமலம் - செம்மை (ஆகிய) கமலம் - பண்புத்தொகை.

## 2. மீனாட்சியம்மை இரட்டைமணிமாலை

இதனைப் பாடியவரும் குமரகுருபர சுவாமிகளேயாவர். நேரிசைவெண்பா, கட்டளைக் கலித்துறை என்னும் இரண்டு பாக்களும் முறையே வரச்செய்யப்பட்ட நூலாதலின், இஃது 'இரட்டை மணிமாலை' எனப் பெயர் பெற்றது. இஃது 20 செய்யுட்களையுடைய சிறிய நூல்.

### நேரிசை வெண்பா

**கொண்டைச் செருக்குங் குறுநகையும் நெட்டயிற்கண்**
**கெண்டைப் பிறக்கமும்வாய்க் கிஞ்சுகமும்—கொண்டம்மை**
**கற்பூர வல்லி கருத்திற் புகப்புகுந்தாள்**
**நற்பூர வல்லியுமென் நா. 1**

### கட்டளைக் கலித்துறை

**நாவுண்டு நெஞ்சுண்டு நற்றமி ழுண்டு நயந்தசில**
**பாவுண் டினங்கள் பலவுமுண் டேபங்கிற் கொண்டிருந்தோர்**
**தேவுண் டுவக்கும் கடம்பா டவிப்பசுந் தேனின்பைந்தாட்**
**பூவுண்டு நாரொரன் றிலையாந் தொடுத்துப் புனைவதற்கே. 2**

### அருஞ்சொற்பொருள்

1. நெடுமை + அயில் = நெட்டயில், நீண்ட வேல். பிறக்கம் - கண்ணின் பிறழ்ச்சி. கிஞ்சுகம் - கிளி, கிளிச்சொல். வல்லி - கொடிபோன்றவள், உவமையாகு பெயர்.

2. கடம்ப + அடவி = கடம்பாடவி, தீர்க்கசந்தி, கடம்பவனம்; மதுரைக்கு இஃதொரு பெயர்.

## 3. திருவேங்கடமாலை

வேங்கடம் - திருப்பதி. வேம் - பாவம், கடம் - எரித்தல். தன்னை அடைந்தாருடைய பாவங்கள் எரிக்கப்படும் இடமாதலின் 'வேங்கடம்' எனப் பெயர் பெற்றது. மாலை - பாமாலை. திருவேங்கடமுடையான் திருவடியிற் சூட்டும் திருமாலைபோல்வதால்

இந்நூல் திருவேங்கடமாலை எனப்பட்டது. இதனைப் பாடியவர் பிள்ளைப்பெருமாள் ஐயங்கார். இந்நூல் நூறு செய்யுட்களைக் கொண்டது.

அல்லிமலர்க் காந்தளின்மேல் ஆடும் சுரும்பினங்கள்
மெல்லியர்கள் கைக்கழகாம் வேங்கடமே—மல்லினரைப்
பண்டறைந்த வன்புடையார் பார்த்தனுக்குத் தத்துவநூல்
விண்டறைந்த வன்புடையார் வெற்பு.

## 4. சிரங்கநாயகர் ஊசல்

சீரங்கநாதரைப் பற்றிப் பாடிய ஊசல். ஊசல் - ஆசிரிய விருத்தத்தால் அல்லது கலித்தாழிசையால் 'ஆடீரூசல்,' 'ஆடாமோவூசல்,' 'ஆடுகவூசல்' என்பவற்றுள் ஒன்றால் முடிவுறக் கூறுவது. இது 96 வகைப் பிரபந்தங்களுள் ஒன்று. இதனைப் பாடியவர் பிள்ளைப் பெருமாள் ஐயங்கார்.

வென்றிவேற் கருநெடுங்கண் அசோதை முன்னம்
    வேர்வாட விளையாடும் வெண்ணெ யாட்டும்
குன்றுபோல் நாற்றடந்தோள் வீசி யாடும்
    குரவைதனைப் பிணைந்தாடும் கோள றாட்டும்
மன்றினூ டுவந்தாடும் மரக்கால் ஆட்டும்
    வலியரவிற் பாய்ந்தாடும் வடுவில் ஆட்டும்
அன்றுகா ணாஇழந்த அடியோம் காண
    அணியரங்க ராசரே! ஆடீர் ஊசல்.

அருஞ்சொற்பொருள்

1. அல்லி - அகஇதழ். காந்தள் - செங்காந்தள் மலர். மல்லினர் - மற்போர்வீரர். அறைந்த - தாக்கி அழித்த. வன்பு - வலிமை. தத்துவ நூல் - பகவத்கீதை. விண்டு - விளக்கி. வெற்பு - திருமலை.

2. கருங்கண், நெடுங்கண்-பண்புத்தொகைகள். வேர்வுஆட-வியர்வை உண்டாக. வெண்ணெய்ஆட்டு - வெண்ணெய்க்கு ஆடின கூத்து. பிணைந்து - பலமாதருடன் சேர்ந்து. குரவை - பெண்கள் கைகோத்தாடும் கூத்துவகையுள் ஒன்று. கோள்அறு - குற்றமற்ற. மன்று - பொதுவிடம். மரக்கால்ஆட்டு - மரக்கால்கூத்து. அரவு - காளியன் என்னும் பாம்பு. வடு - குற்றம். அன்று - அவ்வவ் வாடல்கள் நடந்த காலங்கள். காணமல் - தரிசிக்கப் பெறமல்.

## 5. தமிழ்விடு தூது

தூது : பிரிவுத் துன்பத்தால் வருந்தும் தலைவன், தலைவியருள் ஒருவர் மற்றொருவரிடம் தம் கருத்தைத் தெரிவிக்க உயர்திணை அல்லது அஃறிணைப் பொருள்களைத் தூதாக அனுப்புவதாகச் செய்யப்படும் பிரபந்தம் 'தூது' எனப்படும். மேகவிடுதூது, நாரை விடுதூது, பணவிடுதூது போன்றவை காண்க. இங்குத் தலைவி தன்தலைவனிடம் தமிழைத் தூது விடுப்பதாக இந்நூல் கூறுகிறது. இதன் ஆசிரியர் இன்னவர் என்பதும் இதன் காலமும் தெரியவில்லை. இதனை நன்முறையில் பதிப்பித்தவர் டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள். 'தூது' 96 வகைப் பிரபந்தங்களுள் ஒன்றாகும்.

என்செய்தி நீகண்(டு) இரங்குவது நீதியல்லால்
உன்செய்தி நானே உரைசெய்வேன்?-இன்சொல்லாய்! 1

'கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக'என்ற-சொற்குள்ளே 2

எல்லார்க்கும் புத்தி இயம்பிக் கரையேற்ற
வல்லாய்! உனக்குரைக்க வல்லேனோ?-சொல்லியவுன் 3

ஈரடிக்குள் ளேஉலகம் எல்லாம் அடங்குமெனின்,
நேரடிக்கு வேறே நிகர்உண்டோ?-ஓரடிக்கோர் 4

ஆயிரம் பொன்இறைக்கும் ஐயரை வீதியிலே
போய்இரந்து தூதுசொல்லப் போக்கினேன்-யாயிருந்தும் 5

மாண்பாய்ஓர் தூதுசொல்லி வாவென்பேன்; என்வருத்தம்
காண்பாய்;என் பெண்மதிநீ காணாதே. 6

அருஞ்சொற்பொருள்

2. "கற்க...தக" என்பது திருக்குறள்.
4. ஈரடி-திருக்குறள். நேரடி-நாலடியார்.
5. ஐயர்-சிவபெருமான்.

### கேள்விகள்

1. பொதிய மலையின் சிறப்பு யாது?
2. திருமலையின் சிறப்பு எவ்வாறு கூறப்பட்டுள்ளது?

3. பிள்ளைப்பெருமாள் ஐயங்கார் யாதுபற்றிச் சீரங்கநாயகரை ஊசலாட வேண்டுகின்றனர்?

4. தமிழின் பெருமை தமிழ்விடுதூதில் எவ்வாறு கூறப் பெற்றுள்ளது?

5. "கற்க...தக."—இதன் பொருள் யாது?

## பயிற்சி

1. கீழ்வருவனவற்றை விளக்குக: பொதியமலை, திருமலை, சீரங்கநாயகரூசல்.

2. பிள்ளைப்பெருமாள் ஐயங்கார், குமரகுருபர சுவாமிகள்—இவர்களைப் பற்றி நீவிர் அறிந்தவற்றை எழுதுக.

3. நம் செய்யுட்பகுதி கொண்டு தமிழின் பெருமையைச் சுருக்கி வரைக.

4. வாக்கியங்களில் அமைத்து எழுதுக:—தென்றல், வெங் களிறு, செங்கமலம், பொதியமலை, கயற்கண், குறுநகை, அயிற்கண், கற்பூரவல்லி, நற்றமிழ், பசுந்தேன், வெற்றிவேல், நெடுங்கண், தடந்தோள், உவந்து, இன்சொல், கசடற, தக, இயம்பி, இரந்து. மாண்பாய்.

5. பிரித்து எழுதுக:—வெங்களிறு, நெடுங்கண், நற்றமிழ், பசுந்தேன், குறுநகை, அயிற்கண், செங்கமலம், இன்சொல்.

# 1. பரஞ்சோதியார்

டாக்டர் மா. இராசமாணிக்கம் அவர்கள், M. A., L. T., M. O. L., PH. D

தமிழ் விரிவுரையாளர், விவேகானந்தர் கல்லூரி, சென்னை.

**பரஞ்சோதியார் :** இவர் நமது நாட்டில் கி. பி. 7-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். இவர் பல்லவ அரசனான நரசிம்ம வர்மனிடம் சேனைத்தலைவராக இருந்தவர். இப்பெரியோர் மஹாமாத்திரர் மரபில் வந்தவர். மஹாமாத்திரர் என்பவர் அரசனது ஆலோசனை அவையினர். அரசன் மஹாமாத்திரரைக் கலந்தே நாட்டு அரசியலை நடத்துவான்; பிறரோடு போர் புரிவான். மஹாமாத்திரரே அரசனை வழிப்படுத்துபவர். அவர்கள் நற்குடிப் பிறப்பும் சிறந்த போர்ப் பயிற்சியும் பல கலைகளிற் பண்பட்ட புலமையும் உடையவராக இருத்தல் வேண்டும் என்பது விதியாகும். இத்தகைய உயர்பதவியினர் மரபினரே மஹாமாத்திரராக அடுத்தடுத்து வருவர். பரஞ்சோதியார் முன்னோர் மஹாமாத்திரராக இருந்தவர். எனவே, நமது பரஞ்சோதியார் நமது தமிழ் நாட்டுப் பெருமக்கள் வரிசையில் வைத்து எண்ணத் தக்கவர் ஆவர்.

இவர் மருத்துவம் — வான நூல் — இசை — கணிதம்— அரசியல் — போர்முறை முதலிய பல துறைகளில் அறிவு நிரம்பியிருந்தவர். இவை அனைத்திற்கும் மேலாகச் சிறந்த ஒழுக்க சீலராகவும் உயர்ந்த சிவபக்தராகவும் விளங்கினர். இவரைச் சேனைத் தலைவராகக்கொண்ட பல்லவன் - நரசிம்ம வர்மன் சிறந்த வைணவ பக்தன். அங்ஙனம் சமயத்தில் வேறுபட்டிருந்தும் அரசன் பரஞ்சோதியாரைப் படைத் தலைவராக வைத்திருந்தமை, அவருடைய அரசபக்தியையும் வீரத்தையும் கருதியே ஆகும் என்பது நன்கு விளங்கலாம்.

பரஞ்சோதியார் மனைவியார் தஞ்சாவூர் ஜில்லா—சீகாழியை அடுத்த திருவெண்காடு என்னும் ஊரினர். அவ்வூர் சங்ககாலத்தில் புகழ்பெற்றிருந்த காவிரிப்பூம்பட்டினத்தின் ஒரு பகுதியாக இருந்தது. அத் தலத்தில் பிறந்த காரணத்தால் அம்மையாருக்குத் 'திருவெண்காட்டு நங்கை' எனப் பெற்றோர் பெயரிட்டனர். அவ் வம்மையார் நிறைந்த கல்வியும் சிறந்த ஒழுக்கமும் பரந்த நோக்கமும் விரிந்த சிந்தையுமுடையவர். கணவரை மகிழ்விப்பதையே தம் வாழ்க்கை

யின் குறிக்கோளாகக் கொண்டவர். இத்தகைய உத்தம பத்தினியாருடன் பரஞ்சோதியார் இல்லறம் என்னும் நல்லறத்தை இனிதே நடத்திவந்தார்.

**பல்லவர்—சாளுக்கியர் போர் I:** துங்கபத்திரையாறு முதல் நர்மதைநதிவரையுள்ள பரந்த நிலப்பகுதியைச் சாளுக்கியர் என்பவர் ஆண்டுவந்தனர். அவர்கள் தெற்கே இருந்த பல்லவப் பேரரசருடன் ஓயாது போரிட்டபடி இருந்தனர். அங்ஙனம் போரிட்ட சாளுக்கியரில் குறிப்பிடத்தக்க பெரு வீரன் இரண்டாம் புலிகேசி என்பவன். இவன் பல்லவரது செல்வாக்கைத் தென்னாட்டில் பரவவிடலாகாது என்ற எண்ணங்கொண்டவன். இவனே வட இந்தியப் பேரரசனை ஹர்ஷனைப் போரில் முறியடித்தவன்; அந்த மமதையால் பல்லவ நாட்டின்மீது படையெடுத்தான்.

அப்பொழுது நரசிம்மவர்மன் தகப்பனான மகேந்திரவர்மன் (கி. பி. 600—630) பல்லவ மன்னனாக இருந்தான். அவன் போர்த்திறம் மிக்கவன்; பகைவனது முதல் வேகத்தை எதிர்க்காது விடுத்து அவன் களைப்புறும்பொழுது திடீரெனத் தாக்கி அழிக்கும் தந்திரம் மேற்கொண்டவன். அதனால், அப் பல்லவன் புலிகேசியைத் தன் நாட்டிற்குள் தாராளமாக வரவிட்டான். இத் தந்திரத்தை அறியாத புலிகேசி, நேரே காஞ்சிவரை வந்தான்; நகரத்தை முற்றுகையிட்டான். பல்லவன் கோட்டைக்குள்ளிருந்து வெளியில் வரவில்லை. 'இவன் பேடி' என்று இகழ்ந்து புலிகேசி பல்லவ நாட்டின் தென்எல்லையாகிய காவிரியாறுவரை சென்று, அங்குச் சிலநாள் ஓய்வெடுத்துக்கொண்டான்.

இதற்குள் மகேந்திரன் தன் படைகளைப் பல கூறுகளாகப் பிரித்துத் தன் மகனான நரசிம்மவர்மன் தலைமையிலும் பிற சேனைத்தலைவர் தலைமையிலும் காஞ்சியைச் சூழ வைத்துப் போருக்குத் தயாராகக் காத்திருந்தான். உண்மை உணராத புலிகேசி அயர்ந்த நிலையில்—எதிர்ப்புக்குத் தயாராகாத நிலையில்—காஞ்சியை நெருங்கினான். அப்பொழுது முன்னேற்பாடாக நாற்புறத்தும் இருந்த பல்லவர் படைகள் திடீரெனப் பகைவரைச் சூழ்ந்துகொண்டன.

எதிர்பாராத எதிர்ப்பைக் கண்ட சாளுக்கிய வீரர் திகைத்து நின்றனர். போர் பல இடங்களில் நடந்தது. களைத்திருந்த சாளுக்கிய வீரர் எவ்வளவு நேரம் புதிதாகப்

போரைத் தொடங்கிய பல்லவ வீரரை எதிர்த்து நிற்றல் கூடும்? மேலும் பல்லவ வீரர் உள்நாட்டினர்; பகைவரோ நாட்டிற்குப் புதியவர்; நடு உள் நாட்டில் பல்லவ வீரர் நடுவில் அகப்பட்டுக்கொண்டனர்; ஆதலின் அவர்கள் தங்கள் உயிருக்காகப் போராடி முடிவில் தோல்வியுற்று நாலாபக்கங்களிலும் ஓடினர்கள். மஹேந்திரவர்மனும் இளவரசனான நரசிம்மவர்மனும் புலிகேசியைத் தொடர்ந்து சென்று அவனை முற்றிலும் முறியடித்தனர்; முறியடித்துத் தங்கள் நாட்டு எல்லைக்கப்பால் துரத்தினர்.

**பல்லவர்-சாளுக்கியர் போர் II:** ஆண்டுகள் சில கழிந்தன. கி. பி. 630-இல் நரசிம்மவர்மன் பல்லவ அரசன் ஆனான். அவனிடம் பரஞ்சோதியார் என்ற தமிழ் வீரர் ஒருவர் தலைவராக இருந்தார். நரசிம்மவர்மன் சாளுக்கியனை மனத்திற் கொண்டே தன் படையைப் பல மடங்கு பெருக்கினான். பரஞ்சோதியார் அப்படைகள் எல்லாவற்றுக்கும் தலைமை பூண்டு விளங்கினர்.

புலிகேசி கி. பி. 642-இல் மீண்டும் பல்லவ நாட்டின் மீது படையெடுத்தான்; பல்லவரது எல்லைப்புறப் படையை எளிதில் வென்று நாட்டிற்குள் நுழைந்தான்; அங்கங்கு இருந்த காவற்படைகளை வெற்றிகொண்டு காஞ்சீபுரத்தை நெருங்கினான். அதுவரை அவனைப் பெரும்படைகொண்டு எதிர்க்காமலே பல்லவன் விட்டுவிட்டான்; பகைவனைத் தன் நாட்டிற்குள் நன்கு இழுத்து, பிறர் உதவியை அவன் பெறாதவாறு செய்து, அவனை நாற்புறமும் வளைத்து முறியடிக்கவே பரஞ்சோதியார் யோசனைப்படி நரசிம்மவர்மன் இத் தந்திரம் செய்தான்.

காஞ்சிக்கு அண்மையில் பகைவன் நெருங்கினான் என்பதை அறிந்ததும் பரஞ்சோதியார் அவனைப் பரியலம் என்னும் இடத்தில் தாக்கினர்; போர் மாபெரும் போராக உருவெடுத்தது; பரஞ்சோதியார் தம் முன்னணிப் படைகளை முடுக்கினர். அப் படை சாளுக்கியர் படையை நன்கு தாக்கி வதைத்தது. சாளுக்கியன் முன்னர்த் தோற்றோடினவன் ஆதலால் தக்க ஏற்பாட்டுடன் வந்திருந்தான். அவன் எப்படியும் வருவான் என்பதை எதிர்பார்த்தே பல்லவர் தம் படைவன்மையைப் பல ஆண்டுகளாகப் பெருக்கி இருந்தனர். ஆதலின் இரு திறத்துப் படைகளும் கலைப் பின்றிப் போரிட்டன. எனினும் சாளுக்கியனுக்கு உண

வும் படையும் குறையலாயின. அவன் பகைவரது நாட்டு நடுவில் சிக்கிக்கொண்டதால் அவ்வசதிகளை இழந்து தவித்தான்.

இந்த நிலையில் பரஞ்சோதியார் பகைவரைத் தள்ளிக் கொண்டே மணிமங்கலம் என்ற இடத்தை அடைந்தனர். அங்குக் கோரமான போர் நடைபெற்றது. அக் கொடிய போரில் பகைவர் பின்வாங்கினர்; பின்வாங்கிக்கொண்டே சூரமாரம் என்ற இடத்தை அடைந்தனர். அங்கும் கடும் போர் நடந்தது. அப் போர் யமனுங் கண்டு அஞ்சத் தக்க போராக இருந்தது. நரசிம்மவர்மன் தன் உயிரைத் துரும் பாக மதித்துப் போரிட்டான். பரஞ்சோதியார் போர்க்களம் எங்கும் காணப்பட்டார். அவரது முகத்தைக்கண்டு வீரர் வீறுகொண்டு அமர் புரிந்தனர். அதிகம் அறைவதேன்? அங்கு நடந்த போரில் சாளுக்கியன் முறியடிக்கப்பட்டான். உணவும் ஓய்வும் இல்லாத சாளுக்கிய வீரர் சிதறி ஓட லாயினர். அவர்கட்கு முன் புலிகேசி ஓடலானான்.

**வாதாபி கொண்டது:** நரசிம்மவர்மன் பரஞ்சோதி யாரைப் பார்த்து, 'பகைவனை விடாது துரத்திச் சென்று வாதாபியை அழித்து வருக,' என்று ஆணையிட்டான். அஞ்சா நெஞ்சமும் ஆண்மையும் படைத்த தமிழராகிய பரஞ்சோதியார் மிக்க மகிழ்ச்சியுடன் பகைவர் சேனையைத் துரத்திச் சென்றார். அவரது வீரத்தைக் கண்டு பல்லவ வீரர் முன்பாய்ந்து ஓடினர்; "பரஞ்சோதியார் இருக்கும் பொழுது பயம் ஏது?" என்று பாடிக்கொண்டு பகைவர் பின்னே ஓடினர். சாளுக்கிய சேனை புலிகேசியுடன் வாதாபிக்குள் நுழைந்தது.

சாளுக்கியரது புகழ் பெற்ற கோ நகரமான வாதாபிக் குள் பரஞ்சோதியாரும் நுழைந்தார். அங்குக் கொடிய போர் ஒன்று நடந்தது. அப் போரில் பகைவர் படை அழிந்தது. புலிகேசி என்ன ஆனான் என்பது தெரிய வில்லை. வாதாபி பரஞ்சோதியார் கைப்பட்டது. அங்கு நடந்த போரில் அந் நகரத்தின் பல பகுதிகள் அழிந்தன; அரண்மனைச் செல்வம் முழுவதும் கரிகள்—பரிகள் முதலி யனவும் பரஞ்சோதியார் கைப்பட்டன. பரஞ்சோதியார் நகர நடுவில் வெற்றித்தூண் ஒன்றை நாட்டுவித்தார். அத் தூண் இன்றும் இருக்கின்றது. அதன்மீது 'வாதாபி' என்ற சொல்லும் 'நரசிம்மவர்மன்' என்ற சொல்லுமே

படிக்கத் தக்கனவாக இருக்கின்றன. மற்றவை சிதைந்து விட்டன.

**அழியாப் புகழ்:** இங்ஙனம் பல்லவ மன்னன் சார்பாகப் பரஞ்சோதியார் போரிட்டுக் கைப்பற்றிய வாதாபிநகரம் பதின்மூன்று வருடகாலம் பல்லவர் ஆட்சியில் இருந்தது எனின், பரஞ்சோதியார் போர் வன்மையை என்னென்பது! அவரது ஆழ்ந்த யோசனையாலும் அனுபவம் நிறைந்த தந்திரத்தாலும் போர் நடத்திய திறமையாலும் பல்லவன் வாதாபி கொள்ள முடிந்தது. இவ் வீரச்செயலால் பரஞ்சோதியார் அழியாப் புகழ்பெற்றார். அவர் வாதாபியில் கைக்கொண்ட பொருள்களை எல்லாம் கொண்டுவந்து நரசிம்மவர்மன் முன்வைத்துப் பணிந்தார். இந்த நிகழ்ச்சி என்றும் தமிழ்மக்கள் நினைவில் இருப்பதற்காக - பரஞ்சோதியார் என்ற தமிழர் வீரத்தைப் பின்வருவார்க்கு வெளிப்படுத்துவதற்காக - சிற்ப வடிவத்தில் காஞ்சி வைகுந்தப் பெருமாள் கோவில் உட்பிரகாரச் சுவரில் காட்டப்பட்டுள்ளது. அச் சிற்பத்தை இன்றும் காணலாம்.

கோச்செங்கணான் வீரச்செயல்கள் அவனுக்குப் பல நூறு ஆண்டுகட்குப் பின்வந்த திருமங்கை ஆழ்வார் பாராட்டுமாறு மக்கள் உள்ளத்தில் வேரூன்றி இருந்தாற்போல - பரஞ்சோதியாரது வீரப் போரும் பலநூறு வருடகாலம் மக்கள் நினைவில் இருந்துவந்தது. கி. பி. 7-ஆம் நூற்றாண்டில் நடந்த இவ் வீரச்செயலைக் கி. பி. 12-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த சேக்கிழார் பெருமான் தமது பெரிய புராணத்திற் பாராட்டிக் கூறியுள்ளதே இதற்குப் போதிய சான்றாகும். அப் பெருமான் கூறியுள்ள பாட்டைக் காண்க :

"மன்னவர்க்குத் தண்டுபோய் வடபுலத்து வாதாபித்
தொன்னகரம் துகளாகத் துளைநெடுங்கை வரையுகைத்தும்
பன்மணியும் நிதிக்குவையும் பகட்டினமும் பரித்தொகையும்
இன்னனஎண் ணிலகவர்ந்தே இகலரசன் முன்கொணர்ந்தார்"

இங்ஙனம் தமது செயற்கரிய வீரச்செயலால் அழியாப் புகழ்பெற்ற பரஞ்சோதியார் என்ற தமிழரே, அறுபத்துமூன்று நாயன்மாருள் ஒருவரான சிறுத்தொண்டர் என்பர். இந்த வீரத்தமிழர் பெயர் போர்த்திறத்தால் தென்னிந்திய வரலாற்றிலும், சமய ஆற்றலால் பெரிய புராணத்திலும் ஒப்புயர்வற்ற இடம் பெற்றுவிட்டது.

## அருஞ்சொற்பொருள்

புலமை-அறிவு. திருவெண்காடு-சீகாழித் தாலூகாவில் கடற்கரை ஓரமாக உள்ள பழைய ஊர். சங்ககாலம்-இற்றைக்குச் சற்றேறக்குறைய 1820 ஆண்டுகட்கு முற்பட இருந்த சில நூற்றாண்டுகள். இல்+அறம்= இல்லறம். நல்+அறம்=நல்லறம். கோ நகரம் - தலைநகரம். வாதாபி - இதன் இக்காலப் பெயர் பாதாமி; இது பம்பாய் மாகாணத்தில் உள்ள ஊர். கரி-யானை. கோச்செங்கணான்-இவன் சிறந்த சிவபக்தன்; பல சிவன் கோவில்களைக் கட்டியவன். இவன் திருமால் கோவில்களையும் கட்டியவன். அதனால் இவன் பெயர் தமிழகத்தில் இவனுக்குப்பின் சில நூற்றாண்டுகள்வரை சைவ, வைணவ அறிஞரால் போற்றப்பட்டுவந்தது. தண்டு - படை. வடபுலம் - வடநாடு. தொல்-பழமையான. துளை நெடுங்கைவரை - துதிக்கையை உடைய மலைபோன்ற யானை. உகைத்து - செலுத்தி. குவை-குவியல். பகட்டு இனம்-யானைக் கூட்டம். இன்னன - இவைபோல்வன. இகல் அரசன் - சாளுக்கியர்க்குப் பகை யரசன், பல்லவன். பெரிய புராணம் - 63 நாயன்மார் வரலாறுகளைக் கூறும் பெரிய செய்யுள் நூல்.

## கேள்விகள்

1. மகாமாத்திரர் என்பவர் யாவர்?

2. பரஞ்சோதியார் எத்துறைகளில் அறிவு நிரம்பியவர்?

3. பரஞ்சோதியாரிடம் காணப்பட்ட சிறப்புக்கள் யாவை?

4. பரஞ்சோதியார் எவ்வாறு வாதாபியைக் கைக்கொண்டார்?

5 காஞ்சி வைகுந்தப்பெருமாள் கோவிற் சுவரில் உள்ள பரஞ்சோதியாரைப் பற்றிய சிற்பம் யாது?

6. சேக்கிழார் யாவர்? அவர் செய்த நூல் யாது?

7. சேக்கிழார் பரஞ்சோதியாரைப் பற்றி யாது கூறியுள்ளார்?

8. சிறுத்தொண்டர் என்பவர் யாவர்?

9. பரஞ்சோதியாரது பெயர் தென்னிந்திய வரலாற்றிலும் பெரிய புராணத்திலும் எக்காரணங்களால் இடம்பெற்றது?

## பயிற்சி

1. பரஞ்சோதியாரின் போர்த்திறனையும் அறிவுநலனையும் விளக்கிப் பதினைந்து வரிகள் எழுதுக.

2. சிறுகுறிப்பு வரைக: கோச்செங்கணான், பரஞ்சோதியார், பெரிய புராணம், புலிகேசி, வாதாபி

3. பொருள் கூறுக: இகல், பகட்டு இனம், பரித்தொகை, இன்னன, வடபுலம், தொல், தண்டு, உகைத்து, குவை.

# 2. கடற் செலவு

திரு. த. வே. உமாமகேசுவரம் பிள்ளை அவர்கள், B. A., B. L.

முன்னாள் தலைவர், கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.

ஒருநாள் நெடுந்தூரத்தில் உயிரற்ற பொருளொன்று நீரால் அலைக்கப்படுவதைக் கண்டோம். வெட்ட வெளியான நீர்ப்பரப்பில் வெட்ட வெளிக்கு மாறுபட்டதாக எது காணப் பட்டாலும் அது நம் மனத்தைக் கவரும். காணப்பட்ட அப் பொருள் முழுதும் உடைந்து தகர்ந்த கப்பலின் கொடிமர மாகத் தோன்றியது. அலைகள் எற்றித் தள்ளாமல் தடுக் கும் பொருட்டுப் பாய்மரத்துடன் பிணித்திருந்த கைத் துண்டுகள் பல, அம்மரத்தில் எஞ்சியிருந்தன. அக் கப்ப லின் பெயர் யாதெனக் காண, எவ்வித அடையாளமும் தென்படவில்லை. அந்தப் பாய்மரமானது பல மாதங்க ளாகக் கடலிலேயே அலைக்கப்பட்டுக் கிடந்ததாகத் தோன் றியது. மிகப்பல கிளிஞ்சில்கள் அதைப் பற்றி இருந்தன. அதன் பக்கம் எல்லாம் நீண்ட கடற்பாசிகள் வளர்ந்து கம் பீரமாகத் தலைஅசைத்து நின்றன. ஆனால், அக்கப்பலில் ஏறிவந்தவர்கள் எங்குச் சென்றார்கள்?

அவர்கள் உயிர்தப்புவதற்குச் செய்த போராட்டம் வெகுகாலத்திற்கு முன்பே ஓய்ந்துவிட்டது. புயலின் ஆரவாரத்துடன் அவர்களும் காய்ந்து மூழ்கிவிட்டார்கள்; அவர்களுடைய எலும்புகள் கடலின் அகட்டிலுள்ள பெருங் குகைகளில் வெளுத்துக் கிடக்கின்றன. அவர்களை, அந்த காரமும், மந்தமும், மௌனமும் மூடிவிட்டன. அவர்க ளுடைய முடிவின் வரலாறு கூறுவார் ஒருவருமிலர். அக் கப்பலின் வருகையைப் பெருமூச்சுடன் எதிர்பார்த்திருந்த வர் எத்துணையவர்? அவர்கள் வாழ்ந்து வெளியேறிய இல்லத்தில் உள்ளார், அவர்கள் வருகைக்காக ஆண்டவனை நோக்கி வேண்டிய வேண்டுதல்கள் எத்துணைய? கடலில் தெரியும் இக் கப்பலைப் பற்றிய செய்தி ஏதேனும் கிடைக் காதாவெனத் தினத்தாள்களை ஆவலுடன் உற்று நோக்கிய அன்னை, மனைவி, உற்றார், உறுதுணைவர் எத்துணையர்? எதிர்நோக்குதல் கவலையாகவும், கவலை பயமாகவும், பயம் இழப்பாகவும் எங்ஙனம் மாறின? ஐயோ! அவர்கள்மாட்டு அன்புடையோர், நினைவுக் குறியாக வைத்துப் போற்றுதற் குக் கடலில் மடிந்த அவர்களுடைய அடையாளப் பொருள்

ஒன்றேனும் கிட்டாதா? "கப்பல் துறையினின்றும் புறப் பட்டது; பின்னர்த் தெரியவில்லை," என்று கூறும்படி யாயிற்றே!

கடலில் காணப்பட்ட கப்பல்துண்டின் காட்சி வழக்கம் போலத் துயர்நிறைந்த பல நிகழ்ச்சிகளின் வரலாற்றைக் கூறும்படி தூண்டியது. முதன்மையாகக் கோடையில், கடற்செலவின் அமைதிக்குக் கெடுதியுண்டாகுமாறு மாலைப் பொழுதில் திடீரென வானம் இருண்டு புயற்காற்றின் வரு கையைக் காட்டும் குறிகள் காணப்படும்போது இத்தகைய கதைகள் பலவற்றைப் பேசுவது வழக்கம். அங்ஙனமே, நாங்கள் கப்பலறையில் உள்ள மங்கலான விளக்கைச் சூழ்ந் திருந்தபொழுது, ஒவ்வொருவரும் தாம்தாம் கண்ட கப்பற் கேட்டின் கதைகளைக் கூறத்தொடங்கினர். அவர்களுள் கப் பல் தலைவன் கூறிய கதையொன்று என் மனத்தைப் பிணித் தது. அக் கதையாவது:

"நான் நியூபவுண்ட்லாந்து கரையோரமாய் அழகும் வலிமையும் வாய்ந்த ஒரு கப்பலில் போய்க்கொண்டிருந் தேன். அப்பொழுது பகலில்கூட நமக்கு முன்னுள்ள பொருள்களைக் காணமுடியாமல் மறைப்பதும், அவ்வெளிக ளில் இயல்பாக நிகழ்வதுமான 'மூட்டம்' ஒன்று தோன்றி யது. இராப்பொழுதில் நம் அருகில் உள்ளவர்களையும் மறைக்கும் வண்ணம் அம் 'மூட்டம்' மிகவும் கனத்திருந் தது. நான் சென்ற கப்பலின் பாய்மரத்தின் உச்சியில் விளக்குகளும் ஏற்றப்பட்டிருந்தன. என்றாலும், அந்தக் கரையோரங்களில் மீன்படகுகள் நங்கூரம் போட்டுக்கிடப் பது வழக்கமாதலால், அவை குறுக்கிடுமோவென, நான் அடிக்கடி ஊன்றிப் பார்த்துக்கொண்டிருந்தேன். காற்றும் கடுமையாக வீசிக்கொண்டிருந்தது. நாங்களும் கடலில் கடு வேகமாகப் போய்க்கொண்டிருந்தோம். அப்பொழுது, திடீரெனக் காவற்காரன், "எதிரே கப்பல்" எனக் கூக் குரல் இட்டான். அதற்குள்ளாக அக்கப்பலைத் தாக்கிவிட் டோம். அது 'கூனர்' என்னும் பெயருடைய சிறுகப்பல். அது நங்கூரம் போட்டு நிறுத்தப்பட்டிருந்தது. அதிலிருந்த வர் உறங்கிவிட்டனர்; விளக்கேற்ற மறந்துவிட்டனர். ஆதலால் நடுக்கப்பலில் மோதிவிட்டோம். எமது கப்பலின் வேகத்தினாலும், பருமனாலும், பளுவினாலும் அச் சிறு கப்பல் அலைகளின்கீழ் ஆழ்ந்துவிட்டது.

"இங்ஙனம் தகர்ந்த கப்பல், கடலில் மூழ்கிக்கொண்டிருக்கையில் அதிலிருந்த இருவர் உடை நெகிழ்ந்து அலங்கோலமாகக் கீழேயிருந்து மேற்றட்டிற்கு ஓடிவந்ததை நான் பார்த்தேன். அவர்கள் அப்பொழுதுதான் படுக்கையிலிருந்து எழுந்து ஓடிவந்தார்கள். அவர்கள் கடலில் மூழ்கும்பொழுது ஓலமிட்டழுத குரல் புயல்காற்றுடன் கலந்து என் செவிக்கெட்டியது. அவ் வழுகுரலை என்னிடம் கொணர்ந்த காற்று, பின் அக்குரலைக் கேட்க முடியாதவாறு எம்மை வெகுதூரம் அடித்துச் சென்றது. நாங்கள் எங்ஙனம் அவ் வழுகுரலை மறத்தல்கூடும்? கப்பல் விரைந்து சென்றமையால் அதைத் திருப்பச் சிறிது நேரமாயிற்று. கப்பல் உடைந்த இடத்தை உற்றுணர்ந்து அவ்விடத்திற்குத் திரும்பிவந்தோம்; நாங்கள் தேடுவதை அறிவிக்கும்பொருட்டுப் பல வேட்டுகள் சுட்டோம்; அக் கப்பலிலிருந்து தப்பிப் பிழைத்தவர்கள் யாரேனும் கூப்பிடமாட்டார்களா எனப் பார்த்தோம். எங்கும் ஓசையின்றி அமைதியாக இருந்தது. நாங்கள் அக் கப்பலைப் பற்றியாவது, அதிலிருந்தவர்களைப் பற்றியாவது, யாதும் கேட்கவுமில்லை, காணவுமில்லை." இது அக் கப்பல் தலைவன் கூறிய கதையாகும்.

இதுபோன்ற கதைகள் சிறிது நேரம் என் மன ஊக்கத்தைக் குறைத்து ஓயவைத்தன. இரவு நேரமும் வந்தது. புயலும் வரவர மிகுதிப்பட்டது. கடல் குழம்பும்படி அலைகள் வீசின. புரளும் அலைகளாலும் மோதும் அலைகளாலும் பயங்கரமான ஓசை விளைந்தது. அவ்வோசை கடலைக் கடல் கூவி அழைப்பது போலிருந்தது. வானத்தில் படரும் கரிய மேகக் கூட்டங்களினின்றும் பளீர் எனப் பிளக்கின்றதைப்போலக் காணப்பட்ட ஒளி வீசும் மின்னற்கொடிகள், கிளம்பும் அலைகளின்மேல் காணப்பட்டன. இம் மின்னலானது, பின்தொடரும் இருளை இரட்டிப்பாக்கி, அச்சத்தை விளைத்தது. இடிகளோ நீர்ப்பரப்பின்மேல் அதிர்ந்தன. மலைபோன்ற அலைகள் எதிரொலி விளைத்தன. மலைபோலும் அலைகளின்மேலும், குகைபோலும் பள்ளங்களின்கீழும், கப்பல் ஏறுவதையும் அமிழ்வதையும் பார்த்த எனக்குக் கப்பல் மீண்டும் தன்நிலையடைவது தெய்வீகமாம் எனத் தோன்றியது. கப்பலின் தலை அலைகளில் புதைந்தது. பாய்மரக்கட்டுகள் கடலிற் படிந்தன. கப்பலையே ஆழ்த்தவல்ல மலைபோலும் அலைகள் எழுந்து தாக்கின. அப்போது சுக்கானைத் திருப்பும் திறன்

ஒன்றே, கப்பல் அலைகளால் மொத்துண்டு மூழ்காத வண்ணம் பாதுகாத்தது.

அப்பொழுது என் அறைக்குள் நான் தனித்துச் சென்றேன். என்றாலும், இப் பயங்கரமான தோற்றங்கள் என்னைத் தொடர்ந்துவந்தன. காற்று வீசுவதால் கப்பற் கட்டுகளின்மீது விளைகின்ற ஒலி, சாக்காட்டின்மேல் ஒப்பாரி போன்றிருந்தது. அலைமோதுங் கடலில், கப்பல் உழலுதலால், பாய்மரங்களும், கப்பற்கட்டுகளும் விளைக்கும் "கிரீச்" என்னும் ஓசை பயத்தை விளைத்தது. கப்பலிடம் ஓடிவரும் அலைகளின் அலறுதல் எமன் இரைதேடிவந்து இம்மிதவைச் சிறுவீட்டை முற்றுகை செய்தது போன்றிருந்தது. இக்கப்பலில் ஓர் ஆணி கழன்றாலும், அல்லது ஒருபலகை விலகினாலும், அந்த எமன் உள்நுழைவதற்கு அது வழியாகுமெனத் தோன்றியது.

வெயில் காயும் காலைப்போழ்தில் 'தரை! தரை!' என்ற ஒலி பாய்மரத்தின் மேல்தட்டிலிருந்து தோன்றவே, அது கேட்ட எனக்கு மயிர்க்கூச்செறிந்தன. முதல் முறை ஐரோப்பாவைக் காணும் அயல்நாட்டானுடைய உள்ளத்தில் ஓடிப் புகும் சுவையுள்ள உணர்ச்சிகள் யாவை என்பதைப் பழகி யுணர்ந்தவரல்லாத பிறரால் அளவிட்டுக்கூறல் முடியாது.

தரையைக் கண்டது முதல் கரை யேறும்வரை ஒரே பதைபதைப்பாயிருந்தது. போர்க்கப்பல்கள் காவல் தெய்வங்களைப் போலக் கரையோரங்களில் காப்புச் செய்து திரிந்தன. அயர்லாந்தின் நிலமுனைகள் சமுத்திரத்தில் நீண்டு நீண்டு தோன்றின. வேல்ஸ் நாட்டின் மலைத்தொடர்கள் மேகமண்டலத்தை அளாவுகின்றன. ஒவ்வொரு தோற்றமும் மனவெழுச்சியையும் ஆர்வத்தையும் விளைத்தது. கப்பல் 'எமர்சே' ஆற்றின் கழிவாயின்வழியே மேலேறிய போது நான், 'தூரங்காண்' கண்ணாடியால் இருகரைகளையும் உற்று நோக்கிவந்தேன். என் கண்கள், திருத்தி வளர்த்த செடிகளும், பசும்புல் தரைகளும் சூழ்ந்திருக்கும் சிறுகுடில்களில் அன்புடன் தங்கின. அருகில் உள்ள குன்றின் உச்சியில் உயர்ந்துநிற்கும் கிராமக்கோயிலின் பெரிய கோபுரமும், பசுமையான 'ஐவி'க்கொடி படர்ந்து பாழடைந்து கிடக்கும் மடமும் எனக்குப் புலப்பட்டன. இங்கிலாந்து தேசத்திற்கு இத்தகைய காட்சிகள் மிகவும் உரிமையுள்ளவை.

காற்றும், அலையும் சாதகமாய் இருந்தமையால் கப்பல் இறங்கும் பாலத்திற்கு உடனே வரமுடிந்தது. அப் பாலத்தில் மக்கள் நிறைந்திருந்தார்கள். அவர்களில் அலுவலின்றி வேடிக்கை பார்க்கவந்தார் சிலர்; நண்பர்களையும் உறவினர்களையும் காண ஆவலுடன் வந்தவர் வேறு சிலர்.

கப்பல் கரைசேர்ந்ததும் எங்கும் பரபரப்பாயிருந்தது; பழகினவர் சந்தித்தனர்; நண்பர் ஒருவருக்கொருவர் வந்தனங்கூறி அளவளாவினர்; வணிகர் குழுமி நின்று உரையாடினர். யான்மட்டிலும் தன்னந்தனியாய்ச் செய்வதொன்றும் அறியாது வாளாவிருந்தேன். என்னைச் சந்திக்கவும் வரவேற்கவும் நட்பினர் இல்லை.

அருஞ்சொற்பொருள்

தகர்ந்த - உடைந்த. வரவர - இரட்டைக்கிளவி (கிளவி - சொல்.) தடதட, படபட, நறநற, கலகல - இரட்டைக்கிளவிகள். சுக்கான் - கப்பலைத் திருப்பும் கருவி. மிதவை - மிதப்பது; கப்பல். பதைபதைப்பு - இரட்டைக்கிளவி. கழிவாய் - முகத்துவாரம். பரபரப்பு - இரட்டைக் கிளவி. குழுமி - கூடி.

## கேள்விகள்

1. தகர்ந்த கப்பலின் கொடிமரத்தைக் கண்ட ஆசிரியர் உள்ளத்தில் தோன்றிய எண்ணங்கள் யாவை?

2. கப்பல் தலைவன் ஓட்டிச் சென்ற கப்பல் சிறு கப்பலை எங்ஙனம் தாக்க நேரிட்டது?

3. "நாங்கள் எங்ஙனம் அவ்வழுகுரலை மறக்க முடியும்!"— இடம் சுட்டி விளக்குக.

4. இப்பாட ஆசிரியர் சென்ற கப்பல் இரவில் எப்பாடு பட்டது? விளக்கமாய்க் கூறுக.

5. இப்பாட ஆசிரியர் தூரங்காண் கண்ணாடியைக்கொண்டு கண்டவை யாவை?

6. கப்பல் கரைசேர்ந்ததும் நடைபெற்ற நிகழ்ச்சிகள் எவை?

## பயிற்சி

1. இப்பாடப் பொருளைச் சுருக்கி ஒரு கட்டுரையாக வரைக.

2. நீவிர் சென்றுகண்ட புதுஇடம் ஒன்றைப்பற்றிச் சில பத்திகள் எழுதுக.

3. வாக்கியங்களிற் பயன்படுத்துக: தகர்ந்த, மிதவை, கழிவாய், உகைத்து, தண்டு, வடபுலம், இனம், இகல், குவை, சுங்கம்.

# 3. கலிங்கப் போர்

வித்துவான் து. கண்ணம்மாள் அவர்கள்

*தமிழாசிரியர், C. S. M. பெண்கள் நடுநிலைப் பள்ளி, சென்னை.*

**குலோத்துங்கன் :** கிருஷ்ணையாறு முதல் குமரியாறுவரையுள்ள பெருநிலப்பகுதியை ஆண்ட பெருமன்னனே முதற் குலோத்துங்கன். குலோத்துங்கன் என்ற பெயருடைய சோழ மன்னருள் இவனே முதல்வனுனமையின், இவன் முதற் குலோத்துங்கன் எனப்பட்டான். இவன் கங்கையும் கடாரமும் கொண்ட பெருமன்னனுன இராசேந்திரசோழனது மகள்வயிற்று மகனுவன். இவன் கி. பி. 1070 - ஆம் ஆண்டு சோழமண்டலத்தின் அரசனுனன். கங்கைகொண்ட சோழபுரம் சோழப் பெருநாட்டின் தலைநகரமாய் விளங்கியது. இவனது பேரவையில் சயங்கொண்டார் என்ற புலவர் பெருமான் இருந்தார். இவன் தன் நாட்டிற்கு நலம்புரிய எண்ணி, ஒவ்வொருவரும் செலுத்திவந்த சுங்கத்தை நீக்கினுன். அதனுல் மகிழ்ந்த மக்கள் இவனைச் 'சுங்கந் தவிர்த்த சோழன்' என்று வாழ்த்தலாயினர். இவனுக்கு அபயன், விசயதரன், சயதுங்கன், விருதராசபயங்கரன், கரிகாலன், இராசநாராயணன், உலகுய்ய வந்தான் என்ற வேறு பெயர்களும் வழங்கின. இவன் புரிந்த போர்கள் பல. அவற்றுள் கலிங்கப் போரும் ஒன்ருகும். இப்போர் குலோத்துங்கனுக்கும் வடகலிங்க மன்னனுன அனந்தபன்மனுக்கும் நடைபெற்றதாகும். அப் போரைப்பற்றிய விவரங்களை இக் கட்டுரையில் காணுவோம் :

**போருக்குக் காரணம் :** குலோத்துங்கன் அடிக்கடி தன் பெருநாட்டைச் சுற்றிவருவது வழக்கம். அவன், அவ் வழக்கப்படி ஒருமுறை காஞ்சியில் தங்கினுன். காஞ்சிமாநகரம் சோணுட்டின் வடபகுதித் தலைநகராக விளங்கியது. அங்கு அரண்மனை ஒன்று இருந்தது. அவ் வரண்மனையில் மன்னன் தங்கியிருந்தான். அப்போது, திறை கொணர்ந்த மன்னர் பலர் வாயிலில் காத்துக்கிடப்பதாகக் காவலன் கூறினுன். அதனைக் கேட்ட அரசன், 'அன்னரை வரவிடுக,' என்ருன். திறை கொணர்ந்த அரசர் எல்லோரும் மன்னனை வணங்கித் தங்கள் தங்கள் பகுதிப் பொருளைச் செலுத்தி மீண்டனர். பின்னர், அரசன், "இவர்களைத் தவிரத் திறை கொடாதாரும் உளரோ?" என வினவினுன். அப்போது

அரண்மனைக் கணக்கர், "கலிங்க அரசன் இருமுறை திறை கொணர்ந்திலன்," எனக் கூறினர். அதனைக் கேட்ட மன்னன் வெகுண்டான்; "வடகலிங்கம் சென்று அவன் ஆனைகளைக்கொண்டு, அவனையும் கொணர்மின்," என்று கூறினன். கூறலும், அரசனை அடுத்திருந்த பல்லவர் கோனாகிய கருணாகரத் தொண்டைமான், 'அடியேற்கு விடை தரின், கலிங்கமறிந்து வருவேன்' என, அரசனும் 'அங்ஙனமே செய்க,' என்றனன்.

**படையெடுப்பு:** கருணாகரன் நால்வகைத் தானையோடும் போருக்கெழுந்தான்; முரசங்கள் முழங்கின; வளைகள் கலித்தன; வெள்ளம்போல் படைகள் சென்றதைக் கண்ட பலரும் வியந்து நடுங்கினர். இரைதேடிச் செல்லும் பெரும் புலியைப்போலக் கருணாகரன் வீராவேசத்தோடு கலிங்கம் நோக்கிப் படையைச் செலுத்தினன். பாலாறு, பொன் முகரி, பழவாறு, கொல்லி என்ற நாலாறுந் தாண்டி, பெண்ணையாற்றையுங் கடந்து படைகள் சென்றன; வய லாறு, மண்ணாறு, குன்றி என்ற ஆறுகளையும் கடந்தன; கிருஷ்ணையாற்றையும் கடந்தன; கோதாவிரி, பம்பை, கோதமை என்ற நதிகளையும் கடந்து கலிங்கநாட்டை அடைந்தன.

**படைகள் செய்த கேடுகள்:** கலிங்க நாட்டைச் சேர்ந்த கிராமங்களிற் புகுந்த சோழவீரர், கொள்ளையடித்தனர்; பல வீடுகளைத் தீக்கிரையாக்கினர்; ஆநிரைகளைக் கவர்ந்த னர். அவர்கள் கொண்டாட்டத்தில் நசுங்கிய குழந்தைகள் பல; உயிர்துறந்த முதியவர் பலர்; அல்லலுற்ற சிறுவர், சிறுமியர் எண்ணிலர்; கரமிழந்தோரும், சிரமிழந்தோரும், செவியிழந்தோரும் பலராயினர். சுருங்கக்கூறின், கலிங்க நாடு பேரழிவிற்கு உட்பட்டது.

**கலக்கமும் முறையீடும்:** சோணாட்டுச் சேனையால் விரைந்து ஏற்பட்ட அழிவுகளைக் கண்ட கலிங்க மக்கள், "மதில்கள் இடிகின்றனவே! வீடுகள் எரிகின்றனவே! புகைத்திரள் பரவுகின்றதே! அரண் ஏதும் காணுமா றில்லையே! புகலிடமேதும் இல்லாது நாம் வருந்தும்நிலை ஏற்பட்டதே! நாம் மடிவது திண்ணம். நம் அரசன் அனந்தபன்மன் குலோத்துங்க சோழனுக்குச் செலுத்த வேண்டிய திறைப்பொருளைச் செலுத்தத் தாமதித்ததால் அன்றோ இப்போரின் கொடுமைகள் தாண்டவமாடுகின்

றன். அபயன் படைகள் வந்துவிட்டனவே! நாம் யாது செய்தல்கூடும்? எதற்கும் மன்னனிடம் சென்று முறையிடுவோம்," என்று கலக்கமுற்றவராய், உரை குழற, ஓடிச் சென்று மன்னன் அவையை அடைந்தனர்.

அவையை அடைந்த மக்கள் அரசனைப் பணிந்து, "பெருமானே! குலோத்துங்கன் படை வந்துவிட்டது. நீர் திறைப் பொருளைக் கட்டத் தவறியதால் ஏற்பட்டதன்றோ இப் போர்! ஊர்கள் பலவும் எரியுண்டன. பதறி யோடிப் புகலிடம் காண விழையும் பெண்டிர்களது நிலை பார்க்க இரக்கமா யுள்ளது! பொறுக்கமுடியாத அளவில் துன்பம் நம்மை நெருங்கியுள்ளது! நீர்தாம் எங்களைக் காப்பாற்ற வேண்டும்," எனக் கூறி முறையிட்டனர்.

**கலிங்கன் சீற்றவுரை:** குடிகளின் முறையீட்டைக் கேட்ட அரசன் உள்ளம் கொதித்தது; கண்கள் சிவந்தன. அவன் வெகுளியினால் வெய்துயிர்த்து, குடிகளை நோக்கி, "நீங்கள் அஞ்ச வேண்டா. வெற்றிவீரனான குலோத்துங்கனே நேரில் வந்திருப்பின், அஞ்சவேண்டும் அவசியம் உண்டு. ஆயின் இப்போது அவன் வந்தானில்லை; அவன் படையே வந்துளது. ஆதலால் வாகைபுனைவது நாமே யல்லாது அவர்களாகார் என்பதை உணருங்கள். கானரணும், மலையரணும், கடலரணும் உடையது கலிங்கர் நாடு என்பதை அத்தண்டு அறிந்திலதுபோலும்! நன்று. படைகள் வரட்டும், போர் புரிந்து அவற்றை அழிப்போம்," என்று சீற்றத்துடன் வீரம் பேசினான்.

**அமைச்சன் அறிவுரை:** கலிங்க வேந்தனான அனந்தபன்மனின் அமைச்சருள் ஒருவன் எங்கராயன் என்பவன். அவன் தனக்கு உண்மையெனப் பட்டவற்றை ஒளியாது கூறும் பண்புடையவன். சோழனது படையைப் பற்றிக் கலிங்க மன்னன் கூறியதைக் கேட்ட எங்கராயன் வருந்தினான். அதனால் அவன் தன் இருக்கையை விட்டெழுந்து, "அரசன் கோபிப்பான் என்பதை அறிந்தும் உண்மையான அமைச்சன் தன் கருத்தைக் கூறத் தயங்கான். ஆதலால் மன்ன, யான் கூறுவதைக் கேட்டருள்க: சோழனது சேனையின் வலிமை யாவராலும் பாராட்டப்படுவதாகும். கடலைக் கடந்து விழிஞம் அழித்ததும், காந்தளூர்ச் சாலையைக் கைக்கொண்டதும் இப்படையே யன்றோ? இச் சேனையால் தம் மண்டலங்களை இழந்த மன்னர் பலராவர். இங்ஙனம் பல்லாற்றானும் சிறப்புமிக்க சோழனை - அவனது படையை-

வெல்லுதல் என்பது எளிதாமோ? எதனையும் எண்ணித் துணிக. இன்று யான் கூறியன கேட்டு என்னைச் சினப்பீராயினும், நாளை அமர்க்களத்தில் என் உரையின் உண்மையை உணர்வீர். இனி நீர் விரும்புவன செய்க," என்று கூறி அமர்ந்தான். எங்கராயனுடைய பேச்சு அரசனுக்குச் சினத்தை மூட்டியது. அவன், சோணாட்டுப் படைகளை எதிர்த்துப் போராடப் படைகளைப் புறப்படுமாறு ஆணையிட்டான்.

போர்க்களம்: மன்னன் உரைப்படி கலிங்கப்படை கலித்தெழுந்தது. வரைகள் பொடிபட்டன. கடலொலிபோல் முரசங்கள் ஆர்த்தன. இடைவெளி அரிதாய் ஒருவர் உடலினில் ஒருவர் உடல்புக நெருங்கிச் சென்ற படைகள் கருணாகரன் படைகள்முன் நின்றன.

இருதிறத்தார்க்கும் போர் தொடங்கிற்று! 'படை எடும் எடும்', 'விடும், விடும்' என்ற ஒலிகள் கடலொலி போன்றிருந்தன. இருதிறப்படைகளின் தோற்றம் இருபெருங் கடல்கள் எதிர்நின்றாற்போன்றிருந்தது. யானையோடு யானை பொருதது, மலையோடு மலை பொருதாற்போன்றிருந்தது. தேர்களின் மோதுதல் மேகங்களின் மோதுதலை ஒத்தன. படைவீரர்கள்தம் கையிற்கொண்ட சிலைகள் கோடையிடிபோல இடித்துக் கணைமழை பொழிந்தன; புலியோடு புலி பொருதாற்போல் வீரரொடு வீரர் பொருதனர்; சீயத்துடன்சீயம் மலைந்தாற்போலத் தானைத்தலைவருடன் தானைத்தலைவர் எதிர்த்துப் பொருவாராயினர். அதனால் குருதியாறு பெருகியது. அவ்வாற்றில் மன்னர்களது நித்திலக்குடைகள் நுரையென மிதந்தன; போரில் துணிபட்ட யானைகளின் உடல்கள் அவ்யாற்றின் இருகரையென இருபுறமும் அமைந்தன.

மாற்றார் அம்பைத் தொடுக்குமளவில் தம்மிடம் அம்பில்லாத வீரர்கள் தங்கள் மார்பில் தைத்த பகழியைப்பற்றி இழுத்துச் சிலையில் தொடுத்துப் போரிட்டனர். குறையுடலங்கள் கூத்தாட, அவற்றின் பின்னர்க் களிப்போடு ஆடும் பேயினங்கள், ஆடல் பயிற்றுவிக்கும் ஆடலாசிரியரை ஒத்தன. இங்ஙனம் போர் நிகழுங்கால், களப்போரினை விரைவில் முடித்து வாகைசூட விரும்பிய கருணாகரன், தன் வேழத்தை முன்செலுத்தினன். அவ்வளவில், பகைவீரர் வெட்டுண்டனர்; யானைகள் துணிக்கப்பட்டன; குதிரைகள்

பிளவுண்டன ; தேர்கள் முறிந்தன ; கலிங்கச்சேனை நிலை தளர்ந்தது.

**தோற்றலும் சிறைப்படலும் :** 'ஆயிரம் யானைகொண்டு பொருவம்' எனவந்த கலிங்கவீரர் புறமுதுகிட்டனர். கலிங்க அரசன் சேனையின் சிதறலைக்கண்டு, அச்சம்கொண்டு, களத்தினின்றும் ஓடிக் காட்டில் மறைந்தான். சோணாட்டுவீரர்கள் கலிங்கநாட்டினின்று யானைகள், தேர்கள், குதிரைகள், மணிக்குவியல்கள் முதலியவற்றைக் கைக்கொண்டனர் ; கலிங்க மன்னனைத் தேடலாயினர்; பல இடங்களிலும் தேடியலைந்து முடிவில் மலைக்குகை ஒன்றில் கரந்திருந்த கலிங்க மன்னனைக் கைப்பற்றினர்.

**கலிங்க வெற்றி :** கலிங்க நாட்டை வென்று, மலைமுழையில் கரந்திருந்த கலிங்க மன்னனையும் கைக்கொண்டு சோழ வீரர் தம் நாடு மீளலாயினர். அன்னாரது வழியில் எதிர்ப்பட்ட கலிங்கர் சிலர், தம் உடல் முழுதும் சாம்பல் பூசி, "ஐயன்மீர், யாம் கலிங்கரல்லேம், அமணர்கள்," என்று கூறித் தப்பினர். சிலர் சிலையின் நாணினை முப்புரி நூலாக்கி அணிந்துகொண்டு, "ஐயா, யாங்கள் கங்கை நீராடப் போந்தேம், யாங்கள் கலிங்கரல்லேம்," எனச் சொல்லி உயிர்பிழைத்தனர். குருதி தோய்ந்த உடைகளை அணிந்த சிலர், "வீரர்களே, யாங்கள் சாக்கியர், நுங்கள் பகைவரல்லோம்,"என்றுரைத்துச் சென்றனர். இவ்வாறு பொய்யுரை புகன்று பிழைத்து வந்தவர்கள் தவிர, கலிங்க நாட்டில் உயிர்பிழைத்த வீரர்கள் வேறு எவருமில்லை.

இங்ஙனம், பலவகை அரண்காவலைப் பெற்ற வட கலிங்க நாட்டை வென்று, மன்னனையும் சிறைப்படுத்தி, களிற்றினங்களோடு நிதிக்குவியலையும் கொண்டுவந்து மன்னர் மன்னனான குலோத்துங்க சோழன் முன்பு வைத்து வணங்கினான் கருணாகரன். சோழன் பெரிதும் மகிழ்ந்து, தொண்டைமானது வீரத்தைப் பெரிதும் பாராட்டித் தக்க பரிசில் தந்து அவனை மகிழச் செய்தான்.

**கலிங்கத்துப்பரணி :—** கலிங்கப் போர்நிகழ்ச்சிகளை எல்லாம் தக்கார்வாய்க் கேட்டுணர்ந்த அபயனது அவைப் புலவரான **சயங்கொண்டார்** அப்போரை விளக்கி, ஒரு செய்யுள் நூல் பாடினார். அந் நூலே **கலிங்கத்துப் பரணி** என்பது. அந் நூலில், சோழர் பரம்பரை, சோழவேந்தர் போர்ச்செயல்கள்,

கலிங்கத்தின்மீது படையெடுப்பு, கலிங்கப்போரைப் பற்றிய விவரங்கள் முதலியன மிக்க தெளிவாகவும் சுவைபடவும் பாடப்பட்டுள்ளன. நீங்கள் அந் நூலைப் படித்து இன்புறுக.

### அருஞ்சொற்பொருள்

கடாரம்-மலேயா நாட்டின் ஒரு பகுதி. சுங்கம்-வரி. திறைப்பொருள்-அரசர் செலுத்தும் கப்பப் பொருள். தானை - படை. களிறு -ஆண் யானை. உரை குழற - பேச்சுத் தடுமாற. ஆணை - கட்டளை. பரி - குதிரை. குருதி - இரத்தம். சிலை - வில். மலைதல் - போர் செய்தல். வேழம் - யானை. முழை - குகை. பரணி - போர்முகத்தில் ஆயிரம் யானைகளை வென்ற வீரனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்ட பிரபந்த வகை.

## கேள்விகள்

1. குலோத்துங்கனுடைய வேறு பெயர்கள் யாவை?

2. சோழப் பெரும்படை கலிங்கத்தின்மீது படை யெடுக்கக் காரணம் யாது?

3. சோழனது படை கடந்துசென்ற ஆறுகள் எவை?

4. சோழனது படை கலிங்க நாட்டில் உண்டாக்கிய குழப்ப நிலை யாது?

5. எங்கராயன் என்பவன் யாவன்? அவன் அறிவுரை யாது?

6. கலிங்கப்போர் எவ்வாறு நடைபெற்றது?

7. கலிங்கப்போரின் முடிவு யாது?

8. கலிங்கப் போரைப் பற்றிக் கூறும் நூல் யாது? அதுபற்றி நீவிர் யாது அறிவீர்?

## பயிற்சி

1. 'கலிங்கப்போர்' என்ற இப்பாடத்தின் துணையைக்கொண்டு நீவிர் அறியும் செய்திகளைத் தொகுத்து வரைக.

2. சிறு குறிப்பு வரைக: கலிங்கப்போர், எங்கராயன், கலிங்கத்துப் பரணி, குலோத்துங்கன், போர்க்களம்.

3. நீவிர் அறிந்த வேறு ஒரு போர்நிகழ்ச்சிகளை ஒரு கட்டுரையாக எழுதுக.

# 4. மாமல்லபுரம்

டாக்டர். மா. இராசமாணிக்கம் அவர்கள், M.A., L.T., M.O.L PH. D

தமிழ் விரிவுரையாளர், விவேகானந்தர் கல்லூரி, சென்னை.

சங்ககாலத்துத் தொண்டை நாட்டில் இருந்த துறைமுக நகரங்களுள் இன்றைய மகாபலிபுரமும் ஒன்ருகும். இஃது அக்காலத்தில் 'பட்டினம்' எனப் பெயர் பெற்றிருந்தது. இப்பட்டினத்தைப் பற்றிய குறிப்புக்களைப் பெரும்பாணற்றுப் படையிற் கீழ்வருமாறு காணலாம்:

"அந்நகரத் துறைமுகத்துள், மேற்றிசையிலிருந்து பரிகளையும் வடதிசையிலிருந்து பண்டங்களையும் கொண்டு வந்த கப்பல்கள் நிறைந்திருக்கும்; கரையோரத் தெருக்களில் பரதவர் வளமனைகளும் காவல் நிறைந்த பண்டசாலைகளும் இருக்கும்; வீடுகளில் விலைபொருள்கள் நிறைந்திருக்கும; விலை உயர்ந்த அணிவகைகளை அணிந்தவரும் மயில் போன்ற சாயலை உடையவரும் ஆகிய மங்கையர் உலாவுவர்; காற்சிலம்புகள் ஒலிக்கப் பந்தாடி மகிழ்வர்; கைவளை ஒலிக்கும்படி கழங்கு விளையாடுவர்.

"கடற்கரையின் மற்ருெருபால் கள்ளுக்கடை ஒன்று இருக்கும். அங்குப் பசிய கொடிகள் கட்குடிப்போரை அழைப்பன போல் அசைந்தாடிக்கொண்டிருக்கும். கடையின் முற்றத்தில் தெய்வத்திற்குத் தூவின பூக்கள் பரவிக் கிடக்கும். அங்கு ஒருபால் கள்ளைத் தயாரிக்கும் மகளிர் வட்டில்களைப் பலகாலும் கழுவுவதால் சிந்தின நீர் தேங்கிச் சேருக இருக்கும்; தாய்ப்பன்றி தன் குட்டிகளுடன் இறங்கி அச்சேற்றைக் கலக்கும்; மற்ருெருபால் ஆண்பன்றி வளர்க்கப்படும். அங்குச் செல்வோர் பன்றி இறைச்சியுடன் கள்ளைப் பெறலாம்.

"துறைமுகத்தில் மிக்க உயரமானதும் கற்றை முதலிய வற்ருல் வேயப்படாததுமான உயர்ந்த மாடம் ஒன்று உண்டு; கடலில் திசை தெரியாது மயங்கும் கலங்களைக் 'கரை இங்கு இருக்கின்றது, வருக,' எனப் பரிந்து அழைக்கும் விளக்கம் ஏற்றிவைக்கப்பெற்றுள்ளது. அதனைக் கடந்து செல்லின், தென்னங்கீற்ருல் வேய்ந்த கூரையையும், முற்றத்தில் மஞ்சள் செடிகளையும் கொண்ட வீடுகளைக்

காணலாம். அவ்வீடுகளில் தங்கும் புதியவர் இளநீர், வாழைப்பழம், பனைநுங்கு, முற்றின வள்ளிக்கிழங்கு முதலியவற்றைப் பெற்று உண்ணலாம். இத்துறைமுக நகரம் செல்வவளம் கொழிக்கும் பேரூராகும்.''

சங்ககாலத்திற்குப் பிறகு தொண்டைநாடு பல்லவர் ஆட்சிக்குட்பட்டது. பல்லவர்காலம் முழுவதும் (சுமார் கி. பி. 300-900) இந்நகரம் பல நிலைகளிலும் சிறப்புற்று விளங்கியது என்பதைக் கல்வெட்டுக்களும் இலக்கியங்களும், மாமல்லபுரத்திலேயே இன்றளவும் காணப்படுகின்ற கற்கோவில்களும் சிற்பங்களும் எடுத்துரைக்கின்றன.

மாமல்லபுரத்தில் ஆதிவராகர் கோவில் என்னும் பெயருடன் குகைக்கோவில் ஒன்று இருக்கின்றது. அஃது ஒரு பாறையைக் குடைந்து அமைக்கப்பெற்ற கோவில். அதனுள் சிம்மவிஷ்ணுவையும் அவன் மனைவியர் இருவரையும் குறிக்கும் உருவச் சிற்பங்கள் ஒருபுறத்திலும், அவற்றுக்கு நேர்எதிரில் மகேந்திரவர்மனையும் அவன் மனைவியர் இருவரையும் குறிக்கும் உருவச் சிற்பங்களும் இன்றளவும் நாம் காணுமாறு இருக்கின்றன. சிம்மவிஷ்ணுவின் காலம் ஏறத்தாழக் கி. பி. 575-600 என்றும், மகேந்திரவர்மன் காலம் ஏறக்குறையக் கி. பி. 600-630 என்றும் வரலாற்று ஆசிரியர் கூறியுள்ளனர். எனவே, கி. பி. 6-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மாமல்லபுரம் பல்லவ வேந்தர் கருத்தினை ஈர்த்த நகரமாக இருந்தது என்பது தெளிவாகும்.

மகேந்திரனுக்குப் பின்வந்த முதலாம் நரசிம்மவர்மன், வட இந்தியாவில் பேரரசனாக இருந்த ஹர்ஷவர்த்தனனையே வென்ற பெருவீரனான இரண்டாம் புலிகேசியைக் கி. பி. 642-இல் வென்றான்; அவன் தலைநகரான வாதாபியைக் கைப்பற்றி, வெற்றித்தூண் நாட்டினான்; இங்ஙனம் தான் பெற்ற வெற்றியைப் பாராட்டித் தன்னை **மஹாமல்லன்** என அழைத்துக்கொண்டான்; தன் பெருநாட்டின் சிறந்த துறைமுக நகரமான இன்றைய மகாபலிபுரத்தைப் பெரிதாக்கி **மஹாமல்லபுரம்** என்று பெயரிட்டான். அவன்காலத்தில் அவனிடம் தஞ்சம் புகுந்த இலங்கை அரசனுக்காக அவன் தன் கடற்படையை மஹாமல்லபுரத்திலிருந்து அனுப்பினான் என்று இலங்கை வரலாறு கூறுகின்றது. இங்ஙனம், நரசிம்மவர்மனால் 'மஹாமல்லபுரம்' என்று இடப்பட்ட பெயரே

பின்னர் மாமல்லபுரம் என்றும், மாமல்லை என்றும், மல்லை என்றும் மருவி வழங்கலாயிற்று.

நரசிம்மவர்மன் தன் தந்தையைப் போலக் குடைவரைக் கோவில்களை அமைக்காமல், சிறிய குன்றுகளையே கோவில்களாக அமைக்கத் தொடங்கினன். மாமல்லபுரத்தில் பஞ்சபாண்டவர் இரதங்கள் என்று இன்று சொல்லப்படுகின்றவை இரதங்கள் அல்ல; ஒற்றைக்-கற்-கோவில்களேயாகும். இக் கோவில்களை அமைக்கும் வேலை இவன் காலத்தில் தொடங்கப்பெற்று, இவனுக்குப் பின்வந்த




மாமல்லபுரம் கற்கோவில்கள்

முதலாம் பரமேசுவரவர்மன் காலத்தில் முடிவு பெற்றது. மகாமல்லனுடைய கல்வெட்டுக்களும், முதலாம் பரமேசுவர வர்மனுடைய கல்வெட்டுக்களும் இவ்வொற்றைக்கற் கோவில்களிற் காணப்படுவதால், இவ்விருவராலும் இவை அமைப்புண்டவை என்று கருதுதல் பொருத்தமாகும். இவ்வொற்றைக் கற்கோவில்கள் ஐந்தும் அக்காலத்திலிருந்த பலவகைக் கோவில் அமைப்புக்களை நமக்கு அறிவிப்பனவாகும். கோவில் தூண்களின் அமைப்பும், சுவர்களின்

அமைப்பும், அச்சுவர்களிற் காணப்படும் பல்வேறு சிற்பங்களின் அமைப்பும், கோவிலின் மேற்பகுதி விமான வேலைப்பாடும் பிறவும் நேரிற் கண்டு களிக்கத்தக்கவை.

இக் கற்கோவில்களேயன்றி, மாமல்லபுரத்தில் வேறு சில மண்டபங்களும் இருக்கின்றன. அவை மலைச்சரிவுகளில் குடையப்பட்டவை. அவற்றுள் ஒன்றில் துர்க்கை எருமைத்தலைஅசுரனோடு போரிட்டு வெல்லுதல் மிகச் சிறந்த சிற்பமாகக் காட்டப்பட்டுள்ளது. மற்றொன்றில் பகீரதன் தவத்தைக் குறிக்கும் - பல நுணுக்கமான விவரங்களைக் கொண்ட-பெரியதோர் சிற்பம் காட்சியளிக்கின்றது. அது பகீரதன் தவம் என்று சிலரும், கங்கைக்கரைக் காட்சி என்று வேறு சிலரும், சமணர்கதை ஒன்றினை விளக்கும் சிற்பம் என்று பிறிதோர் சாராரும் கூறுகின்றனர். உண்மை எதுவாயினும், அம் மண்டபச் சுவர்களில் காணப்படும் சிற்பங்கள் அனைத்தும் காண்பவர் கண்ணையும் கருத்தையும் ஈர்க்கவல்லவை என்பதில் ஐயமில்லை.

இம் மண்டபச் சிற்பங்களேயன்றிப் பாறைச் சிற்பங்களும் சில காணப்படுகின்றன. அவற்றுள், கண்ணன் மலை எடுத்து மழை தடுத்த வரலாற்றைக் குறிக்கும் சிற்பம் மிக்க சிறப்பு வாய்ந்தது. கண்ணன் உயரப் பிடித்த மலைக்குக் கீழ் ஆநிரைகளும் கோவலர்களும் வந்துநிற்பதாகக் காட்டப்பட்டுள்ள சிற்பம் நுண்ணிய வேலைப்பாடமைந்தது. இவை அனைத்தையும் நேரிற் காண்பவரே அங்குள்ள சிற்பக் கலையின் நுட்பத்தை நன்கு அறிந்து இன்புறுதல் கூடும்.

கி. பி. 7-ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 8-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் பல்லவ அரசனாக இருந்த இராஜசிம்மன் (இரண்டாம் நரசிம்மவர்மன்) என்பவன் எடுப்பித்ததே மாமல்லபுரத்தில் உள்ள கடற்கரைக் கோவிலாகும். இராஜசிம்மன் மகேந்திரனைப் போலக் குடைவரைக் கோவிலையோ, முதலாம் நரசிம்மவர்மனைப் போல ஒற்றைக் கற்கோவிலையோ அமைப்பதிற் பெருவிருப்பம் காட்டாது, கற்களை ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கிக் கோவில் கட்டுவதிலேயே கருத்தைச் செலுத்தினான். அங்ஙனம் அவனால் கட்டப்பட்ட புதுமுறைக் கோவில்களில் கடற்கரைக் கோவில் சிறிய அளவினது; காஞ்சி-கயிலாசநாதர் கோவில் பெரிய அளவினது. இவ்விருகோவில்களிலும் உள்ள விமான அமைப்புக் கவனிக்கத்தக்கது.

இதன் மிகப் பெரிய உருவமே தஞ்சைப் பெரிய கோவில் விமானம்.

ஆழ்வார் பன்னிருவருள் பூதத்தாழ்வார் இத்துறைமுக நகரிற் பிறந்தவர். இவர் தம் திருவந்தாதியில் மாமல்ல புரத்தைப் பாடியுள்ளார். கி. பி. எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருமங்கை ஆழ்வாரும் இப் பெருநகரைப் பாடி யுள்ளார்.

> "புலங்கோணிதிக் குவையோடு புழைக்கைம்மாக் களிற்றினமும்
> நலங்கோணவ மணிக்குவையுஞ் சுமந்தெங்கு நான்றேசிந்து
> கலங்களியங் கும்மல்லைக் கடன்மல்லைத் தலசயனம்
> வலங்கோண்மனத் தாரவரை வலங்கோள்ளேன் மடநெஞ்சே."

என்பது அவர் பாட்டு.

இன்றுள்ள மாமல்லபுரத்திற்கு மூன்றுகல் தொலைவில் சாளுவன்குப்பம் என்னும் சிற்றூர் இருக்கிறது. அங்குப் புலித்தலைக் குகைக் கோவில் என்னும் பெயருடன் சிறிய குடைவரைக் கோவில் ஒன்று இருக்கிறது. மிகச் சிறிய பாறை, உள்ளே குடையப்பட்டுள்ளது. அதன் மேற்புறம் திறந்த வாய்களையுடைய புலித்தலைகள் சுற்றிலும் செதுக் கப்பட்டுள்ளன. இச்சாளுவன்குப்பம் மாமல்லபுரத்தின் ஒரு பகுதியாக இருத்தல்கூடும் என்பது அறிஞர் கருத்து.

இதுகாறும் கூறப்பெற்றவையன்றி, வேறுசில குடை வரைக் கோவில்களும் சிறிய அளவில் இருக்கின்றன. ஒரு பாறையின்மீது கலங்கரை விளக்கம் இருந்த அமைப்புக் காணப்படுகின்றது. இப்பண்டை நகரம் கி. பி. 9-ஆம் நூற் றாண்டின் இறுதியில் ஏற்பட்ட சோழப் பேரரசர் காலத்தில் துறைமுகப்பட்டினமாக இருந்ததா என்பது திட்டமாகத் தெரியவில்லை. இதன் சிறப்பனைத்தும் பல்லவர் காலத் தோடு முடிவுற்றதாகக் கொள்ளவே இதுகாறும் கிடைத் துள்ள சான்றுகள் இடந்தருகின்றன.

பல்லவர் முயன்றமைத்த குடைவரைக் கோவில்கள், ஒற்றைக்கற்கோவில்கள், கற்கோவில்கள் என்னும் மூவகைக் கோவில்களையும் தன்னகத்தே பெற்றுச் சிற்பக்கலைக் கூடமாக விளங்கிய பழைய மாமல்லபுரத்தின் பெரும் பகுதி எவ்வாறு அழிந்தது என்பது இதுகாறும் தெரிந்துகொள்ள முடியவில்லை. புதைபொருள் ஆராய்ச்சியாளர் இத்துறை யிற் கவனம் செலுத்துவராயின், பல செய்திகள் புலனாகும்.

## அருஞ்சொற்பொருள்

சங்ககாலம் என்பது, ஏறக்குறையக் கி. பி. 300-க்கு முற்பட்ட சிலநூற்றாண்டுக்காலம். பெரும்பாண் - பெரும் பாணன். ஆற்றுப்படை - ஒருவன் மற்றொருவனை ஒரு வள்ளலிடம் ஆற்றுப்படுத்தல் (வழிப்படுத்தல்). பரி - குதிரை. பண்டசாலை - சரக்குகள் வைக்கும் இடம். கழங்கு-கழற்சிக்காய் வைத்தாடும் ஆட்டம். வட்டில் - கிண்ணம். சென்னபட்டினம் - சென்னை என மருவி வழங்குதல் போல, மாமல்லபுரம் மாமல்லை என்றும், மல்லை என்றும் மருவியது. மல்லன் - மற்போர்புரிபவன் ; வீரன். ஆநிரை - பசுக்கூட்டம். புழை - துவாரம். நான்று ஒசிந்து - அசைந்தாடி. கலம் - கப்பல். இயங்கும் - போய் வரும். மல்லை - மாமல்லபுரம். கடல் மல்லை - கடற்கரையில் உள்ள மாமல்லபுரம். தலசயனம் - பெருமாள் பள்ளிகொண்டுள்ள கோவில்; கடற்கரையில் உள்ளதினும் வேறானது என்பர்.

## கேள்விகள்

1. 'பட்டினம்' பற்றிப் பெரும்பாணாற்றுப்படையில் கூறப்பெற்ற செய்திகள் யாவை ?

2. பட்டினம், நரசிம்மவர்மன் காலத்திற் பெற்ற பெயர் யாது ? அஃது ஏன் அப்பெயர் பெற்றது ?

3. ஒற்றைக் கற் கோவில்களைப் பற்றி யாது அறிவீர் ?

4. மண்டபச் சிற்பங்கள், பாறைச் சிற்பங்கள் : குறிப்பு வரைக.

5. கோவில் அமைப்பில் இராஜசிம்மன் கையாண்ட புதிய முறை யாது ? அவன் அமைத்த கோவில்கள் எவை ?

6. இப் பாடப் பகுதியில் உள்ள திருமங்கையாழ்வாரது பாட்டின் கருத்து யாது ?

7. மாமல்லபுரத்திற் காணப்படும் மூவகைக் கோவில்கள் எவை ?

## பயிற்சி

1. மாமல்லபுரத்தின் பெயர்க்காரணத்தை விளக்கி, அதன் சிறப்புக்களை முறைப்படுத்தி உன் நண்பனுக்கு ஒரு கடிதம் எழுதுக.

2. 'மாமல்லபுரம் அன்றும்- இன்றும்' என்பது பற்றி ஓர் கட்டுரை வரைக.

3. எள்ளுருண்டை, சொல்லழகு, பல்லுடை, கல்லடி இவற்றைப் பிரித்துக் காட்டுக.

# 5. பகை தணித்த பாவலர்

வித்துவான், அன்பு கணபதி அவர்கள்,

துணைத்தமிழ்ப் பேராசிரியர், பச்சையப்பன் கல்லூரி, சென்னை.

பழந்தமிழ்ப் புலவர்கள் வள்ளல் பலரிடம் செல்வதும், அவர்களைப் புகழ்ந்து பாடுவதும், அவர்கள் தரும் பொருள்களைக்கொண்டு வாழ்வதுமான வாழ்க்கையினைப் பெற்றிருந்தனர் என்பது உண்மை. அப்புல்வர்கள் எக்காலத்தும் வறுமையாற் பீடிக்கப்பட்டிருந்தனர் என்பதும் உண்மையே. ஆயினும், மேற்கூறிய வாழ்வைத்தவிர வேறுசெயல் அறியாதவர்கள் என்று அவர்களை அவ்வளவு எளிதாக எண்ணிவிடக்கூடாது. அப்புலவர்கள் வறிய வாழ்க்கையினராயினும் அதில் செம்மை காத்து நின்றனர். பொருள் கொடுத்தார் எவரையும் புகழ்வதே அவர்கள் தொழில் என்று எண்ணிவிடலாகாது. நாடு, மொழி, மக்கள்மீது அவர்கள் கொண்டிருந்த பற்று அளவிடற்கரியது. அவர்கள் எவர்க்கும் அடங்காத - அறம் ஒன்றுக்கே கட்டுப்படக்கூடிய - இறுமாந்த வாழ்க்கை உடையவராயிருந்தனர்; தவறுசெய்பவர் அரசரேயாயினும் கண்டித்துத் திருத்தவல்ல உரம் படைத்திருந்தனர். நாட்டுமக்களின் நல்வாழ்வில் அப்புலவர்கள் கொண்டிருந்த நாட்டம் மிகப் பெரியது. அவர்கள் தனியொருவனைவிடத் தாய்த்திருநாடே பெரிது - அதன் மானங்காத்தலே முதன்மையானது என்ற தலையாய கொள்கை உடையவராயிருந்தனர்.

பொன்னி வளம்பெருக்கும் சோணாட்டில் அன்று கோவூர் ஒரு சிறந்த ஊராகத் திகழ்ந்தது. அவ்வூரில் செந்தமிழ்ப் புலவர் ஒருவர் தோன்றினார். அவர் சிறப்புப்பெயர் கிழார் என்பது. அவரது இயற்பெயர் தெரிந்திலது; கோவூரில் பிறந்த காரணத்தால் அவர் கோவூர்கிழார் எனப்பட்டார். கிழமை என்றால் உரிமை என்பது பொருள். நிலத்துக்கு உரிமை உடையவர்கள் - உழவர்கள். வேளாளர்கள் பழங்காலத்தில் 'கிழார்' என அழைக்கப்பட்டனர். எனவே, கோவூர் கிழார் வேளாளர் மரபில் வந்தவர் என அறிகிறோம்.

கோவூர்கிழார் இளமையில் கற்பன கற்றார்; கவிபாடும் வல்லமை பெற்றார்; பெரும்புலவரானார். நாட்டுப் பற்றும், மக்களிடத்து அன்பும் இயற்கையிலேயே இவரிடத்தில்

அமைந்து வளர்ந்தன. பிறர் செய்யும் பிழையினை-அவர் மன்னராயினும்-நல்ல முறையில் இடித்துக் கூறித் திருத்தும் இயல்பினையும் இப் புலவர் பெற்றிருந்தார்.

அக் காலத்தில் சோழநாட்டின் பெரும்பகுதியைப் புகார் நகரைத் தலைநகராகக்கொண்டு கிள்ளிவளவன் என்ற சோழ மன்னன் ஆண்டுவந்தான். இவன் தம்பி நலங்கிள்ளி என்பவன். அவன் சிறந்த வீரன் ; தமிழ்நலம் உணர்ந்த வன் ; தமிழ்ப் புலவரிடத்துப் பெருமதிப்பு உடையவனாகவும் விளங்கினான். அதே காலத்தில் உறையூரைத் தலைநக ராகக்கொண்டு நெடுங்கிள்ளி என்ற சோழன் சோழநாட்டின் மற்றொரு சிறுபகுதியினை ஆண்டுவந்தான். புகார்ச் சோழனும், உறையூர்ச் சோழனும் பங்காளிகள் ; ஒரே குடும்பத்தைச் - சோழ குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். எனி னும், இருவரிடையேயும் பங்காளிக் காய்ச்சல் மூண்டு நாளடைவில் வளர்ந்து முற்றியது. புகார்ச்சோழன் நாட் டின் பெரும்பகுதிக்குத் தலைவன் ; படைப்பலம் மிகுந்தவன். பங்காளிகளிடையே இகல் முற்றிய காரணத்தால் நெடுங் கிள்ளியை வென்று உறையூரின் கீழேயுள்ள சோழநாட் டின் சிறுபகுதியையும் கைக்கொண்டு, தான் ஒருவனே யாகச் சோழநாடு முழுமையும் ஆளக் கிள்ளிவளவன் விருப் பங்கொண்டான். விரும்பிய வளவன், உடனே சிறந்த வீரனான தன் தம்பி நலங்கிள்ளியை வரவழைத்து, உறை யூரை வென்று அடிப்படுத்துமாறு கட்டளையிட்டான். நலங் கிள்ளியும் போர்முரசு ஒலித்துப் பெரும்படையினை உட னழைத்து உறையூர் நோக்கி நடந்தான்.

தன்நகர் நோக்கி, நலங்கிள்ளி படையுடன் வருவதை நெடுங்கிள்ளி ஒற்றர்கள்மூலம் முன்னதாகவே அறிந்தான். புகார்ச் சோழனை நோக்க, நெடுங்கிள்ளி படையாலும் வலியாலும் குறைந்தவனே. எனினும், படைப்பலத்திற்குப் பணிய நெடுங்கிள்ளி மனம் மறுத்தது. நெடுங்கிள்ளியும் தமிழ்க் குலத்தில் வந்தவன் அல்லனோ? மானங் கெட வாழும் வாழ்க்கையைத் தமிழ்மனம் ஒப்புமா?

> " மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
> உயிர்நீப்பர் மானம் வரின் "

என்பது வள்ளுவர் வாக்கு அன்றோ? பணிய மறுத்த உள்ளம் எதிரியின் படைப்பலத்தையும் எண்ணிப்பார்த்

தது; தற்காப்புத் தேடலே சாலச் சிறந்தது என முடிவு செய்தது. எனவே, நெடுங்கிள்ளி செயலில் விரைந்தான்; உறையூரை விடுத்து நீங்கினன்; உறையூரினும் சிறந்த வலியுள்ளதான ஆவூர்க் கோட்டையைச் சென்றடைந்தான்; கோட்டைக் கதவுகளைத் தாளிட்டு அடைத்துக்கொண்டு உள்ளே தற்காப்புத் தேடிக்கொண்டான்.

நெடுங்கிள்ளி உறையூரில் இல்லை, ஆவூர்க் கோட்டை சென்றுவிட்டான் என்பதை அறிந்த நலங்கிள்ளி, உறையூர்க்குச் செல்லாது, தன் படையினை ஆவூர்க்குத் திருப்பி விட்டான். நலங்கிள்ளியின் படை சென்று ஆவூர்க் கோட்டையினை முற்றுகையிட்டது. முற்றுகை பல நாட்கள் தொடர்ந்தது. உள்ளிருப்பவன் கோட்டைக் கதவினைத் திறந்து வெளியில் வந்து எதிர்க்கவுமில்லை; வெளியிலிருந்தவன் கோட்டையைத் தகர்த்து உள்ளே சென்று கைப்பற்றவும் முயலவில்லை, வெளியிலிருந்த நலங்கிள்ளிக்கு ஆவூர்க் கோட்டையினைத் தகர்த்து உள்ளே செல்வதற்குப் போதிய படைவன்மை இருந்தது. ஆயினும் அவன் அது செய்தானில்லை. அந்தக் காலத்தில் முற்றுகைக்கு உட்பட்ட நகரம் நீண்ட நாட்கள் கதவு அடைத்துக்கொண்டு நிலைத்திருக்க முடியாது. முற்றுகை என்றால், கோட்டை நாற்புறமும் எதிரிப் படைவீரர்களால் சூழப்பட்டிருக்கும். அக் காலை ஒரு சிறுதுரும்பும் வெளியிலிருந்து உள்ளே செல்ல இயலாது. வெளியிலிருந்து உணவுப் பொருள் முதலியன உள்ளே வராமற்போனல், உள்ளிருக்கும் பொருள்களை வைத்துக்கொண்டு, வீரர்களும், பொதுமக்களும் உள்ளே எவ்வளவு காலம் வாழமுடியும்? ஒரு குறிப்பிட்ட கால அளவுக்குப் பிறகு உள்ளிருப்பவர் தாமே வெளிவந்து எதிரியிடம் சரண் அடையவேண்டும். வெளியில் முற்றுகையிட்டுள்ள வீரர்களின் நிலையோ இதற்கு நேர்மாறானது. எனவே, இந்தக் காரணத்தால், நலங்கிள்ளி நெடுங்கிள்ளியைத் தானே பணியுமாறு செய்யவேண்டும் என்று எண்ணினன். இவ்வெண்ணத்தால் நலங்கிள்ளி முற்றுகையைத் தொடர்ந்தான்.

முற்றுகை நீடித்தது. உள்ளிருந்த நெடுங்கிள்ளியோ வெளிவந்து நலங்கிள்ளியைப் பணிய மறுத்தான். இதன் விளைவு என்ன? துன்பமே. யாருக்கு? அரசனுக்கன்று; அல்லல் பொதுமக்களுக்கே. எப்படி? யானைகள் குளத்தில் படிந்து குளிக்கவில்லை; நெற்கவளம் முதலியவற்றை

வேளைக்குப் பெறவில்லை; வலிய கம்பங்களைச் சாய்த்து நிலத்தில் புரளுகின்ற துதிக்கைகளை உடையனவாய்ப் பெரு மூச்சு விட்டுச் சுழன்று இடியென முழங்குகின்றன. பசுங் குழவிகள் பாலில்லாது அழுகின்றன. பெண்கள் பூவில்லாத வெறுந்தலையை முடிக்கின்றனர். குடிக்கத் தண்ணீரும் கிடைக்கப்பெறாத குடிமக்கள், தங்கள் வீடுகளின் உள்ளே யிருந்து அலறி அழும் கூப்பீடு கேட்கப் பொறுக்காத நிலையில் உள்ளது. தண்ணீரும் கிடைக்கவில்லை என்றால், உள்ளிருந்த மக்களின் துன்ப நிலையை - அவல நிலையை வேறு எவ்வெழுத்துக்களால் காட்ட முடியும்? இதை உணர்ந்தும், நெடுங்கிள்ளி பணிய மறுத்த தன் எண்ணத் திலிருந்து சிறிதும் மாறினனில்லை.

இந் நிலையினைக் கோவூர் கிழார் கேள்வியுற்றார். அவரது அருளுள்ளம், 'மக்கள் அவலலைப் போக்கு' என ஆணை யிட்டது; புறப்பட்டு நேரே வந்து ஆவூர்க்கோட்டையினுள் புகுந்தார்; மக்கள் நிலையை நேரில் கண்டார். அவர் மனம் கொதித்தது; அவர் நெடுங்கிள்ளியிடம் சென்றார்; கண்டு பின்வருமாறு கூறினர்: "வலிய குதிரைப்படை மிகுந்த தோன்றலே, மக்கள் கூப்பீட்டைக் கேட்டாயா? கேட்டு வைத்தும், துன்பம்போக்க நினையாது சும்மா இருப்பதா? நீ அறவழி நிற்பது உண்மையானல் உன் மரபினன் - இன் றைய உன் பகைவன் - முன்னிலையில் சென்று, 'இக் கோட்டை உன்னுடையது,' என்று திறந்து சரணடைக; அல்லது, உனக்கு வீரமிருந்தால் போர் செய்து எதிரியை முறியடிக்கக் கோட்டையைத் திற; மக்களையும் பிற உயிர் களையும் காப்பாற்றுக. இரண்டும் செய்யாது, அரண்மனை ஒரு பக்கத்தில் நீ மட்டும் சுகமாயிருப்பது வெட்கத்திற்குரிய செயலாகும்".

கோவூர் கிழாரின் இவ்வரிய அருள் நிறைந்த மொழி களைக் கேட்ட நெடுங்கிள்ளி தன் தவறுணர்ந்தான்; கோட் டைமதிலைத் திறந்துவிட்டான்; தான் உறையூர் சென்று தங்கினன். கோட்டை நலங்கிள்ளி வசமாயிற்று. எனினும், குடிகள் நலமுற்றனர். கோவூர் கிழார் துடைக்க நினைத்தது குடிகளின் அல்லலைத்தானே? அது நிறைவேறியது. புலவர் மகிழ்வுடன் செல்வாராயினர்.

நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி ஆகிய இருவரிடையே நடந்த போர் அப்போதைக்கு ஒருவாறு முடிந்தது என்றா

லும், அவர்களுக்குள் இருந்த பகைமை உணர்ச்சி தணிய வில்லை. நெடுங்கிள்ளியின் ஆவூர்க் கோட்டையைக் கைப் பற்றி, ஆங்கிருந்து தன் படையினை மேலும் வன்மையாக்கிக் கொண்டான் நலங்கிள்ளி.

சின்னாள் சென்றதும், நெடுங்கிள்ளியை வெல்லுவான் வேண்டி நலங்கிள்ளி உறையூரை வந்து முற்றுகையிட்டான். இப்போது நெடுங்கிள்ளி முன்னிலைபோல் உறையூர்க் கோட் டையுள் அடைந்துகிடக்கவில்லை. ஆவூர் முற்றுகையின் போது புலவர் கோவூர் கிழாரால் தெருட்டப்பட்டவன் அல் லவா நெடுங்கிள்ளி? எனவே, அவன் உறையூரைவிட்டு வெளிப்பட்டு வந்து, நலங்கிள்ளியைப் போரில் எதிர்த்து நின் றான். கோவூர்கிழார் இதனை அறிந்தார். அப்போதும் புலவர் வாளா இருக்கவில்லை; மக்கள் நலமே கருத்தில் கொண்டார்; 'இருவேறு அரசர்களின் தனிப்பட்ட - பொரு ளற்ற - இகல் காரணமாக இருபக்கத்திலும் எண்ணிறந்த வீரர்களும், யானை முதலிய உயிர்களும் வீணே அழிவதா? இப்பெரிய உயிர்வதை நடக்கவிருப்பதைத் தடுத்தலே நமது கடமை' என உணர்ந்தார். ஆனால், புலவர் அதை நிறை வேற்ற இப்போது கையாண்ட செயல்முறையும் பேச்சு முறையும் முன்னிலும் வேறுபட்டனவாயிருந்தன. முதற் போரில், வலிகுன்றி முற்றுகைக்கு உட்பட்டிருந்த மன்ன னை நெடுங்கிள்ளியிடம் சென்று பேசினார். ஆனால் இப் போது புலவர் போர்க்களத்துக்கு ஓடோடிச்சென்றார்; மாறு பட்டு எதிர்நிற்கும் மண்ணாசை கொண்ட இருவரின் இடையே நின்றார்; இருவரையும் நோக்கி விளித்துத் திறமாக - நயமாகப் பேசினார்.

"மன்னர்களே! உங்கள் இருவரில் யாரும் வெண்மை யான தோடுகளையுடைய பனம்பூ மாலையையோ அன்றி, கரிய கிளைகளையுடைய வேப்பமாலையையோ அணிந்திருக்கவில்லை. நீங்கள் இருவீரும் ஆத்திமாலையே சூடியிருக்கின்றீர்கள். (பனம்பூமாலை சேரர்க்கும் வேப்பமாலை பாண்டியர்க்கும் ஆத் திமாலை சோழர்க்கும் உரியன. ஆத்திமாலை சூடிய அவர்க ளிருவரும் சோழர் குடும்பத்தில் வந்தவர் என்பதைப் புலவர் குறிக்கின்றார்.) ஆதலின், உங்களில் யார் தோற்றாலும் தோற்பது உங்கள் குடியே தவிர வேறில்லை. போரில் இரு வரும் வெல்வதென்பது நடவாதது. எனவே, இச் செயல் உங்கள் குடிப்பெருமைக்கு இழுக்கையே விளைவிக்கும். மேலும், இப்போர் உங்களன்ன வேறு மன்னர்களால்

நகையாடப்படும். இவற்றை உணர்ந்து உங்கள் குடிப்பெருமையைக் காக்கவாவது இப் போரினைக் கைவிடுங்கள்''.

புலவர் எண்ணம் கைகூடியது. மன்னர் இருவரும் போரைக் கைவிட்டனர். மாறுபாடு நீங்கி, புலவரால் ஒன்றுபடுத்தப்பட்டனர். வீரர் விண்ணுலகு செல்வதினின்று தப்பினர். பகை தணித்த பாவலர் அரசர் இருவரையும் வாழ்த்தினர்; குடி மக்களின் வணக்கத்தையும் வாழ்த்தையும் பெற்றுத் தாம் மகிழ்ந்தார்.

## அருஞ்சொற்பொருள்

வறிய- ஏழ்மையான. இறுமாந்த - பெருமை பாராட்டிய. செம்மை காத்து - நேர்மையைப் பாதுகாத்து. திகழ்ந்தது - விளங்கியது. கிழமை- உரிமை. இகல் - பகை. சால - மிகவும். குழவி - குழந்தை. அல்லல்- துன்பம். வெல்லுவான்வேண்டி-வெல்லவேண்டி. தெருட்டப்பட்டவன்- தெளிவிக்கப் பெற்றவன். இழுக்கு - குற்றம். பகை தணித்த பாவலர் - கோவூர் கிழார்.

## கேள்விகள்

1. பழந்தமிழ்ப் புலவர்கள் இறுமாந்த வாழ்க்கையுடையவராயிருந்தவர் என்பது எங்ஙனம் புலனாகின்றது?

2. "மயிர்நீப்பின் ........... வரின்"—என்ற குறட்பாவின் பொருள் யாது?

3. நெடுங்கிள்ளி என் ஆவூர்க் கோட்டைக்குச் சென்றான்?

4. முற்றுகையின்போது நாட்டின் நிலை எவ்வாறிருந்தது?

5. புலவர் நெடுங்கிள்ளிக்கு உரைத்த நல்லுரை யாது?

6. புலவர் எதனைத் தம் கடமை என எண்ணினார்?

7. மன்னர் இருவரையும் களத்தில் கண்டு பாவலர் உரைத்தது யாது?

## பயிற்சி

1. இப் பாடத்தின் துணையைக்கொண்டு பழந்தமிழ்ப் புலவரின் நல்லியல்புகளைத் தொகுத்து வரைக.

2. பகை தணித்த பாவலர் பகை தணித்த விதத்தைப் பற்றிப் பத்து வரிகள் எழுதுக.

3. சிறுகுறிப்பு வரைக: கோவூர்கிழார், நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி, முற்றுகை, முற்றுகையின்போது நாட்டின் நிலை.

86826

## 6. பாரி மகளிர்

வித்துவான் G. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள், M.A., B.L.

*தமிழ் ஆராய்ச்சித் தலைமைப் பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.*

பாரி என்பவன் ஒரு குறுநில மன்னன்; தமிழ் நாட்டு வேளிருள் மிகச் சிறப்பெய்தியவன். அவன் ஆண்டுவந்தது பறம்பு நாடு. அவனது அறம்புனை பறம்பினை அறியாதார் இல்லை. அவன் மலைநாட்டுச் செல்வவளம் எண்ணினும், இனித்து இறும்பூது கொள்ளவைக்கும். நெற்றிவேர்வை நிலத்தில் விழ உழவர் உழுது உழைத்தல் வேண்டா. மூங்கில் தானாகவே விளைந்து முதிரும். அருவி ஒருபுறம் கல்லலைத்து அதிரும். தீஞ்சுளைப் பலாப்பழம் கொள்ளை கொள்ளையாய்க் காய்த்து உதிரும். அள்ளக் குறையாது வள்ளிக்கிழங்கு வெள்ளமாய்க் குவிந்துகிடக்கும். பயிலிருஞ் சிலம்பில் பசுந் தேன் அருவியாய்ப் பதைத்தோடிப் பாய்ந்துவரும். பூந்தேன் புகுந்த நன்னீர், குண்டு குழியெல்லாம் சுனையாகச் சுரந்து நிற்கும். பயில் பூஞ்சோலையில் மயில் எழுந்து ஆலும். காலமன்றியும் மரம், பழம் உதவும். அவ்வியன்மலையின் சாரல்களில் வேங்கைமரம் ஓங்கி நிற்கும். சந்தனக்கட் டையை இந்தனமாகக் குறத்தி அடுப்பில் உலையேற்றிவைப் பாள். ஆரத்தின் நறும்புகை பூஞ்சினை தவழும். வேங்கை யின் பூமணமும் சூழலெல்லாம் கமழும்.

கருவிரற் கடுவனும் செம்முக மந்தியும் கனிக்குக்கனி கொடுத்துக் களித்துநின்று கொஞ்சும்; மூங்கிலின் உச்சி சென்று துஞ்சும். மழைமிசையறியா அம் மால்வரை யடுக் கத்து இழையணி மகளிரை எங்ஙன் எடுத்தியம்புவது? மழைக்கண்ணினர், ஏந்தெழில் முகத்தியர், இன்னகை வாய்ச்சியர், விரும்பி நின்று விருந்தெதிர் கொள்வர்.

பாரி பறம்பின் பளிக்குச்சுனைநீரைப் பருகாத புலவன் அருமையிலும் அருமை. தேங்கமழ் புதுமலர் பூத்த அப் பைஞ்சுனைநீர் தித்திக்கும்; நெல்லியைத் தின்று பாரி பறம் பிற் பனிச்சுனைத் தெண்ணீரை ஒருகை அள்ளி அருந்த எண் ணுதார் யார்தாம் உண்டு? அருவி மருவிய அவ் வண் ணல் நெடுவரை, பாரியின் புகழ்போல், வானுறவோங்கிக் கானுற மணந்தது, மாரி பெய்யினும் பெய்யாதொழியினும் அவன் சுவை சுரந்த சுனையும் மலைமணந்த அருவியும் ஒரு

நாளும் வற்றியதில்லை. வான்மாரி குன்றினும் அவன் மலைத் தேன்மாரி குன்றியதில்லை. நாடெங்கும் கருப்பு நலியும்; அவன் பொருப்புமட்டும் செல்வவளம் மலியும். மைம்மீன் (சனிக்கோள்) வானத்திற் புகைந்தால் என்ன, திசைமுகம் யாவும் தூமம் தோன்றினுல் என்ன, தென் திசைக் கோடிக்கு வெள்ளி ஓடினுல் என்ன, பாரியின் பறம் புக்கு யாதொரு குறையும் இல்லை. வயல் எல்லாம் நீர் நிறையும், புதல் எல்லாம் பூ மலரும். கன்று நிறைந்த மன் றத்தில் பசுநிரை பசும்புல் ஆரும். பிள்ளை வெருகின் முள்ளெயிறு போல முல்லைக்கொடி குலுங்க முகைகள் அரும்பிடும். இத்தகைய செல்வம் அளித்தது பாரியின் செங்கோல். அவன் ஆட்சியில் மழை தவறியதில்லை. சான்றோர் பல்கி அவன் பறம்புநாடு செல்வங் கொழித்தது. அவன் நாடு முந்நூறு ஊர்களைக் கொண்டிருந்தது. 'முத் தமிழுக்கே முந்நூறு ஊர்களும்' என்று சித்தம் மகிழ அவன் செங்கோலோச்சினுன்.

பாரில் நிகரிலாக் கொடையாளி பாரி ஒருவனே. உரைப்பார் உரைப்பவை எல்லாம் பாரியின் புகழாகவே இருந்தன. செந்நாப் புலவரெல்லாரும் 'பாரி, பாரி என்று அவன் ஒருவனையே பாடினர். வண்மையில் பாரிக்கு அடுத்தது மாரி ஒன்றுதான். தன் மலையின் தண்சுனை நீரினும் இனியவன் வேள் பாரி. புலவோர்க்குப் புகலிட மாய் விளங்கிய வள்ளல் அவன். பொய்யில் புலவராய கபிலர் அவன் மெய் நண்பராக விளங்கினுர். பாரி இரவ லர்க்கும், கூத்தர், பாணர், விறலியர்க்கும் வரையாது வாரி வழங்கினுன்; புலமையற்ற மடவர், மெல்லியர் அவனை அடையினும் 'இல்லை' என்னுது ஈகை புரிந்தான். உயிர்க ளிடத்தில் பேரருள் காட்டிய பெருந்தகை பாரி. ஆறறிவிற் குறைந்த ஓரறி வுயிராகிய முல்லைக் கொடிக்கும் அவன் உள்ளம் உருகிற்று. தேரிற் சென்றுகொண்டிருந்த பாரி, ஒரு காட்டினிடையே முல்லைக் கொடியொன்று பற்றுக் கோடின்றித் தத்தளித்து நடுங்குவதைக் கண்டு, தான் நடுங்கினுன். முன்பின் எண்ணுது தன் தேரை இழுத்து, அதன் அருகே நிறுத்தி, அதனைப் பற்றச் செய்து, அதன் நடுக்கத்தை உடனே களைந்தான். தேரிலே கொடி படர்ந் தது. பாரிலே அவன் புகழ் படர்ந்தது. ஓர் அணி கொடித் துயர்களையத் தன் மணிநெடுந்தேரைக் கொள்க என்று சொல்லிக் கொடுத்த பரந்துமேம்பட்ட தலைமையினை யுடையவன் பாரி. ஆதலின், உலகம் உள்ளளவும் அவன்

பெயர் வண்மையின் உயர்ந்த எல்லையாக விளங்கிக்கொண் டிருக்கிறது. ஊருடன் இரவலர்க் கீத்த அவ் வுத்தமனைத் "தேருடன் முல்லைக் கீத்த செல்லா நல்லிசைப் பறம்பிற் கோமான்," என்று செந்தமிழ்ப் புலவர் கபிலரும் பாடினார். "கொடுக்கிலாதானைப் பாரியே என்று கூறினும் கொடுப்பாரிலை," என்று சுந்தரரும் தேவாரத்திற் போற்றினார். "பாரியான கொடைக் கொண்டலே" என்று அருணகிரி நாதர் திருப்புகழிலே திகழவைத்தார்.

அவ் வள்ளல் ஒருகுறையும் இல்லாது உரன் திகழ, உள்ளம் உவப்ப, ஒளியெங்கும் படர்ந்துசெல்லப் பெருவளம் பழுனிய மலையிற் பெருவாழ்வு வாழ்ந்துவந்தான். அவனுக்கு இரு கண்போன்று இரண்டு பெண்குழந்தைகள், **அங்கவை, சங்கவை** என்பவர், திருவன்ன உருவினராய்க் கபிலரிடம் கல்வி கற்றுக் கலைநிரம்பி விளங்கினர்.

நல்லவை செய்தல் ஆற்றாத இவ் வுலகம், அல்லவை செய்ய ஆவலுடன் குதித்துவரும். "பார்த்தால் இந்தப் பாரி ஒரு குறுநில மன்னன்தானே, இவனுக்கு இத்தனை புகழா? இத்தனை பெயரா? இத்தனை நலமா?" என்று புழுங்கினர் சேர, சோழ, பாண்டியர் மூவரும்; குதிரை, தேர், காலாட்படைகளைக் கூட்டினர்; போரினை மூட்டினர்; பாரி பறம்பினை முற்றுகையிட்டனர். கொடைமடம்பட்ட பாரி படைமடம்பட்ட பயங்கொள்ளியில்லை; வீரத்தோடு மூவேந்தரையும் தடுத்தான்; மானத்தொடு தன் மலையினைக் காத்தான். பாணனும் பாடினியும் பாடியாடிச் செல்லும் பறம்பினுள்ளே நாணமில்லா முடிவேந்தர் நணுகவும் அஞ்சி ஒதுங்கினர்; படைப்பழி தாரா மைந்தினனான பாரியின் படைகண்டு பதுங்கினர். கபிலரும் பாரியுடன் இருந்து வேண்டுந் துணைபுரிந்தார்; பறவைகளைப் பழக்கி நெற்கதிர் கொண்டுவந்து குவிக்கச் செய்தார். உணவுக்கு வாடாது பறம்புக் கோட்டையினுள்ளிருந்து போரினைத் தொடர்ந்தான் பாரி.

வானிலே திங்கள் வெண்ணிலவைச் சொரிந்தது. அறக்கொடையான் பாரி முன்னர்ப் புறக்கொடை காட்டிப் புவி மன்னர் புழுங்கினர்; உணவின்றி வருந்தினர்; கண் இமை பொருந்திலர்; மானமோ மலையேறிவிட்டது. மூவரும் கூடிச் சதி செய்தனர். வெண்கதிர் மதியம் விரட்டிய இருள் எல்லாம் பொன்முடி வேந்தர் உள்ளத்தே புகுந்து மண்டி மருட்

டியது. நிலாக்காலம் கழியுமட்டும் அவர்கள் காத்திருந்தனர். அமாவாசை இருளும் வந்து கவிந்தது. முடிவேந்தர் மூவேந்து நின்ற சூழ்ச்சியும் பலித்தது; உருமாறினர்; வீரம் களைந்து சீரை சுற்றினர்; வேடம் பற்றினர்; வேள்பாரியின் முன் வந்துற்றனர்; வஞ்சம் செய்து பாரியைக் கொன்றனர்; தமிழின் மாண்பினை மண்ணுற வீசினர். அவரது செயல், தமிழ்நாட்டு ஒற்றுமைக்கே உலைவைத்ததுபோலாயிற்று. கொடிக்கும் இரங்கும் கோமானை அக்கொடியோர் கொல்ல அவன் செய்த குற்றம் யாது? பாரியோ சிந்தையால், செய்கையால் ஒரு தீவினையும் செய்திலாதவன். குற்றமின்றி உரிமையுடன் அவன் குலவிவந்த வாழ்க்கையே குற்றமாயது. மறுவின்றி வாழ்வார் இம் மாநிலத்தில் மறைவது மறலி கைப்பாசத்தால் அன்று; மனிதன் பொய்ந் நேசத்தாலேயே போலும்!

பாரி விழுந்ததும் அவன் பறம்பு சின்னபின்னமாய்ச் சிதைவுற்றழிந்தது. பாரிமகளிரை அழைத்துக்கொண்டு கபிலர் வேறிடம் தேடி நீர்மலிகண்ணராய் நெடுவழி நடந்தார்; ஒரு நாள் மாலைப்பொழுதில் களைப்பு மேலிட்டு ஓரிடத்தில் தங்கினர். பாரிமகளிர் துவண்டகொடிபோல் துயருழந்திருந்தனர். நித்திலக்குவையை நெகிழ்த்துவிட்டது போல் நீலவானில் மாலைமதியம் மேலுற எழுந்தது. தமது தந்தையின் பறம்பு சேணிலே சிறுத்துத்தோன்றக் கண்டனர்; கண்ணீர் கொண்டனர். ஆ! ஒரு திங்களுக்குள்ளே அப் பெண்களுக்கு உலகமே புரண்டு தலைகீழாய்விட்டது. தம் வாழ்வெல்லாம் கெட்டது. தந்தை பாரி எங்கே? அவன் பறம்பு எங்கே? நிலவுமட்டும் நிலையாகச் சொந்தம் பாராட்டி வருகிறது. அதிலுங்கூட எவ்வளவு மாற்றம்! சென்ற திங்கள் இங்கிதமாய்க் குழைந்து இன்பம் ஊட்டிவந்தது. இன்றுவந்த திங்கள் வெருட்டி யெழுந்து வெகுள்கின்றது. ஏன்? கடந்த திங்கள் வெண்ணிலவில் பறம்புமலை திறம்பட ஓங்கித் திகழ்ந்தது; வளம் சுரந்து வண்மை விளைத்தது. தந்தை பாரி சந்தத் தமிழ் புரந்து, முந்திய உரிமை முறைமையிற் கொண்டு, தன் கோவிலில் இனிதிருந்தான். சுடருடை மதியமன்ன சுந்தர வதனியார், பாரி மகளிர், இடர் என்பதே இன்னதென் றறியாத இன்ப வாழ்க்கையில் மிதந்து உலாவினர். அடலரியன்ன தந்தையின் பார்வையில் அருமையாக வாழ்ந்துவந்தனர்; வெண்ணிலா மகிழ்ச்சியூட்டியது.

மறுதிங்கள் வெண்ணிலவில் எல்லாம் மாயமாய்ப் போயொழிந்தது. தந்தை பாரி பாரினை நீத்தான். சந்தத் தடவரையும் பாழ்பட்டுச் சாய்ந்தது. பாரி மகளிர் ஒதுங்க நிழலின்றி வெதும்பி யுருகினர். இன்பத்தில் இன்பம் விளைக்கும் வெண்ணிலவு துன்பத்தில் துன்பமுமே விளைத்தது. ஆற்றுநீர் அறலரித்து மெல்லிதாய் ஓடுதல் போல், அன்னார் உடலை உருக்கி உயிரை வாட்டிய உணர்ச்சிக் கவி ஒன்று அவ் வெண்ணிலவிலே வெளிவந்தது. அவலச்சுவை யரித்து உணர்ச்சி மயமாய் உள்ளம் உடைந்து ஒழுகிய அப் பாடலில் உயர்வு நவிற்சியோ, உவமை நயமோ, அணியோ, அலங்காரமோ, யாதுதான் இருக்க முடியும்! ஆயினும், கபிலரிடத்திலே கற்றுவந்த மாணக்கியர் கவிபாடினல் அது எளிதாயிருப்பினும், அவ்வளவு வறுவிதாகவோ இருந்துவிடும்?

"அற்றைத் திங்கள் அவ்வெண் ணிலவின்
எந்தையும் உடையேம் எம்குன்றும் பிறர்கோளார்
இற்றைத் திங்கள் இவ்வெண் ணிலவின்
வென்றெறி முரசின் வேந்தர் எம்
குன்றும் கொண்டார்யாம் எந்தையும் இலமே".

அருஞ்சொற்பொருள்

வேளிர் - தமிழ்நாட்டுப் பகுதிகளை ஆண்ட ஒருசார் குறுநிலமன்னர். அறம்புனை பறம்பு - தருமம் நிறைந்த பறம்பு மலை. இறும்பூது - ஆச்சரியம். கல் அலைத்து - கற்களைப் புரட்டி. வெள்ளம் - மிகுதி. பயில் - பழகுகின்ற. இருஞ்சிலம்பு - பெரிய மலை. குண்டு - ஆழம். ஆலும் - ஆடும். சாரல் - பக்கம். இந்தனம் - விறகு. ஆரம் - ஒருவகைக் காட்டுமரம். சினை - கிளை. சூழல் - பக்கத்தில் உள்ள இடம். கடுவன் - குரங்கு. துஞ்சும் - தூங்கும். மழைக்கண் - மதர்த்த கண்; செழிப்புடைய கண். தேம் + கமழ. தேங்கமழ்- தேம் - தேன். கருப்பு - பஞ்சம். பொருப்பு - மலை. தூமம் - தூமகேது என்னும் வால் நட்சத்திரம். வெருகு - காட்டுப்பூனை. வள் எயிறு - கூரிய பல். முகை - அரும்பு. பல்கி - நிறைந்து. பாணர் - இசை பாடுவோர். விறலியர் - நடிக்கும் பெண்டிர். செல்லா நல்லிசை - அழியாத நற்புகழ். பழுனிய - முற்றிய; முதிர்ந்த. கொடைமடம் - வரையாது கொடுத்தல். படைமடம் - போரில் புறங்கொடுத்தல். மைந்தினன் - வல்லமையுடையவன். சீரை - ஆடை; மாற்றுவேடத்துக்குரிய ஆடை. மறலி - யமன். நித்திலம். முத்து. சேணிலே - நெடுந்தொலைவிலே. வெருட்டி - துரத்தி. அறல் - கருமணல். அவலச்சுவை - அழுகைச் சுவை. கறங்குதல் - ஒலித்தல்.

## கேள்விகள்

1. பறம்பு மலை எவ் வளங்களை உடையது?

2. பறம்பு மலையிற் காணப்படும் காட்சிகள் எவை?

3. பாரியின் செங்கோலால் விளைந்த நன்மைகள் எவை?

4. பாரியின் புகழ் நாட்டில் பரவியதற்குக் காரணங்கள் யாவை?

5. பாரியைப் பாராட்டிக் கூறிய புலவர் யாவர்?

6. மூவேந்தர் பறம்பினை முற்றுகையிடக் காரணமாயிருந்தவை எவை?

7. பாரி எவ்வாறு இறந்தான்?

8. பாரிமகளிர் தந்தையோடு வாழ்ந்த நாளில் வெண்ணிலவு எவ்வாறு இருந்தது?

9. நாட்டை இழந்தபின்பு முழுவெண்ணிலவை நோக்கிப் பாரிமகளிர் கூறியன யாவை?

## பயிற்சி

1. 'பாரிமகளிர்' என்ற இப்பாடத்தைப் பாரிமகளிரே கூறுவது போல அமைக்க.

2. இப்பாடப் பொருளைச் சுருக்கி ஒன்றரைப் பக்கத்தின் மிகாமல் எழுதுக.

3. பொருள் கூறுக: இறும்பூது, கடுவன், துஞ்சும், ஆலும், ஆடும், குண்டு, மழைக்கண், பொருப்பு, சுருப்பு, தூமம், முகை, பல்கி, பாணர், படைமடம், சீரை, அவலம், விறலியர்.

4. வாக்கியங்களிற் பயன்படுத்துக:—இறும்பூது, நறும்புகை, வானுற, தேன்மாரி, பேரருள், வண்மை, செந்தமிழ், பாடியாடி, குற்றமின்றி, அருமையாக, மெல்லியதாய், உயர்வுநவிற்சி.

5. பிரித்துக் காட்டுக:— அவ்வளவு அவலச்சுவை, வெண்ணிலவு, ஆற்றுநீர், அறலரித்து, மகிழ்ச்சியூட்டியது, காத்திருந்தனர், கைப்பாசம், நெற்கதிர், பறம்புக்கோட்டை.

# 7. மலை வாசம்

தமிழ்ப் பெரியார், திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள்,

சென்னை.

மலைவாசத்தைப் பற்றிய நினைவு இன்று நமக்கு எற்றுக்கு உண்டாயிற்று? காலம் வேனிற்காலம். கடற்கரையில் உலா. அங்கே பலர் கூடுவதும் பலதிறப்பேச்சுப் பேசுவதும் வழக்கம். ஒருபோது, 'மலைவாசம்' என்று ஓர் ஒலி நமது செவியிலுற்றது. 'மலைக்குப் போகிறேன்' என்று ஒருவர் சொற்றதும், 'மலையினின்று வருகிறேன்' என்று மற்றொருவர் புகன்றதும் கடற்காற்றின் வேகத்தால் நமது செவியில் விழுந்தன. பொதுவாக மலை என்பது எம்மலை என்னும் ஐயம் நமக்கு நிகழவில்லை. நீலகிரியை 'மலை' 'மலை' என்று நகரவாசிகள் சொல்லிக் கொள்வது நமக்குத் தெரியும்.

ஐரோப்பியருள் பலர் வேனிற்காலத்தில் தமக்கு உறைவிடமாக நீலகிரியைக் கொண்டுள்ளார். அவரைத் தொடர்ந்து நம்மவர்களிற் சிலர் ஆண்டுச் செல்கிறார். இவர் இந் நாளில், நீலகிரியை 'மலை' 'மலை' என்று வழங்கலாயினர். முன்னை நாளில் 'மலை' என்பது திருப்பதிமலை என்று கொள்ளப்பட்டது. இன்னும் பழைய உலகில் வாழ்பவரது கொள்கை மாறுபடவில்லை.

ஐரோப்பியர் நீலகிரிமலை நோக்கிச் செல்வதைக் கண்டு அவர் பின்னே 'மலை-மலை' என்று ஓடும் நம்மவருள், 'மலைவாசமும் மேல்நாட்டவரிடமிருந்து பயின்ற கல்வித் துறைகளுள் ஒன்று' என்று கூறுவோரு மிருப்பர்; காலத்தின் கோலத்தை என்னென்று கூறுவது? மேல் நாட்டு நூல்களைப் பயின்றவர் கற்றவர் என்றும், இந்நாட்டு நூல்களைப் பயின்றவர் கற்றறியா மூடர் என்றும் சொல்லப் படுங் காலமன்றோ இக் காலம்? வயிற்றின்பொருட்டுக் கல்வி பயிலும் காலமன்றோ இக் காலம்? பிறந்த நாட்டிடைப் பற்று உண்டுபண்ணாத கல்வியைப் பயில்வோர் என்னதான் சொல்லமாட்டார்? இயற்கைக் கல்விப் பயிற்சி அருகிவரும் இந் நாளில் நம் முன்னோர் மலையில் வாழ்ந்து இன்புற்றதை நினைவுபடுத்தவே இன்று மலைவாசத்தைப் பற்றி எழுதப்புகுந்தோம். பண்டைத் தமிழ்மக்கள்

நிலத்தை நான்கு வகையாகப் பிரித்தார்கள். அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்பன. இப் பிரிவைப் பற்றி எழுந்த வழக்கே நானுவித உலகம் என்பது. இவ் வழக்குத் தமிழ்நாட்டிலே தோன்றியபோது, மேல்நாட்டில் மனிதர் எவ் வுணர்ச்சியோடு உலவினர் என்னும் வினவைச் சரித்திரக்காரர்களை நோக்கிப் பொறித்தல்வேண்டும். தமிழ்மக்கள் வகுத்த நால்வகை நிலத்துள் முதன்மையது குறிஞ்சி. ஆசிரியன்மாருட் சிலர் சிற்சில காரணம் பற்றியும், தாம் விரும்பியவாறும் நிலங்களை முறை பிறழவும் ஓதியிருக்கிறார். எவர் எவ்வாறு ஓதினும், குறிஞ்சி முதன்மையது என்பதை அறிஞர் மறுக்கமாட்டார். குறிஞ்சி என்பது மலையும் மலைசார்ந்த இடமுமாம். நாம் குறிஞ்சிக்குப் பதிலாக மலை எனக் கூறிச்செல்வோம். குறிஞ்சி நிலத்துக்குரிய முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் முதலியவற்றைத் தொல்காப்பியம் முதலிய பண்டைத் தமிழ்நூல்கள் விரித்துக் கூறுகின்றன.

மனித வாழ்வு முதன் முதல் தொடங்கப்பட்ட இடம் மலையேயாகும். இஃது அறிஞர் பலராலும் ஒப்பமுடிந்த உண்மை. மலையிலுள்ள மூங்கிலைக்கொண்டே மக்கள் முதன் முதல் முகத்தல், நீட்டல் முதலிய அளவைப்பொருள்கள் செய்தார்கள்; வேய்ங்குழல் கண்டார்கள்; கம்பு செய்தார்கள்; வில் செய்தார்கள்; வீடுகட்டினார்கள்; வேறுபல மலைபடு பொருள்களாலும் வாழ்க்கையை ஒழுங்குபடுத்திக்கொண்டார்கள். நம் முன்னோர் அங்கிருந்தே வானசாஸ்திரம் பயின்றார்; வைத்தியம் கற்றார்; கடவுளுண்மை கண்டார்; அரசு வகுத்தார்; இசை பயின்றார். அவைகளைப்பற்றி ஈண்டு ஆராய்ச்சி செய்யவேண்டுமென்பது நமது நோக்கமன்று.

கடவுளின் இயற்கை வடிவாய் இருப்பது மலை. அதில் விளையும் பொருள்களும் இயற்கை மயமாய் இருப்பன. அங்கே பிறக்கும் அருவியும் ஆறும் இயற்கையின் ஊற்றும். மலையில் வாழும் மக்களும் இயற்கைவடிவமாய் இலங்குவோர். மலையும், அதன் உள்பொருளும், அதன்கண் உறை உயிரும், பிறவும் கடவுள் வடிவான இயற்கைவண்ணமாயிருப்பன. இயற்கை மணம் நீங்கப்பெறாத மலையில் வாழ்வதை எவரே வெறுப்பர்?

பண்டைத் தமிழ்மக்கள் மலையின் சிறப்பை உணர்ந்து அதன்கண் வாழ்ந்துவந்தார்கள். அவர்கள் மலையில் வதிந்து

தாங்கள் கண்ட காட்சிகளையும், பெற்ற இன்பங்களையும் நூல்களாக எழுதினார்கள். மலையைச் சிறப்பித்துக்கூறாத நன்னூல் தமிழில் இல்லை என்றே சொல்லலாம். மலையின் இயற்கை இன்பத்தைத் தமிழ்ப் புலவர்கள் எவ்வெவ்வழியாகவோ பாக்களில் இறக்கி நமக்கு உதவி இருக்கிறார்கள். அவர்கள் வாழ்க!

மலை பூமியினின்றும் ஓங்கலாக மக்கள் வாழ்வுக்கெனக் கடவுளால் அமைக்கப்பட்ட சிறந்த மாளிகை. அம்மாளிகையில் மக்கள் வாழ்வுக்குரிய பொருளெல்லாம் இயற்கையாகவே தோன்றியிருக்கின்றன. விதவிதமான பூக்கள் மலர்கின்றன. பலதிற மூலிகைகள் வளர்கின்றன; பறவைகள் பறக்கின்றன; விலங்குகள் வாழ்கின்றன; பழங்கள் கொத்துக்கொத்தாகத் தொங்குகின்றன. தினை முதலிய தானியங்கள் பயிராகின்றன. அருவிகள் ஓடுகின்றன. மனத்தைக் கவர மயிலின் ஆட்டமும் மானின் ஓட்டமும் சாலும். இத்துணைப் பொருள்களைத் தாங்கும் மலையில் வாழ்பவருக்கு வறுமை உண்டோ? இக் கருத்துப் பற்றியே கச்சியப்ப முனிவர் தணிகைப் புராணத்துள் ஒரு செய்யுள் நாட்டுப் படலத்துள் பாடியிருக்கிறார். அச் செய்யுள் வருமாறு:

'தேனும் சேந்தினை இடிகளும் தீஞ்சுவைக் கனியும்
ஊனும் துய்ப்பன ; உடுப்பன மரவுரி தழைகள் ;
வானுந் தோய்சுனை ஆடுவ ; மணிவரை இருப்ப,
ஏனஞ் சூழ்ந்தகுன் றவர்க்கோரு நல்குர வின்றே.'

உணவுக்கும், உடைக்கும், நீராடுவதற்கும், இருத்தற்கும், பயன்படுவன இயற்கைப் பொருள்களாகவே இருப்பது கவனிக்கத் தக்கது.

சகோதரர்களே! செய்யுளை உற்றுநோக்குங்கள்: இயற்கை வாழ்வின் பெருமையை உன்னுங்கள்; மலைவாசிகளுக்கு வறுமை யில்லை யென்று ஆசிரியர் கூறியிருப்பதைக் கருதுங்கள். இப்பொழுது நாகரிகம் பழுத்த இந் நாளில் வயிற்றுக்குக் குறைவறச் சோறு கிடைக்கிறதா? மக்கள் வறுமை நரகத்தில் வீழ்ந்து வருந்துகின்றார்கள். மலைகளிலிருந்து இயற்கைப் பொருள்களை உண்டு, வறுமை அறியாது நம் முன்னோர் வாழ்ந்தனர். இந் நாளில் வயிற்றுக்காகக் கல்வி; வயிற்றுக்காகத் தொழில்; வயிற்றுக்காக எல்லாம். ஆனால் பட்டினி, வறுமை. செயற்கை இயந்திரங்கள், ரெயில்கள், தந்திகள், விசிறிகள், விளக்குகள், கூத்து

கள், நாடகங்கள், சினிமாக்கள், நாவல்கள், வேறு பல ஆட்டங்கள், பாட்டங்கள் வறுமையை வளர்த்துவருகின்றன. மலைகளில் வாழ்ந்த மக்கள் வைத்திய சாலைகளை நாடினரில்லை; தேடினரில்லை. வயிற்றுக்காக நாட்டுப் புறங்களிலுள்ளவர் கூட்டங் கூட்டமாக நகரங்களில் கூடுகிறார். ஒரு வீட்டில் முப்பது நாற்பது பேர் வாழ்கிறார். ஒருவர் விடுஞ் சுவாசத்தை மற்றவர் பருகுகிறார். அழுக்குக் கழுவல், கழித்தல் எல்லாம் வீட்டிலேயே. அவ் வழுக்குகளெல்லாம் திரண்டு பூமிக்குள் ஓடுமாறு சாக்கடைகள், வாய்க்கால்களாகக் கட்டப்பட்டிருக்கின்றன. சாக்கடை நீர் தேங்கும் கிணறுகளில், அந்தோ! கடவுளால் படைக்கப்பட்ட மனிதர் மூழ்குகிறார்! கொடுமை! கொடுமை! ஒருவனுக்கு மாடி வீடு; மற்றொருவனுக்குச் சாக்கடைக் குழியா? ஐயோ! நாகரிகமே! பழைய காலத்தை அநாகரிக காலமென்று கூறும் இக்கால ஞானிகளே! சிந்தியுங்கள்!

நாட்டுப்புறங்களை விடுத்து மக்கள் நகரங்களில் போந்து, இயந்திரங்களோடும் தொழிற்சாலைகளில், கூட்டங்கூட்டமாகச் செறிவதால் விளையும் தீமைகள் பல. கிராமங்களில் பயிர்த்தொழில்கள் அழிகின்றன. நகரங்களில் சுகாதாரம் கெடுகிறது. ஆயிரம்பேர் வாழுமிடத்தில் பதினாயிரம்பேர் வாழ்ந்தால் சுகாதாரநிலை கெடுதல் இயல்பே. நகரங்களில் பெரிதும் ஏறக்குறைய எல்லாவித உத்தியோகசாலைகளும் இருக்கின்றன. இவைகளால் நகரத்தில் கூட்டம் பெருகுகிறது. கூட்டத்தால் நோய்கள் பெருகுகின்றன. மலைகளையும் நாடுகளையும் மக்கள் விடுத்து நகரத்தில் போந்து இடர்ப்படுகிறார்கள்.

மலை இடங்களில் வாழ்வது நல்லது. அது விரும்பத்தக்கது. மலையிலிருக்கிறவர்களுக்கு நோய் அணுகாது. அசுத்தக்காற்றும் அசுத்தநீரும் நோய்களை உண்டாக்குவன; வளர்ப்பன; மனிதரைக் கொல்வன. மலையில் அசுத்தக் காற்றும் அசுத்த நீரும் தோன்றுவதற்கு இடமில்லை. மலைக் காற்றுக்கு ஒப்பாகவாதல் உயர்வாகவாதல் பிற காற்றுகளைச் சொல்லுதல் முடியாது. கடற்காற்றை இரண்டாவதாகச் சொல்லலாம். மலையில் வாழ்வோர் அதிகாலையில் சூரியன் உதயமாகும்போது சூரியனது இளங்கதிர்களின் வாயிலாக நுகரும் தூய காற்றின் (உயிர்ப்பு) முன்னே எந்த நோய் நிற்கும்? சூரியனது இளங்கதிரொளியும், தூய காற்றும், ஊற்றுநீரும் அல்லவா மனிதரை வளர்ப்பவை? இம்

மூன்றையும் மலைவாசத்தில் எளிதில் பணங்காசின்றிப் பெறலாம். மருத்துவர்களுக்குப் பணத்தை அள்ளி அள்ளி இறைக்கும் பொருட்செல்வர்களே! மலையில் வாழ விரும்புங்கள்; மலையைச் சுற்றித் திரியுங்கள்; மலை உங்களைக் காக்கும்; உங்களை வளர்க்கும்.

பூமியினின்றும் மலை எழுந்து நிற்றலால், பலவித வளங்கள், மலையில் இயல்பாக அமைந்துகிடக்கின்றன. ஞாயிற்றொளி நன்றாகப் படிகிறது. மலைக்காற்றில் தும்புதூசுகள் இல்லை. ஊற்றுநீரில் கிருமிகள் இரா. இக்காரணங்களால் மலை நிலங்களில் பொருள்கள் விரைவில் அழுகமாட்டா. மற்ற நிலங்களில் ஒரு நாளில் அழுகும் பொருள்கள் மலை நிலங்களில் நீண்டநாள் அழுகாமலிருக்கும். மலைகளிலுள்ள மூலிகைகளையும் உலோகங்களையும் பிறவற்றையும் ஆறுகள் அடித்துக்கொண்டு ஓடுகின்றமையால் அல்லவோ, அவை பெருமைப்படுகின்றன? நாட்டிற்கு இன்றியமையாத ஆறுகளின் பிறப்பிடம் பெரிதும் மலை என்பதை அறியாதார் இல்லை. இவ்வளவு வளமுடைய மலையில் வாழவேண்டுமென்று ஒருவர் கூறுதல் வேண்டுமோ?

பண்டைத் தமிழ்மக்கள் நாளுக்குநாள் குறிஞ்சி விடுத்து மருதம், முல்லை, நெய்தல் ஆகிய நிலங்கள்போந்து வாழ்ந்தாலும், அவர்கள் மலையினிடத்திலும் மலைப்பொருளினிடத்திலும் தொடர்பு வைத்துக்கொண்டிருந்தார்கள். குறிஞ்சியின் உதவியின்றி ஏனைய நிலவாழ்வு நடைபெறுதல் அரிது. மலைபடுபொருட்கு மிக்க ஆவலோடு மற்ற நிலத்தவர் காத்திருப்பர். மேகந் தவழும் மலைகள் இல்லாவிடின் காடேது? நாடேது? நகரமேது? நாடு, நகரம் ஆகிய இவ்விடங்களில் வாழ்வதால் விளையும் இன்பத்தையும், வேறு பலவித இன்பத்தையும் மலைவாசத்தால் பெறலாம்.

நம் முனிவர் பலர் மலைகளைத் தமக்கு உறைவிடமாகக் கொண்டிருந்தனர். இன்றும்-இந்நாளிலும்- சில பெரியோர் மலையில் வாழ்கிறார். பண்டைக் காலத்தில் மலைகளும் காடுகளும் முனிவர் வசத்திலிருந்தன. 'இம்மலை இம்முனிவர் மலை' 'இக்காடு இம்முனிவர் காடு,' என்று வழங்கப்பட்டுவந்தது. இப்பொழுதோ?

மலைத்தொடர்பு மக்கட்கு இருத்தல்வேண்டும் என்ற எண்ணங்கொண்டு நம் பண்டை மூதறிஞர் மலைகளிலும் மலைசார்ந்த இடங்களிலும் கோயில் கட்டினர். இறைவனை

வழிபடும்பொருட்டு, மக்கள் செல்லின், அச் செலவால், மக்கள் மலையில் சிலநாளாவது உறையும்பேறு பெற்றுப் பிணியின்றி வாழ்வார்கள் என்ற கருணையால், அறிஞர் மலைகளிலும், அவைசார்ந்த இடங்களிலும் கோயில் கட்டினர். திருப்பதி, திருக்கழுக்குன்றம் முதலிய க்ஷேத்திரங்கள் நினைவிற்கு வருகின்றன.

நமது நாட்டிலுள்ள மலைகள் எண்ணிறந்தன. மலைகளிலே உயர்ந்த மலை நமது நாட்டில் உள்ளது. நமது நாட்டில் குறுக்காகவும், நெடுக்காகவும், கோணலாகவும், வட்டமாகவும், சதுரமாகவும் மலைகள் வரிசை வரிசையாக நிற்கின்றன. மலைவளஞ் செறிந்த நமது தேசத்தைக் காமதேனு என்று கூறலாம். அத்தகைத் தேசத்தைப் பஞ்சம் பிடித்தாட்டுகிறது!

நகரத்தில் வாழும் மாந்தர்களே! நோயாளிகளே! பிள்ளைப் பேறில்லாது வருந்தும் பேதையர்களே! நீண்ட காலம் வாழ விரும்பும் நேயர்களே! உங்கள் விருப்பம் நிறைவேறப் பணத்தைச் சொரிதல் வேண்டாம்! உங்கள் வீடுகளில் மருந்தைச் சேர்த்தல் வேண்டாம். வைத்தியர்கள் - டாக்டர்கள் - உங்கள் வாயிலை மிதிக்கலாகாது. மலையை நோக்குங்கள்; மலையைச் சுற்றுங்கள்; மலையிலேறுங்கள்; மலையில் வாழுங்கள்; மலையில் இளஞாயிற்றொளி உங்கள்மேல் வீசும்; தும்பு தூசுகள் இல்லாத காற்று உங்களைக் காக்கும்; அருவி நீர் உங்களை வளர்க்கும். மலைகளைப் பற்றிய வருணனை நூல்களை அடிக்கடி ஓதுங்கள்; நம்முடைய வாழ்வு தொடங்கப்பட்ட இடம் மலை என்பதை மறவாதேயுங்கள். மலைவாசத்தால் எல்லா நன்மைகளும் விளையும்.

அருஞ்சொற்பொருள்

எற்றுக்கு - எதற்கு. வேனிற்காலம் - வெயிற்காலம். உலா - உலாவும் நேரம். சொற்றதும் - சொன்னதும். புகன்றது - கூறியது. பழைய உலகில் வாழ்பவர் - பழைய கொள்கையோடு வாழ்பவர். அருகி - குறைந்து. பொறித்தல் - எழுதுதல். முதற் பொருள் - நிலமும், காலமும். தெய்வம், மக்கள், பறவை, உணவு முதலியன கருப்பொருள். ஒழுக்கம் - உரிப்பொருள். வேய்ங்குழல் - புல்லாங்குழல். ஓங்கலாக - உயரமாக. மூலிகை - மருந்துச் செடிகள். நல்குரவு-வறுமை. ஏனம் - பன்றி. சுவாசம்- மூச்சுக்காற்று. ஒப்பாகவாதல் - சமமாகவாவது. உயர்வாகவாதல் - உயர்வாகவாவது. ஞாயிற்று ஒளி - சூரிய ஒளி. மலைபடு பொருள் - மலையில் விளையும் பொருள். காமதேனு - விரும்பிய பொருளைத் தரும் தெய்வப் பசு.

## கேள்விகள்

1. மலைவாசம் இப்பொழுது யாரால், எப்பொழுது கையாளப் படுகிறது ?

2. தமிழ் மக்கள் பிரித்த நிலப் பிரிவுகள் எவை ?

3. மக்கள் மலைபடு பொருள்களைக் கொண்டு எவற்றை அமைத்தனர் ?

4. மலையில் எக் கலைகள் பயிலப்பட்டன ?

5. மலையில் எப் பொருள்கள் இயற்கை வடிவாய்க் காணப் படுகின்றன ?

6. மலையை வறுமை இல்லாத இயற்கை மாளிகை என்று கூறுதல் எவ்வாறு பொருந்தும் ?

7. இக் காலத்தில் எவை வறுமையை வளர்த்துவருகின்றன ?

8. நகரத்தில் கூட்டம் பெருகுவதற்குக் காரணங்கள் எவை ?

9. மலை வாழ்வினால் உண்டாகும் நன்மைகள் எவை ?

10. நம் மூதறிஞர் மலைகளிற் கோயில் கட்டிய நோக்கம் யாது?

## பயிற்சி

1. 'மலைவாசம்' இன்றியமையாதது என்பதை விளக்கி உன் நண்பனுக்கு ஒரு கடிதம் எழுதுக.

2. பொருள் கூறுக: எற்றுக்கு, கருப்பொருள், உரிப் பொருள், ஒங்கலாக, ஞாயிறு, மலைபடு பொருள், காமதேனு, ஏனம், அருகி, சொற்றது.

3. மலையே தன் சிறப்பைக் கூறுவதுபோல இப் பாடத்தை அமைக்கவும்.

4. வாக்கியங்களில் பயன்படுத்துக :— காலத்தின் கோலம், விரும்பியவாறு, இயற்கை வடிவாய், ஒழுங்கு படுத்தி, எவ்வெவ் வழியாக, வயிற்றுக்காக, நாட்டுப் புறங்கள், சுகாதார நிலை, தோன்று வதற்கு, நிறைவேற, இள ஞாயிறு.

# 8. பெண்கள் பந்தாட்டம்

டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார் அவர்கள், M.A., PH.D.

தமிழ்ப் பேராசிரியர், அண்ணமலைப் பல்கலைக்கழகம்.

பந்தாட்டம் என்பது மேனட்டிலிருந்து நம்நாட்டிற்கு வந்தது என்று பலர் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். அது தவறு. மேலும், பந்தாட்டம் ஆடவர்க்கே உரியது என்று சிலர் நினைப்பதுண்டு. அதுவும் தவறு.

இப்படித் தப்பாக நினைத்துவருவதற்கு முக்கிய காரணம், அவருட் பலருக்குப் பழந்தமிழ்ப் புத்தகங்களில் உள்ள செய்திகள் தெரிந்திலாமையே. அதனல், தமிழ்இலக்கியம் சிலவற்றிலிருந்து பெண்டிர் பந்தாட்டத்தைப் பற்றிய செய்திகள் சில இந்தக் கட்டுரையில் எடுத்துக்காட்டப்படும்.

பந்து எப்பொழுதும் இரப்பரினலேயே செய்யப்பட்டது என்று தப்பாக எண்ணிவிடுவதால், நம் நாட்டில் பழங்காலத்திற் பந்து என்பது இல்லை, பந்தாட்டமும் இல்லை என்று தவருக எண்ண இடம் உண்டாகிறது. அந்தக் காலத்தில், பந்தை வேறுவிதமாக உண்டாக்கினர்கள். எப்படி என்ருல், நெட்டியினலும், பஞ்சினலும், பட்டினலும் அவை உண்டாக்கப்பட்டன என்று சொல்லவேண்டும். நெட்டியும், பஞ்சுத்தொகுதியும் எழுப்பினல் மேலே எழும்பும் தன்மை வாய்ந்தவை.

உலண்டு என்று ஒருவகைப் புழு உண்டு. அந்தப் புழுவிலிருந்து ஒருவகையான அழகிய பட்டு எடுக்கப்படும். அந்தப் பட்டுப் பொன்னிறம் உடையது. உலண்டிலிருந்து வந்த பட்டும் எழுப்பினல் எழும்பும் தன்மை வாய்ந்தது. இப்படி எழும்பும் தன்மையையுடைய நெட்டி, பஞ்சு, பட்டு இவற்றினலே அக்காலத்திலே பந்துகள் செய்தார்கள் என்று பெருங்கதை யென்ற புத்தகத்தால் அறிகிறோம். இவற்றைச் சேர்க்கவேண்டிய அளவு சேர்த்து நன்ருகத் திரட்டி, நூலாலும் கயிற்ருலும் நுண்மையாகச் சுற்றித் தைத்து மகளிர் விளையாடினர்களென அறிகிறோம். அப்பந்துகள் வெண்ணிறம், செந்நிறம், கருநிறம் உடையன. காற்று வீசினலும் அவை தாமாக எழுந்து ஆடுகின்ற அளவு நொய்மை வாய்ந்தவை. இந்தக் காலத்திலே உள்ள பிங் பாங் (Ping-Pong) ஆட்டத்திற்கு உரிய செல்லுலாயிட்

(Celluloid) பந்தைவிட அவை மெல்லியனவாய் இருந்தன என்று வைத்துக்கொள்ளலாம். அவை கண்ணைப்பறிக்கும் அழகையுடையன. அந்த அழகு மனத்தைவிட்டு அகலுவதுகூட அருமை. இவ்வளவு சிறப்புடைய பந்துகள் பலவற்றைப் பல்வேறு வகையாக அந்தக் காலத்தினர் செய்தார்கள்.

இவற்றைப் போன்ற பந்துகள் ஐந்து, ஏழு, ஒன்பது என்று அவரவர் திறத்திற்குத் தக, மகளிர் எடுத்துக்கொண்டு தட்டி எழுப்பி அடிப்பது அக்காலத்து வழக்கம். புருவம் வில்போல் வளையும்படியும், மேகலை முதலான அணிகள் மிக்கு ஒலிக்கும்படியும், முன்னும் பின்னும் எல்லாவிடத்திலும் பந்து சென்று உலாவிவரும்படியும் அடிப்பது வழக்கம். பார்த்தால் மேலே போன பந்து கையில் வரவில்லைபோலத் தோன்றும். ஆனல், பந்து மேலும் கீழுமாகப் போய் வந்துகொண்டே யிருக்கும். பந்து எழுந்தும் தாழ்ந்தும் வருகிற வேகத்திலே சிலர் ஒன்றுந் தெரியாமல், இருந்த பந்து இருந்த இடத்திலேயே உள்ளது என்றவாறு நினைத்துவிடுவார்கள். இப்படித் தோன்றும் படியாகப் "பந்தடிப்போம் வாருங்கள்" என்று சொல்லிச் சேரநாட்டு மகளிர் சிலர் பந்தடித்ததாக இளங்கோ அடிகள் கூறினர். அவர் எழுதிய சிலப்பதிகாரப் பாட்டுப் பகுதி மகளிர் பந்தடிக்குங்கால், சொல்லிக்கொண்டு அடிக்கத்தக்க அழகிய ஓசையையுடைய பாட்டாக இருக்கிறது. அதனைக் காண்போம் :-

"துன்னிவந்து கைத்தலத்தி ருந்ததில்லை நீணிலம்
தன்னினின்றும் அந்தரத்தே ழுந்ததில்லை தானெனத்
தென்னன்வாழ்க வாழ்கவென்று சென்றுபந்த டித்துமே
தேவரார மார்பன்வாழ்க என்றுபந்த டித்துமே"

இந்தப் பாட்டைக் 'கந்துக வரி' என்பார்கள். (கந்துகம் என்றல் பந்து. வரி என்றல் பாட்டு.) இப்படிப் பந்தடித்த செய்தியைத் திருத்தக்க தேவர் என்னும் புலவரும் நயம்படத் தெரிவித்துள்ளார். சீவகசிந்தாமணி என்ற காவியத்தில், 'விமலை' என்னும் ஒரு வணிகப் பெண் பந்தடித்த செய்தியைக் குறித்து அவர் எழுதிய இடம் காணத்தக்கது. அந்தப்பெண் ஐந்து பந்துகள் எடுத்துக்கொண்டு விளையாடிய காட்சி அங்குத் தீட்டப்பட்டுள்ளது. அவள் எடுத்து எழுப்பிய பந்துகள் ஒன்றன்பின் ஒன்றய்ப் போய்வருவது மாலை

யைச் சூழும் வண்டுகள்போல இருந்தன. பந்துகளின் நிறம் கருமைபோலும்! அவள் மாலையிலே மறைந்த ஒரு பந்து இப்பொழுது அவள் கையிலே இருக்கிறது. அவள் கூந்தல் வரையுஞ் சென்ற ஒரு பந்து இப்பொழுது மாலையிடத்தே தோன்றுகிறது. மேல் எழுந்த சில பந்துகள் விரலிலே பட்டு மீண்டும் மேலே போகின்றன.

இப்படிப் பந்துகளை எழுப்பி ஆடுகின்ற விமலையின் கண்ணும் புருவமும் பந்துகளோடு சென்றுவருவதுபோலவே இருந்தன. அவள் அடித்த பந்துகளோடு அவள் எட்டுத் திசையும் உலாவினள்; பிறகு, தான் ஒரே இடத்தில் நின்றுகொண்டு பந்துகள் எல்லாம் தன்னைச் சுற்றி வரும்படி அடித்தாள். இப்படி அடித்துக்கொண்டிருக்கும் வேளையில், அவள் கூந்தலில் உள்ள மாலைகள் அசைந்து அசைந்து அவிழ்ந்துவிடும்போல இருந்தன. பந்தடிக்கிற அந் நேரத்தில், சமயம் பார்த்து அந்த மாலைகளையும் திருத்தி அமைத்துக்கொண்டாள். குங்குமப்பொட்டுக்கலைந்ததற்குப் பதிலாக, சமயம்பார்த்துப் பொட்டு ஒன்றும் போட்டுக்கொண்டாள். அவள் ஆடும்போது காதில் உள்ள குழையணி பேரொளியை வீசிற்று; பொன்னேலை மின்னலைப்போலத் துலங்கிற்று; இடையிற் கட்டியிருந்த ஒட்டியாணமும் காலில் அணிந்திருந்த சிலம்பும் ஆர்த்தன. இவ்வண்ணம் பந்தாடினள் விமலை. இவ்வாறு பந்தடித்தல் எளிது என்று நினைக்கக்கூடாது. மென்மையாகத் தட்ட வேண்டிய வேளையிலே சிறிது வன்மைபடத் தட்டிவிட்டால் வந்தது தீமை. அப்படியே சற்று வலிவாகத் தட்டவேண்டிய நேரத்திலே பையத் தட்டினலும், பையத் தட்ட வேண்டிய நேரத்திலே தட்டச் சுணங்கினலும், பந்தடுக்குக் கெட்டு, ஒன்று ஒன்றேடு உராய்ந்து நிலைமை மாறி எல்லாம் வீணாய்ப் போய்விடும். அப்படித்தான் ஆயிற்று ஒருநாள். விமலையினுடைய மாலையைத் தொட்டுவிட்டு மேலே செல்ல வேண்டிய பந்தைச் சற்று அதிகமாக அவள் அடித்து விட்டாள். ஆனதால், அந்தப் பந்து தப்பி வீழ்ந்து எழுந்து பாய்ந்து மாடத்திலிருந்து தெருவிற் குதித்துவிட்டது. இதிலிருந்து, சில பந்துகளை விடாமல் நெடுநேரம் அடித்தால் எவ்வளவு கடினம் என்பது விளங்கும்.

வத்தவ நாட்டு அரசனகிய உதயணனுடைய மனைவியர் இரண்டுபேருங் காணும்படி, அவ் விருவருடைய தோழிமார் போட்டியிட்டுக்கொண்டு ஒருவரை ஒருவர் விஞ்சுவாராய்ப்

பந்தடித்தார்கள் என்ற செய்தியைப்பெருங்கதை தெரிவிக்கிறது. அதனையுங் காண்போம்.

ஒருத்தி ஏழு பந்துகளை எடுத்துக்கொண்டு ஒன்றென்றாக உயர எழுப்பிக் 'கண் இமையாமல் எண்ணுங்கள்' என்று சொல்லி, ஆயிரந்தரம் கையினால் அடித்தாள். இன்னொருத்தி அந்த ஏழு பந்துகளையே ஆயிரத்தைந்நூறு முறை ஒரே மூச்சில் அடித்தாள். அப்படி அடிக்கும் போது, கூந்தலின் மேலே போய் வந்த பந்தைக் குவித்த விரலாலேயே எழுப்பினாள். சில பந்துகளை மேகலைக்கு எதிரே அடித்தாள். இன்னுஞ் சிலவற்றைத் தனது தலைமாலையாலே சார்த்தி யெழுப்பினாள்.

கூனி ஒருத்தி அந்த ஏழு பந்துகளையும் கொண்டு இரண்டாயிரம் முறை அடித்தாள்; அப்பொழுது நான்கு திசையிலும் நான்கு மூலையிலும் காற்றினும் வேகமாக ஓடியாடி அடித்தாள்; பந்துகளைத் தட்டிவிட்டுவிட்டு, இடை நேரத்தில் இரண்டு கையையும் தட்டினாள். தோள் மேலே சில பந்தைப் பாய்ச்சினாள்; கூன்மேலே சிலவற்றைப் புரட்டினாள். பாடிக்கொண்டும் அவிழ்ந்த கூந்தலை முடித்துக்கொண்டும், நெற்றியிலுள்ள பொட்டிடை யேற்றும், பொட்டிலே பட்ட பந்தைப் புறங்கையாலே தட்டி ஏற்றியும் இரண்டாயிரம் முறை அடித்து நிறுத்தினாள்.

கூனி இப்படிச் செய்ததைக் கண்ட குள்ளி யொருத்தி, 'நான் இங்கு இருக்கும் போது கூனி புகழப்படும்படி அடிப்பதா' என்று சொல்லி, சீலையை இறுகக் கட்டிக்கொண்டு, கையிலே பந்தடிக்குங் கோலை எடுத்துக்கொண்டு 2,500 முறை அடித்துவிட்டாள்.

இன்னொருத்தி தான் விட்டெறிந்த பந்தை மூவாயிரந் தரம் அடித்தாள். அடிக்கும் போது அவள் போட்ட நடை நாடகப் பெண்கள் போடுகிற நடையைப் போல இருந்தது. இரண்டு கைகளினாலும் அவள் பந்தை அடித்துக்கொண்டு விண்ணிற்கும் மண்ணிற்குமாகப் பறவையைப் போலப் பறந்ததைப் பார்த்துச் சிலர் மூக்குமேற் கைவைத்தனர். அவள் கைகள் மாத்திரம் வேலை செய்தன என்பது அன்று; அவளுடைய கண்ணும் புருவமும் மனமும் அவள் கையோடும் காலோடும் ஓடின என்றே சொல்ல வேண்டும். மேகலை ஆர்த்தது. கூந்தல் அவிழ்ந்தது. பூமாலையும்

பொன்கலமுஞ் சிதறின. அவள் நில்லாது இன்னும் பந் தடித்துக்கொண்டே இருந்தாள்; அவள் நிற்கிறாளா, பறக் கிறாளா என்று சொல்ல முடியாதவாறு மேலுங் கீழும் போய்வந்தாள்; அவளுக்குத் தோள்கள் இரண்டல்ல, பல என்று சொல்லும்படி அடித்துக்கொண்டிருந்தாள். அப் படிச் சொல்வதைவிட, எங்குப்பார்த்தாலும் அவள் தோளே காணப்படுவதால், அவள் பலதோள் வடிவினள் ஆயினள் என்று கூடச் சொல்லிவிடுதல் நல்லது. அப்படித்தான் சொன்னார் கொங்குவேளும்.

வேறொருத்தி இவர்களையெல்லாம் எள்ளி முன்வந்து நின்றாள்; பந்தாட்ட இலக்கணத்தைப்பற்றி ஒரு சொற் பொழிவு செய்தாள்; உட்கார்ந்துகொண்டு நல்ல பந்தாக இருபத்தொரு பந்துகளைத் தேர்ந்தெடுத்தாள். அவற்றை எழுப்பிப் பைய எழுகின்ற அவள் செய்தொழிலுக்கு ஏற்ப, அவளுடைய கையும் காலும் மெய்யும் இயைந்தன. புருவமும் கண்ணும் பொருந்தின. அவள் அசைந்து அசைந்து பந்தடிக் கிறாள். பரதநாட்டியங் கற்றவர் அவள் அவிநயத்தை வியக் கிறார்கள். அவள் பந்தடிப்பதால் உண்டாகும் ஒலி தாளத் தோடு ஒத்ததாக இருக்கிறது. அதனால், பாடல்வல்ல பெண் டிர் அவள் பாணியைப் பாராட்டுகிறார்கள். அவள் இரண்டு காலையும் 'தம் தம்' என்று பெயர்த்து வைக்கிற திறத்தைப் பார்த்து மத்தளங் கொட்டுவோர் கொண்டாடுகிறார்கள். அவளால் எழுப்பப்படும் பந்துகள் நிலத்திற்கும் விசும்பிற்கு மாகப் போய்வந்த வண்ணம் இருக்கின்றன; சூறைக்காற் றிலே அகப்பட்டுச் சுழலும் இலைகளைப்போல உள. பந்து கள் வந்து வந்து திரும்பிப் போவதையும், ஏறுவதையும், இறங்குவதையும், ஆகாயத்தில் நிற்பனபோல இருப்பதை யும் கொங்குவேள் அழகுபெறத் தீட்டியுள்ளார்.

இவளுக்கும் இரண்டே கைகள்தான். ஆயினும், வளைத்து வளைத்துப் பந்துகளை அடிப்பதை நோக்கினால், பல கைகள் உள்ளவள் போல இவள் காணப்படுகிறாள். தேர்ச்சக்கரத் தைப் போலச் சுழன்று சுழன்று அன்றோ அடிக்கிறாள், நடக்கிறாள், ஓடுகிறாள், துவளுகிறாள்! பந்து எழ எழ, அத னுடன் எழுகிறாள்! இவள் கை எங்கே, கால் எங்கே, மெய் எங்கே, தெரியவில்லையே என்கிறார் சிலர். இவள் மண்ணில் இருக்கிறாளா, விண்ணில் இருக்கிறாளா என்கிறார் சிலர். இது மாயமா, மந்திரமா என்கிறார் சிலர்.

இவர்கள் கண்பட்டது போல, கூந்தல் குலேந்தது; மாலே சுழன்றது; மேகலே கழன்றது; வியர்வை எழுந்தது; சாந்தம் இழிந்தது. அப்பொழுதும் பந்தடித்தலே நிறுத்த வில்லே மானனீகை; ஆடையைத் திருத்திக்கொண்டு அடிக்கிருள்; வியர்வையைத் துடைத்துக்கொண்டு அடிக்கிருள்; கண்ணே மூடிக்கொண்டு அடிக்கிருள்; சக்கரத்தைப் போலச் சுழற்றி விட்டு (twist) அடிக்கிருள்; தோழியோடு பேசிக் கொண்டும், பாடிக்கொண்டும் அடிக்கிருள்; இடசாரி வல சாரியாக ஓட்டி விட்டு (drive) அடிக்கிருள்; வாழ்த்திக் கொண்டு அடிக்கிருள். இப்படி எல்லாம் எண்ணுயிரம் முறை அவளுடைய கையினல் அடித்தாள். எடுத்துக் கொண்ட பந்துகள் இருபத்தொன்று. மொத்தத்தில், இவள் அடித்த முறை எண்ணுயிரம். அடிக்கும் போது, கூத்தும் பாட்டும் தாளமுஞ் சேர்ந்தன. இது வியக்கத்தக்க செய்தி அன்ரே! இப்படிப் பந்தடிக்கிற வழக்கம் அக்காலத்துத் தமிழ் நாட்டில் உண்டு. ஆதலினலே கொங்குவேள் ஆகிய தமிழ்ப் புலவர் " பந்தடி கண்டது " என்று ஒரு தனிப் பகுதி தாமியற்றிய பெருங்கதையிற் புகுத்தினர்.

பெருங்கதை, சீவகசிந்தாமணி, சிலப்பதிகாரம் போன்ற தமிழ்க் காவியங்கள் துணையாகத் தமிழ்நாட்டு மகளிர் பண்டைக் காலத்திற் பந்தாட்டம் போன்ற ஆடல்களே இயற்றி மகிழ்ந்ததையும், மகிழ்வித்ததையும் அறிந்து இன் புறலாம்.

அருஞ்சொற்பொருள்

நொய்ம்மை - மிக்க மென்மை. குழையணி - காதணி. ஆர்த்தன - ஒலித்தன. சுணங்கினுலும் - தவறினுலும். விஞ்சுவார் - வெல்லுவார். பைய - மெதுவாக. இயைந்தன - பொருந்தின. விசும்பு - ஆகாயம். சாந்தம் - சந்தனம் அல்லது சாந்து. இழிந்தது - வழிந்தது.

## கேள்விகள்

1. பண்டைத் தமிழகத்தில் பந்துகள் எவற்ருல் செய்யப் பட்டன ?

2. சேர நாட்டு மகளிர் எவ்வாறு பந்தடித்தார்கள் ?

3. விமலே எவ்வாறு பந்தடித்தாள் ?

4. கூனியின் பந்தாட்டத்தைப் பற்றிப் பெருங்கதை கூறும் செய்தி யாது ?

5. குள்ளியை அடுத்துப் பந்தாடிய ஒருத்தி எங்ஙனம் பந்தடித்து விளையாடினாள் ?

6. மானனீகை ஆடிய பந்தாட்டத்தின் விவரங்களைத் தெளிவாக எழுதுக.

## பயிற்சி

1. 'சேரநாட்டு மகளிரது பந்தாட்டம்' என்பது பற்றிச் சில வரிகள் எழுதுக.

2. இப்பாடத்தை நன்கு படித்து, ஒவ்வொரு பாராவுக்கும் ஏற்ற தலைப்புத் தருக.

3. இப்பாடப் பொருளைச் சுருக்கி ஒன்றரைப் பக்க அளவில் வரைக.

4. வாக்கியங்களில் அமைத்து எழுதுக :— உரியது, தப்பாக, இலக்கியம், உரிய, நுண்மையாக, வன்மைபட, சமயம்பார்த்து, நெடுநேரம், முடியாதவாறு, மேலும் கீழும், சுழன்று சுழன்று, இயற்றி, துணையாக.

5. பிரித்து எழுதுக :— பந்தாட்டம், பழங்காலம், பஞ்சுத்தொகுதி, பொன்னிறம், பெருங்கதை, சிறப்புடைய, காணத்தக்கது. அடித்துக்கொண்டிருக்கும், அணிந்திருந்த, அந்நேரம்.

6. சேர்த்து எழுதுக:— ஆயிரம் + ஐந்நூறு, புறம் + கை, இறுக + கட்டி, மூன்று + ஆயிரம், நாடகம் + பெண்கள், பொன் + கலம், இரண்டு + அல்ல, எங்கு + பார்த்தாலும், அழகுபெற + தீட்டி, இடம் + சாரி, அ + காலம்.

# 9. எனது ஊர்

வித்துவான் பண்டிதர் கா. போ. இரத்தினம் அவர்கள், M.A., B.O.L.

*தமிழ்மறைக்கழகத் தலைவர், கொழும்பு.*

"யாதும் ஊரே, யாவருங் கேளிர்" என்னும் பரந்த கொள்கையைத் தமிழ் மக்கள் போற்றி வாழ்ந்துவருகிறார்கள். என்றாலும் தாம்தாம் பிறந்த குடியையும் ஊரையும் உயரச்செய்வதும் தமது கடமை என்பதை அவர் மறப்பதில்லை. திருவள்ளுவர் குடிசெயல்வகை என்னும் அதிகாரத்தில் இந்தக் கடமையை மிகச் சிறப்பாக எடுத்து விளக்கியுள்ளார்.

"நல்லாண்மை என்ப(து) ஒருவற்குத் தான்பிறந்த
இல்லாண்மை ஆக்கிக் கோளல்" என்பதும்,

"குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்" என்பதும்

வள்ளுவர் வாக்காகும்.

தாயன்பின் சிறப்பினைத் தமிழ்மக்கள் எவ்வாறு உணர்ந்து போற்றிவருகிறார்களோ, அவ்வாறே தாய்மொழியையும் தாம் பிறந்த ஊரையும் போற்றிவருகிறார்கள். பிறந்த ஊர் வானுலகிலும் சிறந்ததெனப் பாரதியார் பாடுகிறார். "பெற்றதாயும் பிறந்தபொன்னாடும் நற்றவ வானினும் நனிசிறந்தனவே," என்னும் அவரது பாடலின் உண்மையை யாவரும் நன்கு அறிவர். குறவஞ்சி, பள்ளு முதலிய பிரபந்தங்களிலே வரும் பாத்திரங்களாகிய குறத்தி, பள்ளி முதலியோர் தத்தம் நாட்டைப் புகழ்ந்து பாடும் பாட்டுக்கள் படிக்கப் படிக்க உணர்ச்சியையும் இன்பத்தையும் ஊட்டும் மந்திர சக்தி உடையன.

'எங்கள் ஊர், 'எங்கள் நாடு' என்று சொல்லும்போது ஒவ்வொருவருடைய உள்ளமும் தாம்தாம் பிறந்த ஊரை நாடிச் சென்றுவிடுகின்றது. காரணம் என்ன? பிறந்த ஊரில் அளவிலாத பற்றும் அபிமானமும் உண்டாவது தான். இவற்றினாலே தூண்டப்பட்டுத்தான் இடைக் காலத்திலே சோழ மண்டல சதகம், பாண்டி மண்டல சதகம் முதலிய நூல்களைப் புலவர் இயற்றித் தத்தம் நாட்டைப் புகழ்ந்தார்.

“ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்”

என்னும் பொய்யில் புலவன் பொருளுரை பிறந்த ஊருக்கும் பொருத்தமானது.

ஓர் ஊரில் உள்ள ஒருவர் சான்றவராக விளங்கினால், அதனால் அவ்வூரவர் யாவருமே மகிழ்ச்சி அடைவார்கள். இவ்விடத்தில் பெரிய புராணத்தில் ஒரு செய்தி நினைவுக்கு வருகிறது. சம்பந்தர் சீகாழியிலே ஞானப் பாலுண்டு தேவாரம் பாடிச் சிவஞானச் செல்வராக விளங்கினார். இந்த அதிஅற்புதச் செயல் தமிழ் நாடெங்கும் காட்டுத் தீப்போற் பரவிற்று. திருநனி பள்ளியிலேதான் சம்பந்தருடைய தாயார் பிறந்தவர். சம்பந்தரின் பெருமை தமக்கே உரியதென எண்ணினார்கள் திருநனிபள்ளியிலுள்ள அந்தணர்கள். இதனால் அத்திருநனிபள்ளியிலுள்ள மறையவர்கள் வந்து சம்பந்தரை உரிமையுடன் தமது திருப்பதிக் கெழுந்தருளும்படி கேட்டார்கள். ஆளுடைய பிள்ளையாரும் அவ்வாறே இசைந்து முதன் முதலாக அங்கேதான் சென்றார். சம்பந்தருடைய தந்தையார் சீகாழியிற் றோன்றியவர். இதனாலே சம்பந்தருடைய தாயார் ஊரும் தகப்பனார் ஊரும் வெவ்வேறாயின.

இவ்வாறு இரண்டூர்களுக்குச் சொந்தமானோர் பலர் இருப்பார்கள். இவ் வினத்தில் யான் சேரவில்லை. எனது சொந்த ஊர் ஒன்றேயாகும். அதன் பெயர் வேலணை. ஈழ நாட்டின் முகமென மிளிரும் யாழ்ப்பாணக் குடாநாட்டை அடுத்துப் பல தீவுகள் உள. இவற்றுள் மிகப் பெரியதும் யாழ்ப்பாணக் குடா நாட்டோடு அணைந்துள்ளதும் ‘லைடன்’ தீவாகும். இந்தத் தீவின் நடுவில் உள்ள ஊரே வேலணை என்பது. லைடன் தீவு என்னும் சொல் இப்போது வழக்கிலில்லை. ஆனாலும் இது ஒல்லாந்தரின் ஆளுகையை நமக்கு நினைவூட்டுகிறது. ஒல்லாந்து நாட்டிலுள்ள ஓர் இடத்தின் பெயரே லைடன் என்பது. அந்தப் பெயரை இத்தீவுக்கு ஒல்லாந்தர்தான் சூட்டினார்கள். இந்தத் தீவின் சிறந்த துறைமுகமாகிய ஊர்காவற்றுறையிலும் ஒல்லாந்தர் ஓர் கோட்டையைக் கட்டியுளர். ‘கம்மன்கில்’ என வழங்கப்படும் இக் கோட்டை இப்பொழுதும் கடலினுள் ஓங்கி நின்று வியத்தகு காட்சி அளிக்கிறது; ஊர்காவற்றுறை முற்காலத்தில் மிகச் சிறந்த துறைமுகமாக விளங்கியது.

ஊர்காவலுக்குரிய துறையாகவும் இலங்கியபடியாலேயே இப் பெயர் பெற்றது; 'கயிற்ஸ்' என இப்பொழுது ஆங்கிலத்தில் வழங்கப்படுகின்றது. லைடன் தீவு முழுதும் வேலணை எனப் பொதுவாகக் கூறப்படும். ஆனால் இக் காலத்தில் கரம்பன், நாரந்தனை, சரவணை முதலிய சிற்றூர்ப் பெயர்களே பெருவழக்கி லுள்ளன.

லைடன் தீவின் நடுவில் வேலணை இருந்தபடியால் வேலணை பல துறைகளில் முதன்மைபெற்று விளங்கிற்று. லைடன் தீவுக்குரிய கிராம நீதிமன்றம் வேலணையிலேயே நடத்தப் பட்டது. தீவுப் பகுதிகள் யாவற்றுக்கும் உரிய மணியக் காரர்கள் வேலணையிலேயே இருந்தார்கள். தீவுப் பகுதி களுக்குப் பொதுவான அரசினர் மத்திய கல்லூரியும் இப் பொழுது வேலணையிலேயே நிறுவப்பட்டுள்ளது.

வேலணை என்னும் பெயரின் காரணத்தை ஒரு புலவர் அழகாக,

"பாரகம் கலக்கிய தாரகன் தன்னைக்
குருகுபெயர்க் குன்றேடு கோன்ற குமரன்
கைவேல் அவன்றன் கையணை இடமாய்
விளங்கிய அதனல் வேலணை என்றே
பார்புகழ் பண்புடைப் பேர்பெற் றேங்கிய
உன்புகழ் உரைத்திட ஒருவரால் ஒண்ணுமோ?"

எனும் பாடலில் விளக்கியுளர்; முருகக் கடவுளுடைய வேலாயுதம் தாரகனைக் கொன்று திரும்பி முருகன் கையினைச் சேர்ந்த இடம் ஆதலின், 'வேல்+அணை' என்று பெயர் பெற்றதென்றார். இஃது புலவரின் கற்பனையோ, புராணக் கதையோ, உண்மைச் செய்தியோ என்பதை முடிவு செய்யும் பணியை ஆராய்ச்சியாளருக்கு விட்டுவிட்டு மேலே செல்வோம். வேலணை புலவர் பாடும் புகழுடையதாய் விளங்கி வருகிறது. "மன்னுயாழ் நகரின் வாள்விழி என்னும் பாலணை வளஞ்சேர் வேலணை," என்பது நாவலியூர் சோமசுந்தரப் புலவர் கூற்று.

"தடமலர்ப் பொழிலுந் தண்புனல் வாவியும்
கடவுளர் கோயிலும் கல்விக் கழகமும்
செல்வர்தம் மனையும் திருமடத் தொகுதியும்
மல்கிப் பொலிவது தொல்லைவே லணையூர்".

எனச் **செவ்வந்தி நாத தேசிகர்** பாடியுளர்.

"சைவத்துக்கும் தமிழுக்கும் இருப்பிடமான வேலணை", என்னும் பண்டிதமணி திரு. சி. கணபதிப் பிள்ளை அவர்களது கூற்று, வேலணையின் சிறப்பை இரத்தினச் சுருக்கமாகக் காட்டுகிறது.

'சைவசிந்தாந்த சாகரம்' என்று போற்றப்பட்டவரும் ஆறுமுக நாவலருடைய மாணாக்கர்களில் ஒருவருமாகிய கந்தப்பிள்ளை என்பவர் சைவமும் தமிழும் இனிதோங்க நாவலருடைய அடிச்சுவட்டைப் பின்பற்றி வேலணையில் ஒரு சைவப்பிரகாச வித்தியாசாலையினை நிறுவினார். கந்தப்பிள்ளையவர்கள் சித்தாந்த நூல்கள் சிலவற்றையும் இயற்றியுளார்; சித்தாந்த சாத்திரத்தைப் பலருக்குக் கற்பித்தும் பெரும்பணி யாற்றியுளர். வேலணையில் இப்பொழுது சைவத்தைத் தவிர வேறு மதத்தைச் சேர்ந்த குடும்பம் ஒன்றுமில்லை. இது மாத்திரமே வேலணையின் சைவப் பற்றை நன்கு காட்டும். வேலணையின் பக்கத்திலுள்ள கிராமங்களாகிய அல்லைப்பட்டி, நாரந்தனை, கரம்பன் முதலியவற்றிலுள்ள மக்கள் பலர் கிறிஸ்தவ சமயத்தைச் சேர்ந்தவர்களாய் இருக்கின்றனர். வேலணையிலும் கிறிஸ்தவ சமயத்தைப் பரப்புதற்கு அமெரிக்க மிஷன் பாதிரிமார் பலவாறு முயன்றனர்; தமிழ்ப்பாடசாலை ஒன்றினைச் சென்ற நூற்றாண்டின் தொடக்கத்தில் அமைத்தனர்; கிறிஸ்தவ தேவாலயத்தையும் கட்டினர்; எனினும், அவர்களுடைய முயற்சி பயனளிக்கவில்லை. இங்கே குறிப்பிட்ட இரு தமிழ்ப்பாடசாலைகளோடு வேறிரு அரசினர் பாடசாலைகளும் சரஸ்வதி வித்தியாசாலை என்னும் சைவ வித்தியாபிவிருத்திச் சங்கப்பாடசாலை ஒன்றும் வேலணையிலுண்டு. கந்தப் பிள்ளை அவர்களைப் பின்பற்றிப் பல மக்கள் சைவானுட்டானம், சிவபூசை முதலியவற்றைத் தவறாது இன்றும் செய்துவருகின்றனர்.

வேலணையிலே சில வருடங்களுக்குமுன் அரசினர் நிறுவிய மத்திய கலாசாலையே முதன்முதல் நிறுவப்பட்ட ஆங்கிலப் பாடசாலையாகும். இது நிறுவப்படுமுன் ஆங்கிலக் கல்வி கற்க விரும்பிய மாணவர்கள் ஊர்காவற்றுறையிலும் யாழ்ப்பாணத்திலுமுள்ள கல்லூரிகளிற் சென்று படிக்கவேண்டியவராயினர்.

இதனாலே பொருளும் பிற வாய்ப்புக்களும் உள்ள சிலரே ஆங்கிலக் கல்வியைக் கற்க வாய்ப்பு ஏற்பட்டது.

இது ஒருவகையில் நன்மையாகவும் முடிந்ததெனலாம். ஏனெனில், பல மாணவர்கள் தமிழுக்கே தம் வாழ்நாளை அர்ப்பணஞ் செய்தனர். இதனால் வேலணையில் பல தமிழ் ஆசிரியர்களும் பண்டிதர்கள், வித்துவான்கள், புலவர்கள் முதலியோரும் தோன்றினர். பரம்பரையாகப் படித்த குடிகளிலே தோன்றிய புலவர்கள் சிலர் இப்பொழுதும் வேலணையில் வாழ்கின்றனர்.

முற்காலத்திலே வேலணையின் பெயரைத் தமிழ் நாட்டிலே பரப்பியவர் **பேரம்பலப் புலவராவர்.** இவருடைய பாடல்கள் சுன்னாகம் குமாரசாமிப் புலவராலும் போற்றப்பட்டன. இலந்தைக்காட்டுச் சித்திவிநாயகர் இரட்டைமணிமாலை, வண்ணைச் சிலேடைவெண்பா, கடம்பரந்தாதி, வேலணைப் பெருங்குளத்து முத்துமாரியம்மை பூஞ்சல் முதலிய நூல்களையும் பல தனிப்பாடல்களையும் இவர் இயற்றியுள்ளார். நிற்க.

வேலணையிலே பல கோயில்கள் உள. இவற்றிலே பெருங்குளத்து முத்துமாரியம்மன் கோயில் மிகப் பழமையானது. சோனகர்களுடைய பள்ளிவாசல் ஒன்றும் இங்கே உண்டு. இங்குள்ள மக்கள் பெரும்பாலும் விவசாயமே செய்கிறார்கள். எனினும், ஒரு சமுதாயத்தின் பூரண வாழ்வுக்கு வேண்டிய பல தொழில்களையும் செய்யும் மக்கட் குழுவினர் யாவரும் இங்கு உளர். இவர்கள், புகையிலையே மிக்க வருவாயினைக் கொடுக்கும் பயிராகையால், புகையிலையினை அதிகமாகப் பயிரிடுகின்றனர். தக்காளிப் பழத்துக்கும் வேலணை பெயர்போனது.

கிழக்கு, மேற்கென இருபிரிவாக வேலணை பிரிக்கப்பட்டுள்ளது. வேலணைச் சந்தியிலிருந்து ஊர்காவற்றுறைக்கும் புங்குடு தீவுக்கும், யாழ்ப்பாணத்துக்கும் மோட்டார் வண்டிகள் செல்கின்றன. வேலணையையும் புங்குடு தீவையும் ஒரு பாலம் இணைக்கிறது. யாழ்ப்பாணத்துக்கும் லைடன் தீவுக்கும் இடையிலும் ஒரு பாலம் உண்டு. இது இன்னும் முழுதும் போடப்படவில்லை. யாழ்ப்பாணத்திலிருந்து வேலணைச் சந்தியின் தூரம் பத்து மைல்தான் இருக்கும். வேலணைச் சந்தியிலிருந்து ஊர்காவற்றுறை ஐந்து மைலுக்குள் உளது. ஊர்காவற்றுறை காரைதீவினை எதிர்நோக்கி இருக்கிறது. பாதையாலும் வள்ளத்தாலும் சில நிமிஷங்களில் காரைதீவை அடையலாம். வேலணைச் சந்தியிலிருந்து

நாலு மைல் தூரத்தில் அராலித்துறை இருக்கிறது. அராலி, வட்டுக் கோட்டை முதலிய இடங்களுக்குப் போகிறவர்கள் மாத்திரமே இத்துறையினைக் கடப்பர்.

வேலணையிலே பேசுந்தந்தி இணைப்புடைய ஒரு உப தபாற் கந்தோரும் அரசினர் மருந்துச்சாலையும் இருக்கின்றன. அரசினர் மத்திய கல்லூரிக்கு வேண்டிய புதுக் கட்டிடங்கள் பல லட்ச ரூபா செலவிலே கட்டப்படுகின்றன. இவை கட்டப்பட்டவுடன் அங்கு ஆயிரக்கணக்கான மாணவர்கள் படிப்பதற்கு வாய்ப்பு ஏற்படும்; கல்வி பெருகும். வேலணையும் இன்னும் நன்கு சிறப்புற்றோங்கும்.

அருஞ்சொற்பொருள்

கேளிர் - சுற்றத்தார். "நல்லாண்மை ............கொல்" — ஒருவனுக்கு நல்ல ஆண்மை என்று உயர்த்துச் சொல்லப்படுவது, தான் பிறந்த குடியினை ஆளுந் தன்மையைத் தனக்கு உரியதாக்கிக் கொள்ளுதல். "குடி செய்வல்.........துறும்" — 'என் குடியினை உயரச் செய்யக் கடவேன்' என்று கொண்டு அதற்கேற்ற செயல்களில் முயலும் ஒருவனுக்குத் தெய்வம் ஆடையைத் தற்றுக்கொண்டு தான் முந்துற்று நிற்கும். நற்றவம்= நல் + தவம். நனி - மிகவும், உரிச்சொல். குறவஞ்சி - குறத்தியைப் பற்றிய பிரபந்தம். பள்ளு - பள்ளன், பள்ளியரைப் பற்றிய நாடகப் பிரபந்த வகை. சதகம் - நூறு செய்யுட்களையுடைய பிரபந்த வகை. பொழுதில் - பொழுதில் மகிழ்ந்ததைவிட. உவக்கும் - மகிழ்ச்சியடைவாள். சான்றோன் - கல்வி கேள்வி ஒழுக்கங்களிற் சிறந்தவன். பொருளுரை - பொருள் சிறப்பினையுடைய கூற்று. அந்தணர் - இங்குப் பிராமணர் என்பது பொருள். ஆளுடைய பிள்ளையார் - சம்பந்தர். ஒல்லாந்தர் - ஹாலண்டு நாட்டவர். குருகுபெயர்க் குன்று - கிரவுஞ்ச மலை. வை - கூரிய. பார் - உலகம், உலகத்தவர். ஒண்ணுமோ - முடியுமோ. பொழில் - சோலை. தண் - குளிர்ந்த. புனல் - நீர். மல்கி - பெருகி. சாகரம் - கடல். வள்ளம் - சிறுதோணி.

## கேள்விகள்

1. தமிழர் தமது எக்கடமையை மறப்பதில்லை?

2. திருவள்ளுவர் 'குடிசெயல் வகை' என்னும் அதிகாரத்தில் எந்தக் கடமையை, எப்படி வற்புறுத்துகிறார்?

3. குறவஞ்சி, பள்ளு-இவை கூறப்பெற்ற சந்தர்ப்பம் யாது?

4. எந்தப் பொருளுரை, பிறந்த ஊருக்கும் பொருத்தமானது?

5. 'வேலணை' எங்குள்ளது? அதன் பெயர்க் காரணம் யாது?

6. வேலணையைப் பாடிய புலவர்கள் யார் யார்? அவர்கள் கூறியுள்ள செய்தி யாது?

7. வேலணையில் உள்ள கட்டிடங்கள் எவை?

8. வேலணையில் வாழ்பவர் யாவர்? அவர்கள் தொழில்கள் யாவை?

TB
031(9)
N52

## பயிற்சி

1. நான் பிறந்த ஊர் அல்லது நாடு என்பது பற்றி ஆசிரியர் கூறியுள்ள கருத்துக்களை 20 வரிகளில் எழுதுக.

2. வேலணை என்னும் ஊரைப்பற்றி இரண்டு பக்க அளவில் ஒரு கட்டுரை வரைக.

3. சுன்னாகம் குமாரசாமிப்புலவர், ஆறுமுக நாவலர், பாரதியார்—இவர்களைப் பற்றிச் சிறு குறிப்பு வரைக.

4. வாக்கியங்களில் அமைத்து எழுதுக:—ஆண்மை, கேளிர், அபிமானம், உவக்கும், சான்றோன், இசைந்து, ஒல்லாந்தர், வியத்தகு, நிறுவப்பட்டு, அர்ப்பணம், பரம்பரையாக, பள்ளிவாசல் சந்நிதி, இணைப்பு, மலர்ப்பொழில், தண்புனல், மல்கி, வாய்ப்பு.

5. பிரித்து எழுதுக:—சிறப்பாக, இல்லாண்மை, ஒருவற்கு, குறவஞ்சி, தாயன்பு, தத்தம், அளவிலாத, இடைக்காலம், பெரிதுவக்கும், எனக்கேட்ட, நாடெங்கும், காட்டுத்தீ, அவ்வூர், ஊரவர், இரண்டூர்கள், காவற்றுறை, சிற்றூர், பெருவழக்கு, தீவுப்பகுதி.

6. சேர்த்துக் கூறுக:—மடம்+தொகுதி, மல்கி+பொலிவது, கல்வி+கழகம், இரத்தினம்+சுருக்கம், இனிது+ஓங்க, அடி+சுவடு, பெருமை+பணி, நூறு+ஆண்டு, பயன்+அளிக்க.

86826

RTR/665